# காவேரி



8 அணா

விஜய - ஆனி

JUNE 1953

# அழகின் ஆதாரம் உங்கள் சருமம் தான்





## உங்கள் வதனத்திற்கு பாதுகாப்பும் அழகும் அளியுங்கள்

வெய்யில், புழுதி, வெப்பம், குளிர், ஈரம், மழை இவைகளிலிருந்து உங்கள் சருமத்தைக் காப்பாற்றிக்கொள்ளுங்கள். நமது மிதமிஞ்சிய சீதோஷ்ண நிலைகளுக்கு ஏற்றதாயிருப்பதற்கென்றே ஹிமாலயா புக்கெஸ்னே தயாரிக்கப் பட்டுள்ளது. இதை தினமும் உபயோகித்து உங்கள் சருமத்தை மிருதுவாகவும், மென்மையாகவும், தெளிவாகவும் இருக்கச்செய்யுங்கள். பௌடர் பூசிக்கொள்வதற்குமுன் இதை தடவிக் கொள்ள மிகவும் பிரியப்படுவீர்கள். இதன் நறுமணத்தையும் விரும்புவீர்கள்.






# ஹிமாலயா புக்கெ ஸ்னே

இன்னுமொரு நேர்த்தியான இராஸ்மிக் தயாரிப்பு

HBS, 8-X52 TM

இராஸ்மிக் கம், லிட்., லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தது.

# இப்பொழுது! மக்ளீன்ஸ் க்ளோரோபில் சேர்ந்த

## மற்றொரு உயர்தரப் பற்பசையைத் தருகின்றனர்!



உலகிலேயே மிகச் சிறப்பாகப் பற்களை வெளுக்கும் பற்பசையுடன் இயற்கைவழங்கும் துர்க்கந்த நாசினி சேர்ந்ததுதான் இப்புதிய உன்னத பற்பசை—மக்ளீன்ஸ் பெராக்ஸைட். க்ளோரோபில் சேர்ந்த பற்பசையாகும்

இதில் உண்மையில் புதிய அம்சங்களிருக்கின்றன. மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையுடன் க்ளோரோபில் சேர்ந்திருக்கிறது. அசல் பற்பசையிலடங்கிய, கால சோதனையில் நிரூபணமான எந்தப் பொருளும் இதில் நீக்கப்படவில்லை—அதே விசேஷத் திட்டத்தின்படி உருவானதுதான்—ஆனால் க்ளோரோபில் சேர்க்கப்பட்டது. ஆகவே க்ளோரோபில் பற்களை சுத்தம் செய்யாது. ஸ்வாசத்தை சுத்தமாக்குகிறது. ஆகவே க்ளோரோபில்லின் பயனை அனுபவிக்கும்போதே பற்களும் தூவெண்மையுடன் பிரகாசிக்கவேண்டியது எவ்வளவு அவசியம்! மக்ளீன்ஸ் பெராக்ஸைட்—க்ளோரோபில் சேர்ந்த—பற்பசை உபயோகிப்பதுதான் அதற்கு நிச்சயமான வழி.




## க்ளோரோபில் சேர்ந்த மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை

— பற்களை அதிக வெண்மையாக்குகிறது
— ஸ்வாசத்தை மணம்பெறச்செய்கிறது

மக்ளீன்ஸ் உபயோகிப்போர் கவனிக்கவும்:— அசல் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையும் வழக்கம்போல எங்கும் கிடைக்கும்.

வியாபார விவரங்களுக்கு

ஜே. எல். மாரிஸன் ஸன் & ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட்.
தபால் பெட்டி 6527, பம்பாய் 26. தபால் பெட்டி 387, கல்கத்தா,
தபால் பெட்டி 1370, சென்னை

CMI • 1• TAM

# நாகபுரியில் புதிய ஆஸ்பத்திரி

நாகபுரி வைத்தியக் கல்லூரியின் புதிய ஆஸ்பத்திரி ஆசியாவிலேயே மிகப் பெரிதென்று கருதப்படுகிறது. பிணியால் வருந்துபவருக்கு ஆறுதல் அளிக்க சகல வசதிகளும், நவீன முறையில் பொருந்திய ஸ்தாபனம். இந்தியாவிற்கு இது போன்ற ஆஸ்பத்திரிகள் மேலும் தேவை. அவற்றை அமைக்கும் பணியில் என்றும் பயன்படுவது ஏ. ஸி. ஸி. (A. C. C.) ஸிமென்ட்.

ஆஸ்பத்திரி சம்ரக்ஷணை



கைதேர்ந்த ரணச்சிகிச்சை






**தி அஸோஸியேடட் ஸிமெண்டு கம்பெனீஸ் லிட்**

இவர்களின் வியாபார மானேஜர்கள்

**தி ஸிமெண்டு மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிட்.**

SISTA'S CMI · 109

# பொருள் அடக்கம்

விஜய மலர் 12 ‖ ‖ ஆனி இதழ் 11


டில்லித் தபால் ... ... ... ... 5
கே. ஸ்ரீநிவாஸன்

உரிமை ... ... ... ... ... 8
கே. வி. கே.

விழிப்பு ... ... ... ... ... 16
எஸ். ஸந்தானம்

விஞ்ஞானத் துணுக்குக்கள் ... ... ... 22
நா. கி. நாகரராசன்

ஏகலைவன் ... ... ... ... 25
மாயாவி

லக்ஷ்ய புருஷன் (தொடர்கதை) ... ... ... 35
கே. சுந்தரம்மாள்

ஆடும் நடராஜர் ... ... ... ... 44
ஸரோஜா ஸ்ரீநிவாஸன்

மாடிஸன் வாழ்க்கை ... ... ... ... 53
சி. வி. ராமகிருஷ்ணன்

இந்துமதி ... ... ... ... 60
குகப்ரியை

முருகன் அருள் ... ... ... ... 65
என். சுப்பிரமணியம்

நீரோட்டம் (தொடர்கதை) ... ... ... 70
தி. சேஷாத்திரி



குறிப்பு:
'காவேரி'யில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்களும் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்ல.



பருவங்களுடனும் பகல் - இரவின் குறிப்பிட்ட நாழிகைகளுடனும் இசைந்து வருவது இந்திய ராகங்களின் தனிச் சிறப்பு. ஒவ்வொரு ராகமும் அந்தந்த வேளையின் ரஸம் அல்லது பாவத்தை வெளியிடும் சாதனமாகும்.

தினசரி இரவிலும் பகலிலும் அந்தந்த நாழிகைக்கு ஏற்ப ராகங்கள் உருவகப்படுத்தப்படுகின்றன. அகாலத்தில் பாடும் ராகங்களுக்கு ஜீவன் போய்விடுமாம்.

# தேனீர்

இரவு பகல் எந்த வேளையிலும், எந்த நிலையிலும் தேனீர் உற்சாகம் அளிக்கிறது.

# கேதாரம்

மேலே காணும் படம், மாலை வேளைக்குரியதும், பிரிந்த காதலனை ஒரு ஆண் துறவியின் வேடத்தில் உருவகப்படுத்தும் இன்னிசையான 'கேதார' ராகத்தை காட்டுகிறது. அவள், ராத்திரியில் சந்திரன் கூட கேட்க விரும்பி காத்திருக்கும் இரங்கத்தக்க பாடல்களை அள்ளிக்கொட்டுகிறாள். தெவிட்டாத காதலின் மனநிலையையும் காட்டுகிறது.

ஸென்ட்ரல் 'டீ' போர்டாரால் வெளியிடப்பட்டது

CTB

# காவேரி


| | | |
|---|---|---|
| விஜய ஞு மலர் 12 | "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார் | ஆனி இதழ் 11 |


## டில்லித் தபால்

**கே. ஸ்ரீநிவாஸன்**

டில்லியில் எப்பொழுதுமே பேசுவதற்கு ஏதாவது விஷயம் இருந்து கொண்டேயிருக்கும். சென்ற மாதத்தில் எவரஸ்ட் சிகரம், லண்டனில் நடந்த முடி சூட்டு வைபவம், லண்டனில் இருக்கும் பிரதம மந்திரி நேருவுக்குப் பதில் யார்? என்பதைப் பற்றிய சர்ச்சை முதலியவை வெறும் வாயை மெல்பவனுக்கு அகப்பட்ட அவல் போல் வந்தன.

கடைசியில், மனிதனுடைய பிடியில் அகப்படாதது என்று பெருமைக்கிடமாக இருந்த எவரஸ்ட் சிகரத்தை விடாப்பிடியாக ஏறி அடைந்து விட்டார்கள். இந்தப் பெருமையை இந்தியாவுக்குத் தந்த ஸ்ரீடென்ஸிங்குக்கு நம் வந்தனம். இதில் ஒரு விசேஷம் என்னவென்றால் ஸ்ரீடென்ஸிங் ஒரு நேபாளி என்று நம்பி நம் மகாமேதாவி மந்திரி ஆஜாத் நேபாள சர்க்காருக்கு மகிழ்ச்சிச் செய்தி அனுப்பியதுதான். டென்ஸிங் என்னும் "தான் சிங்" நேபாளத்தில் பிறந்தவர் என்றாலும் சிறுவயதிலேயே இந்தியாவுக்கு வந்து குடியேறியவர். இந்தியக் குடியானவர்.

எவரஸ்ட் சிகரத்தை அடைவது பற்றிய முயற்சியில் ஒவ்வொரு புதுக் கோஷ்டியும் சென்ற தடவை முயற்சித்த கோஷ்டியின் அனுபவத்தைப் பயன் படுத்திக் கொண்டதாலேயே சிகரத்தைப் பிரிட்டிஷ் கோஷ்டி அடைவது சாத்தியமாயிற்று. சிகரம் 29,002 அடி உயரம்தான். அதை அடையாதவரை அது உயர்ந்து கொண்டே போகிறது என்றுகூடச் சொன்னார்கள். ஆனால் சென்ற சில வருஷங்களில் நடந்த முயற்சியின் பயனுகச் சிகரத்தை எந்த மாதங்களில் அடையப் பிரயத்தனம் செய்யலாம், எந்தத் திக்கிலிருந்து அதை அடைவது சுலபம், அதற்கு என்ன விசேஷ சாதனங்கள் தேவை முதலிய விஷயங்கள் தெளிவாயின.

குறிப்பாக, சென்ற வருஷம் ஸ்ரீ எரிக்ஹிப்டன் தலைமையில் நடந்த முயற்சியால் எவரஸ்டை அடைவது ஏப்ரல்-மே மாதங்களில் தான் சாத்யம் என்பது தெளிவாயிற்று. பிறகு ஸ்விட்ஸர்லாந்திலிருந்து வந்த கோஷ்டியார் 28,000 அடி வரை சென்று அதற்கு மேல் எப்படி எப்பொழுதுமே பனியுடன் கலந்த காற்றுப் பலமாகச் சிகரத்தில் வீசுகிறது, எப்படி மிகவும் புதிதாக விழும் உறைபனி ஏறுவதை மிகவும் கடினமாக்குகிறது என்பதைக் கண்டு பிடித்தார்கள்.

ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக உதவிய விஷயதானம் கேவலம் சுமை தூக்கிகளான ஷெர்பா எனப்படும் போர்ட்டர்கள். இவர்கள் சுதாவாகவே மலைப்பிராந்தியத்தவர்கள் என்பதுடன், மலையில் வசித்து வந்து வந்த அனுபவத்தால் வெள்ளையர்கள் சாதாரணமாக நடக்கமுடியாமல் தவித்த உயர்ந்த இடங்களில்கூட இவர்கள் தலைச்சுமையுடன் சுலபமாக நடந்து சென்றிருக்கிறார்கள். இதில் மலைப்பிராந்திய அனுபவத்தையும் சுதாவாக உள்ள பகுத்தறிவையும் பயன் படுத்திக்கொண்டு, "என்று இருந்தாலும் எவரஸ்டை அடைவேன்" என்று மார் தட்டியவர் வீரர் டென்ஸிங்.

டென்ஸிங்கைச் சென்ற ஸ்விஸ் கோஷ்டி பிரயத்தனம் செய்யும் வரை யாரும் கோஷ்டி அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ள வில்லை. ஸ்விஸ் கோஷ்டித் தலைவரான லாம்பர்ட் சமர்த்தர். டென்ஸிங்கை முழு அந்தஸ்து [illegible]ளு மெம்பராகச் சேர்த்துக்கொண்டு அவருக்கு [illegible] ஷூ உடை முதலியன கொடுத்

தார். 28,000 அடிக்குமேல் அவர் உதவி அனுகூலமாக இருக்கும் என்று அவர் தீர்மானித்தார். ஆனதாலேயே, சென்ற தடவை நடந்த முயற்சியில் டென்ஸிங் 28,000 அடிக்குமேல் கூட விசேஷ பிராணவாயு கருவி இல்லாமல் நடந்து காண்பித்து, அனுமதித்தால் தாம் தனியாகப் பிராண வாயுக் கருவியுடன் சிகரத்தை அடைந்து திரும்புவதாகவும் லாம்பர்ட்டிடம் சொன்னார். அந் தறுவாயில் கோஷ்டியிலுள்ள எந்த ஸ்விஸ் மெம்பரும் ஒரு அங்குலம்கூட நகர முடியாது அசக்தர்களாக இருந்ததால் லாம்பர்ட் டென்ஸிங்கை உயரே செல்ல அனுமதிக்கவில்லை. கருவியும் கொடுக்கவில்லை. காரணம் டென்ஸிங் எவரெஸ்டை அடைந்தால் பெருமை டென்ஸிங்குக்கு மாத்திரம் தானே என்று எண்ணினார் லாம்பர்ட்.

இந்தச் சம்பவம் இதுவரை வெளியாகவில்லை. காரணம் இதுபற்றிப் பிரஸ்தாபிக்கக் கூடாது என்று லாம்பர்ட் எவரெஸ்ட் வீரரிடம் வாக்குறுதி வாங்கியிருந்தார். ஆனால் இந்தத் தடவை கர்னல் ஹன்ட் தலைமையில் சென்ற கோஷ்டியினர் முதலில் டென்ஸிங் (கேவலம் ஒரு இந்தியன்) ஒரு மெம்பர் ஆவதா என்று எண்ணினாலும், முயற்சி தொடங்கிய பிறகு கர்னல் ஹன்ட் டென்ஸிங்கிடம் அவசியம் ஆனால் அவர் தனியாகக்கூட எவரஸ்டை அடையலாம் என்று சொல்லியிருந்தாராம். இப்பொழுது இங்குக் கிடைக்கும் தகவல்களிலிருந்து புலனாவது என்னவென்றால், டென்ஸிங்தான் முதலில் சிகரத்தை அடைந்தார். பிறகு கீழே வந்து நியுஜீலந்து தேசத்தவரான ஸ்ரீ ஹில்லாரியை உயரே அழைத்துச் சென்றார்.

எவரஸ்டை அடைவது எப்படிச் சாத்தியமாயிற்று? ஹிமாலயத்தின் தெற்கிலிருந்து அதை அடைய முயற்சி செய்ததால்தான். இதற்குக் காரணம் நேபாள சர்க்கார் கொடுத்த அனுமதி. நேபாள சர்க்காருக்கு இதற்குக் கிடைத்த பிரதி நன்றி கோஷ்டி எவரஸ்டை அடைந்த செய்தியைப் பிரிட்டிஷ் ராஜ தூதர் நேபாள மன்னருக்குக் கூடத் தெரிவிக்கவில்லை.

எவரஸ்ட் சிகரத்திற்கு யார் பெயர் கொடுத்தார்கள்? ஹிமாலயப் பிரதேசத்தை ஸர்வே செய்த கோஷ்டித் தலைவர். இங்கும் அயோக்கியத்தனம்! எவரஸ்ட் புராணங்களில் வழங்கி வந்த கௌரிசங்கர் சிகரமே. ஸர்வே கோஷ்டியில் இருந்த ஒரு கட்வாலி இதைக்கண்டு பிடித்தார். கோஷ்டித் தலைவரான வெள்ளையர் ஒரு மிஸ்டர் எவரஸ்ட். அவர் பெயரைப் பிரிட்டிஷ் சர்க்கார் சிகரத்திற்கு வைத்தார்கள். இப்பொழுது எவரஸ்டின் பெயரை எலிஜபெத் என்று மாற்ற வேண்டுமாம்! ஏனென்றால் ராணியார்தானே சிகரத்தை அடைந்தது! ஒரு பெரிய அமெரிக்கப் பிரமுகர்சொன்னதுபோல் எவரஸ்டின் பெயரை மறுபடியும் கௌரி சங்கர் என்றே மாற்ற வேண்டும்.

டென்ஸிங் இந்தியாவுக்குப் புகழைச் சம்பாதித்துக்கொடுத்திருக்கிறார். இப்பொழுது அவர் டார்ஜிலிங்கில் மேற்கு வங்காள சர்க்காரில் ஒரு சிறிய ஊழியர். மிகவும் ஏழ்மையான ஜீவனம். மேற்கு வங்காள சர்க்கார் ஒரு இந்தியரான டென்ஸிங் சாதனையைக் குறித்து மௌலான சாயபு நேபாள சர்க்காருக்குச் செய்தி அனுப்பினாரே என்று பொருமினார்கள். டென்ஸிங் இந்தியன் என்பதற்கு ஆதாரங்கள் அனுப்பி, தாங்கள் ஒரு பண முடிப்புக் கொடுக்கப்போவதாகவும் சொல்லியிருக்கிறார்கள். டென்ஸிங் இந்தியாவின் ஒரு வோட்டர்.

கடைசியில் இந்திய சர்க்காரும் தங்கள் பிழையை நிவர்த்தி செய்யப்போகிறார்கள். டென்ஸிங்கிற்கு மகாவீரசக்கரத்திற்குச் சமானமான பரிசு ஜனாதிபதி அளிக்கப்போகிறார். டென்ஸிங்கை ஒவ்வொரு பட்டணமும் வரவேற்று மரியாதை செய்யவேண்டும். இந்தியாவின் பெயரை ஒரேயடியாக உலகெல்லாம் தூக்கிவிட்ட வீரர் வாழ்க! அவர் கீர்த்தி வாழ்க!

* * *

அரசியல் அரங்கத்தில் நடக்கும் குட்டை குழப்பங்கள் எல்லாம் வெளியானால் எந்தத் தலைவருக்கும் மரியாதை இருக்காது. இந்த உண்மையை இப்பொழுது நடக்கும் ஆச்சாரிய கிருபளானி தேர்தல் படலத்திலிருந்து தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. பார்லிமெண்டுக்கு நடக்கவிருக்கும் இத்தேர்தல் பீஹாரில் உள்ள பகல்பூர் தொகுதியிலிருந்து நடக்கும். இது இரு மெம்பர் தொகுதி இரு ஸ்தானங்களுக்கும் காங்கிரஸும், பிரஜா ஸோஷலிஸ்ட் கக்ஷியினரும் அபேக்ஷகர்களை நிறுத்தியிருந்தனர். தொகுதி பெரி[illegible]ப்பத்தில் பிரதமர் நேருவுக்கும் ஸ்ரீ ஜயப்பிரகாசருக்கும் நடந்த நல்லுறவுவார்த்தைகளை ஆதாரமாகக்கொண்டு ஸ்ரீமதி கிரு

பளானி காங்கிரஸ் பார்லிமெண்ட் போர்டு தலைவரான மௌலானா ஆஜாத்துக்குத் தம் கணவர் 'தாதா' கிருபளானிக்குச் சகாயமாக காங்கிரஸ் அபேக்ஷகரைத் தம் நியமனத்தை வாபஸ் வாங்கச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார். இது விஷயம் ஸ்ரீநேருவுக்குத் தெரிந்ததும் அவர் பொதுத் தொகுதி அபேக்ஷகரை வாபஸ் வாங்கச் சொன்னார். அப்பொழுது ஸ்ரீமதி கிருபளானி ஆச்சாரியார் தேர்தலில் ஈடுபடத் தேவையில்லை என்று எண்ணியிருக்க வேண்டும். ஆனால் இப்பொழுதுதான் விஷயம் தெளிவாகிறது. எப்படியும் ஆச்சார்ய கிருபளானி தேர்தலில் ஈடுபடவேண்டும். ஏனென்றால் ரிஸர்வ் தொகுதியில் காங்கிரஸ் அபேக்ஷகர் இருப்பதுடன் மற்றச் சுயேச்சைக்காரர்களும் இருக்கிறார்கள். உண்மையில் ஆச்சாரியாருக்கு எதிராக நின்ற காங்கிரஸ்காரர் பேரளவிலாவது தேர்தல் அரங்கத்தில் இருந்திருந்தால் வோட்டுக்கள் பிரிந்து ஆச்சாரியாருக்கு ஒரு "சான்ஸ்" இருந்திருக்கும். நிலைமை மோசம் என்றவுடன் காங்கிரஸ்காரர்கள் தமக்கு விரோதமாகச் சதி செய்ததாக அலறுகிறார்.

பிரஜா-ஸோஷலிஸ்ட்கக்ஷி மகாநாடு சமீபத்தில் மத்தியப் பிரதேசத்தில் கூட இருக்கிறது. அப்பொழுது ஸ்ரீமதி கிருபளானி எப்படித் தம் கணவருக்காகக் காங்கிரஸிடம் ஸ்தானப் பிச்சை கேட்டார் என்பதுபற்றிய சர்ச்சை காரசாரமாக நடக்கும் என்று சொல்லப்படுகிறது.

* * *

சாதாரணமாக எழக்கூடாத ஒரு அனாவசிய விவாதம் டில்லியில் நடந்துகொண்டிருக்கிறது. இதில் சட்டப் புலிகளும் உலக வியவகார அரசியல் பண்டிதர்களும் கலந்துகொண்டிருப்பதால் அதைப்பற்றி எழுதக் கூடப் பயமாக இருக்கிறது. ஆனால் அறிஞர்கள் குழம்பும்பொழுது நம் போன்ற சிறியவர்கள் தானே நுழையவேண்டியிருக்கிறது.

நம் பிரதமர் நேரு வெளிநாடுகளுக்குப் போகும்பொழுது யார் பிரதமர்? இதற்கு அரசியல் சாஸன மூலம் வழி ஒன்றும் இல்லை. சாஸனப் பிரகாரம் ஒரு உதவி பிரதமருக்கு இடம் இருக்கிறது. அவர் பிரதமருக்குப் பதில் வேலை பார்க்கலாம், மந்திரி சபைக் கூட்டங்களுக்குத் தலைமை வகிக்கலாம். ஆனால் சர்தார் படேலுக்குப் பிறகு யாரும் உதவிப் பிரதமராகவில்லை.

சமீபத்தில் நேருஜி லண்டன் சென்றார் அல்லவா? அவருக்குப் பதில் யார் என்ற கேள்வியை ஒரு பத்திரிகைக்காரர் கேட்டு வைத்தார். இதற்குப் பதில் மற்றொருவர் சொன்னார்: "ஒருவரும் இல்லை; ஒரு அரசியல் சூன்யம் ஏற்பட்டுவிட்டது". சூன்யம் என்ற வார்த்தையைக் கேட்டதும் மௌலானா ஆஜாதுக்கு ஆத்திரம் வந்தது. 'ஆஹா, சூன்யமா? யார் சொன்னது? நான் இருக்கிறேன் பிரதமருக்குப் பதில் வேலைபார்க்க' என்று அறிக்கை விடுத்தார். பிரதமருடைய அதிகாரங்களை வகிக்கவேண்டும் என்றால் அவர் ஜனாதிபதியால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டிருக்கவேண்டும். அப்படி இல்லையேல் பழக்கத்திலோ சம்பிரதாயம் மூலமோதான் பிரதமர் இல்லாமல் இருக்கும்பொழுது யார் அவர் ஸ்தானத்தை வகிப்பது என்பது அனுஷ்டானத்திற்கு வர வேண்டும். இதற்கு அரசியல் சாஸன ஆதாரம் இருக்காது. ஆகவே ஆஜாது பிரதமருக்குப் பதில் ஸ்தானம் வகித்திருந்தால் கூட அதைப்பிறபாடு சொல்லியிருக்கலாம். தாம் அக்ஷதை போட்டுக்கொண்டு முன் வந்ததுதான் இப்பொழுது மிச்சம். ஏனென்றால் லண்டனில் நேரு ஒரு பேட்டியில் சொன்னார்: "எனக்கு எல்லாம் பிதற்றலாகத்தோன்றுகிறது. இப்பொழுதும் நான் பிரதமர் என்ற ஹோதாவில்தானே இங்கு இருக்கிறேன்!"

* * *

டில்லிக்குப் பக்கத்தில்தான் தார் பாலைவனம் இருக்கிறது என்பது டில்லிவாசிகளுக்குக் கோடையில் ஞாபகம் வரும். கோடையில் (அதாவது மே-ஜூன் மாதங்களில்) பகலில் எதைத்தொட்டாலும் கொதிக்கும். தெருவில் கொல்லன்பட்டறையைப்போல் தகிக்கும். சென்னையில் கடற்காற்று உஷ்ணத்தைச் சமனப்படுத்துகிறது. இங்கு என்ன தெரியுமா? உஷ்ணம் 110 டிகிரிவரை வந்து விட்டால் கடுமையான மண்மாரி பெய்யும். உஷ்ணக் காற்றை அப்புறப்படுத்தக் கராச்சியிலிருந்து கடற்காற்று உள்ளே நுழையும்.(இயற்கைக்கு இருதேசப் பிரிவினையைப்பற்றித் தெரியாது! அந்தக் காற்று தார் பாலைவனத்தின் வழியாக வரும்பொழுது அங்குள்ள மண்ணை அளவில்லாமல் புரட்டி எடுத்துக்கொண்டு வந்து டில்லியில் பொழியும். வீட்டில் என்னவோ கத்துவார்கள். "வீட்டைப் பெருக்கி நம்மால் மாளாது" என்று. ஆனால் உஷ்ணக் காற்று அடித்த உடனே சில டிகிரிகள் குறையும். இப்படியே விட்டு வைத்தால் பாலைவனம் டில்லிக்கு வந்து விடாதா? வரலாம் இன்னும் 50/100 வருஷங்களில், ஆனால் அதைப்பற்றி நமக்கென்ன கவலை, நாம [illegible] இருக்கமாட்டோமே!




# உரிமை

'கே.வி.கே.'

இரு புறங்களிலும் சுவர் வைத்ததுபோல் கவிந்து நின்ற விருக்ஷங்களின் மத்தியில் ஓடிய அக்காட்டுப் பாதையில் சென்று கொண்டிருந்தான் அவன். அந்தி மங்கி விட்ட அந்நேரத்தில் நிர்மானுஷ்யமான அவ்விடத்தில் புதர்களினின்றும் எழுந்த சுவர்க் கோழிகளின் ரீங்காரத்தைத் தவிர வேறெந்த ஒலியுமில்லை. மாயை மூடிக் கொள்வதைப்போல் சூழ்ந்து வந்த இருளில் அவன் நிற்காமல் தான் நடந்து சென்றான்.

நின்றால் மட்டும் இருள் விலகி விடுமா? அல்லது பாதைதான் பளிச்சென்று புலனாகி விடுமா? எதுதான் வாழ்வில் புலனாகிறது! மலைத்து நின்றால் கூட உலகம் ஓடிக் கொண்டு தானே போகிறது! நிற்பவனைக் கையைப் பிடித்து அழைத்துச் செல்கிறதா; அல்லது ஒதுங்கி ஒய்வு எடுத்துக்கொண்டு வருமளவும் காத்து நிற்கிறதா! எந்த உரிமையும் அற்றுத் தானே உலகின் பின்னே ஓடிக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது—துரிதமாகத் தூக்கிச் செல்லப்படும் சவத்தின் பின் ஓடும் உறவினரைப் போல!

உரிமை! நம்மீதே நமக்கு உரிமை உண்டா என்பதே விளங்காத போது, உலகத்தில் எதன் மீது தான் உரிமை கொள்ள முடிகிறது! நம் உரிமைப் படியா எல்லாம் நடக்கிறது...!

அம்மா இருந்த வரை ஓயாமல் புலம்புவாள். "தியாகு! ஏண்டா இப்படி இருக்கே...! உன்னைப் பெற்று வளர்த்ததற்கு இந்த உரிமையாவது எனக்கு வேண்டாமா...!"

"என்னை என்னம்மா செய்யச் சொல்கிறாய்..."

அவள் முகத்தில் உரிமையின் உணர்ச்சி பொங்கும் அப்போது.

"காலா காலத்தில் நீ கல்யாணம் பண்ணிக் கொண்டால் தானே குடும்பத்துக்கு நல்லது...! எனக்கிருக்கிற வியாதியிலே நான் ரொம்ப நாள் இருக்கப் போகிறேனா...! சாந்தாவைக் கவனித்துக் கொள்ள வீட்டுக்கு ஒரு ஸ்திரீ வேண்டாமா...!"

தாயின் இந்த உரிமைக்கு அவன் படிய முடிந்ததா! தன் சொந்த உரிமைக்குப் போராடிக் கொண்டிருந்த அவன் மனதிற்கு அவள் உரிமையுடன் பார்த்து வைத்திருந்த 'வரன்' எப்படிச் சம்மதமாய் இருக்கும்!

வருமானம் அற்ற நிலையில் விவாகம் வேண்டாம் என்று தட்டிக் கழித்துக் கொண்டிருந்தான், அவள் உரிமைக்கு இடமின்றி.

அம்மா அவள் உரிமையைப் பற்றித்தான் கூறினாளோ தவிர அவன் உரிமையை எங்கே கவனித்தாள். தனக்கு மனைவியாக வரப் போகிறவளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை தன்னுடையதாகத் தான் இருக்க வேண்டும் என்று அவன் கருதியதில் தவறில்லையே! அந்த உரிமையுடனேயே தானே அவன் தேர்ந்தெடுத்தும் வைத்திருந்தான் தன் துணையை! அதற்குமேல் அம்மாவின் உரிமை எங்கே செல்லப் போகிறது!

ஆயினும் அவனால் தன் உரிமையை நிலை நாட்ட முடிந்ததா! தான் தேர்ந்தெடுத்தவளைப்

பற்றி அம்மாவிடம் கூட எனோ பிரஸ்தாபிக்கா மல் தானே இருந்து விட்டான்.

சாந்தா இதைப் பற்றிக் கேட்ட போது கூட அவனால் மழுப்பத்தானே முடிந்தது.

''அண்ணா! அம்மா இவ்வளவு தூரம் சொல் றாளே, கல்யாணம் தான் பண்ணிக் கொள் ளேன்...!''

பால் போன்ற தங்கையின் முகத்தைப் பார்த்த அவன் ஒன்றும் பதில் கூறவில்லை.

''ஏன் அண்ணா! அம்மா சொல்ற வரன் உனக்குப் பிடிக்க வில்லையா...!''

அவள் கண்களில் தோன்றிய குறு குறுப்பும், பரிகாசமும் அவனைச் சிரிக்கத்தான் வைத்தன.

''அண்ணா! நிச்சயமா சொல்லு...! நீ வேறே யாரையோ தானே பார்த்து வைச்சிருக்கே...!''

அவள் கேள்வி அவனைச் சற்று வியப்புறச் செய்தது. தலையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டான்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை, சாந்தா...! நீ போய் பாடம் படி...!''

அவள் அவனைக் கூர்ந்து நோக்கினாள்.

''என்னிடம் மறைக்காதே, அண்ணா! என் மன்னி யார் என்பதைத் தெரிஞ்சுக்கக் கூட எனக்கு உரிமையில்லையா...!அவள் உனக்கு ஏற்றவளா என்பதை நான் பார்க்கவேண் டாமா!''

இவளும் தன் உரிமையைத் தானே பேசு கிறாள்! ஒவ்வொருவருடைய உரிமைக்கும் இங்கு இடமிருக்கிறதா...!

''அண்ணா! நீ கல்யாணம் பண்ணிக்கொண் டால் எனக்கு ஒரு சவரன் வாங்கிப் பரிசளிக்க வேண்டும்...!''

இது கூட அவள் உரிமைதானா!

மைபோல் கவிந்திருந்த இருளில் சென்று கொண்டிருந்தவன் சற்று நின்றான். சாலையின் ஓரத்திலிருந்த கற்பாறை அவன் களைப்புற் றிருந்ததை நினைவுறுத்தியது. அயர்ந்து அதில் அமர்ந்தான். கையிலிருந்த பையைப் பக்கத்தில் வைத்தவாறே அதுதானே அவனிடம் எஞ்சி நின்ற ஆஸ்தி!

'ஆஸ்தி' அவனையும் மீறிச் சிரிப்பொலி கிளம் பியது. அப்பா சொன்ன வார்த்தை யல் லவா அது!

''டேய்! தியாகு, உனக்கு இங்கேயே வேலை பார்த்து வைத்திருக்கிறேன். சீக்கிரத்தில் பரீட் சையில் தேறி இந்த உத்தியோகத்தில் சேர்! உனக்காக நான் வைக்கும் ஆஸ்தி இதுதான்...! ஆமாம்...!''

அவன் மனம் அதை ஒத்துக் கொண்டதா...! அப்பா நினைக்கிறபடி அது ஓர் 'ஆஸ்தி'தானா...! இருபது ரூபாய் சம்பளமும் கிராம வாசமும் தானே அது!

''என்னடா யோஜனை! நான் சொல்கிறபடி கேள், குறியா இந்த வேலையை ஒத்துக்கொண்டு குடும்பத்தைக் கவனித்துக் கொள்! உன்னைப் படிக்கவைத்து முன்னுக்குக் கொண்டு வந்த தற்கு இந்த உரிமை எனக்குண்டு...!''

உரிமை! அவன் பதிலே பேசவில்லை. பட்டண வாழ்க்கை, இலக்கியப் பணி, லளிதகலைத் தேர்ச்சி இவைகளெல்லாம்தான் அவன் சொந்த உரிமைகளாகத் தோன்றின. இதெல்லாம் அப் பாவுக்கு எங்கே தெரியப்போகிறது. சொன்னால் தான் கேட்கப்போகிறாரா! அவருடைய உரிமை தானே அவருக்குப் பெரிதாக இருந்தது.

எப்படியோ நாட்கள் ஓடிக்கொண்டு சென்றன. வியாதியே பிறப்புரிமையாகக் கொண்டிருந்த அம்மா இறந்துவிட்டபோதுகூட அவன் தன் வரைக்கும் அப்படியேதானே இருந்தான். அம்மா அவனிடம்கொண்ட உரிமையை நிறைவேற்ற முடியாமலே போய்விட்டாள். சாந்தா பருவ மடைந்து விவாகத்திற்குக் காத்துக்கொண்டிருந்த போது அவனால் உரிமையுடன் அவளுக்குக் கண வன் தேட முடிந்ததா? அப்பாதான் அவனுக்குக் கடும் உத்தரவு போட்டுவிட்டாரே! அவர் உரிமை எப்போது அவன் விஷயத்தில் செல்ல வில்லையோ அப்போதே அவன் அன்னியன் ஆகிவிட்டான்! குடும்ப விஷயத்தில் அவனுக்கு எந்த உரிமையும் கிடையாது......! இடமு மில்லை!

சற்றே புறப்பட்ட பிறைச் சந்திரனின் மெல் லிய கிரணங்கள் இலைகளினூடே புகுந்து அவன் அமர்ந்திருந்த பாறையின் மீது விழுந்தன. அதையே வெறித்து நோக்கிய அவன் மனம் சற்று, கொதிப்படங்கிச் சிந்தனையில் அமைதி தோன்றியது.

அன்றும் இப்படித்தானே இருந்தது. ஆனால் பூரண நிலவு காய்ந்துகொண்டிருந்ததில் அந்தச் சிவன்கோவில் பிராகாரம் அப்போது பளிங்கு போல் காட்சியளிக்கவில்லையா. வில்வ மரத்தடி யில் முழங்கால்களைக் கட்டிக்கொண்டபடி ஒய் யாரமாக மரத்தில் சாய்ந்து அமர்ந்து கொண் டிருந்தாள்—அவன் உரிமையுடன் தேர்ந்தெடுத் திருந்த பவானி. அவள் அருகே நெருங்கி உட்

கார்ந்து நிலவொளியில் பூரித்துக் கொண்டிருந்த அவள் கண்களையே உற்று நோக்கிக் கொண்டிருந் தான் அவன்.

அவள் ஏதேதோ கூறிக் கொண்டிருந்தாள். வாழ்வும் உரிமையும் அவள் உள்ளத்தில் பரி பூரணமாய் நிறைந்திருந்தன.

"தியாகு! பட்டணம் போகப் போகிறாயா...!"

"ஹூம்...!"

"எப்போ திரும்புவே...!"

"நல்ல உத்தியோகமும் பணமும் சாம்பாதித் துக் கொண்ட பிறகு...!"

கொஞ்சம் மௌனம்.

"அது வரைக்கும் என்னை மறக்காமே இருப் பாயா, தியாகு!"

அவன் சில நிமிஷம் பேசவில்லை. எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான்.

"ஏன், தியாகு! இதை எதிர்பார்க்க எனக்கு உரிமையில்லையா...?"

அவனுக்குச் சிரிப்புத் தான் வந்தது. உரிமை! எல்லோரும் அவரவர் உரிமையைத் தானே கூறு கின்றனர். அவனுக்கென்று ஏதாவது உரிமை இருக்கிறதா...!

கடைசியில் அவன் அவளைக் கேட்டான்.

'பவானி! நான் வரும் வரை உன்னால் காத் திருக்க முடியுமா...?"



அவள் வெகு நேரம் பதில் கூறவில்லை. நீண்ட பெருமூச்சுடன் அவள் கடைசியில் கூறிய விடையும் சுவையற்றுத் தானே இருந்தது.

"அப்பா என் கல்யாணத்தைச் சீக்கிரம் நடத்திவிடத் துடிக்கிறார். பணமும் பதவியும் நிறைந்த வரன் இன்னும் கிடைக்கவில்லை அவருக்கு...!"

"அப்படி கிடைத்தால் நீ என்ன செய்வதாய் எண்ணம், பவானி...?"

"என் எண்ணத்தில் என்ன இருக்கிறது? அப்பாவுக்கு வரன் கிடைப்பதற்குள் நீ பட்டணத்தில் நல்ல உத்தியோகத்தில் அமர்ந்து இங்கு வந்து என்னை......!"

அவள் வாக்கியத்தை முடிக்கவில்லை. தன் நம்பிக்கையிலேயே தனக்கு உரிமை இருந்ததாகத் தோன்றவில்லை அவளுக்கு.

சிந்தனையில் மூழ்கி விட்டிருந்த அவன் நீண்ட பெருமூச்சுடன் கேட்டான்.

"அப்படி நான் வருவதற்குள் வரன் நிச்சயமாகிவிட்டால்......"

அவள் சிரசை வேறுபக்கம் திருப்பிக்கொண்டாள்.

"என்றால் என்ன பண்ணமுடியும் தியாகு? அப்பா-அம்மாவை மீறிப் போக முடியுமா...? அவர்கள் பெற்று வளர்த்த உரிமை என்னுவது......?"

அவன் என்னவோ அப்போது சிரித்தான். ஆனால் அவனுள் ஏதோ ஒன்றுஅழுதது. இந்தப் பாழும் 'உரிமை', தானும் வாழாமல் பிறரையும் வாழவிடாது போலல்லவா இருக்கிறது!

அரைச் சந்திரன் ஏறக்குறைய உச்சிக்கு வந்து அவனைத் தட்டி எழுப்பியது. பாறையை விட்டு எழுந்தவன் துவண்ட நடையுடன் புறப்பட்டான்.

பட்டணத்திற்குச் சென்று இரண்டாண்டு கழித்து அவன் திரும்பி வந்தபோது இப்படியா நடந்துவந்தான்! சிறகடித்துப் பறந்துகொண்டிருந்த இதயத்தைக் கையில் பற்றியபடியே, வேகத்தினால் உந்தப்பட்டு ஓடி வரவில்லையா! அவன் உரிமையுடன் தேடிச் சென்ற அமர வாழ்வும், ஐச்வரியமும் கிட்டாவிடினும், பவானியை உரிமை கொள்ளும் அளவுக்கு உத்தியோகமும், பணமும் அடைந்துதானே ஓடோடியும் வந்தான்.

ஊர்க்கோடியில் நின்ற அதே சிவன்கோவில் அவன் எண்ணங்களைப் புதுப்பித்துத் தரவில்லையா. உரிமையோடு பலகாலம் அவனுக்கும் அவளுக்கும் ஏகாந்தத்தை அளித்த அவ்விடத்தை நன்றியுடன் பார்த்தபோதுதானே எதிர்பாராத விதமாய் அவன் கண்களில் அவள் பட்டாள். வில்வ தளம் கொய்ய வந்திருந்த அவளை உற்று நோக்கிய அவன் அப்படியே சிலையாகி விட்டான். சுடர் ஜோதியாய் விளங்கிய அவள் தன் கரங்களிலும் கால்களிலும் இட்டியிருந்த புதிய மருதாணி இலை நலங்கு அவளை நித்ய கல்யாணியாகவே தோற்றுவித்தது.

தலை நிமிர்ந்து அவனைப் பார்த்தவள் ஏனோ தன் உரிமையுடன் அவனை வரவேற்கவில்லையே! அகல விரிந்த கண்களுடன் ஒருகணம் அவனை வெறித்துப் பார்த்தவள் மறுகணம் பேயினால் துரத்தப்பட்டவளைப் போல் பாய்ந்து ஓடிவிடவில்லையா!

சஞ்சல முற்ற மனத்துடனேயே வீட்டை நோக்கி நடந்தான். உரிமைக்காரியே தன்னைக் கண்டு ஓடும் போது, உரிமையற்றவன் என்று தன்னை ஒதுக்கித் தள்ளிய தந்தை எவ்விதம் வரவேற்பு அளிப்பார் என்ற ஐயத்துடனேயே அவன் வீட்டை அடையவில்லையா...!

ஆனால் எதுதான் அவன் எண்ணியபடி இருந்தது. வீட்டின்முன் போடப்பட்டிருந்த பந்தலும், அதில் கட்டப் பட்டிருந்த வாழை மரமும் அவனைத் திகைக்க வைத்தன. தான் வருவதை யறிந்தே அப்பா கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்திருக்கிறாரா...!

வீட்டினுள் நுழைந்தவனின் கண்களில் முதலில் தென்பட்டவர் அப்பாதான். சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டு பத்திரிகையைப் பார்த்துக் கொண்டிருந்தார். சரிகை வேட்டியும் சந்தனமும் அவர் மன உற்சாகத்தைத் தோற்றுவித்தன.

"அப்பா...!"

பத்திரிகையைக் கீழே வைத்து விட்டுத் திரும்பினார். அவர் முகம் மூடிய பெட்டியைப் போல் தான் இருந்தது. சற்று நேரம் வெறித்துப் பார்த்த அவர் 'வா' என்று கூட அவனை அழைக்கவில்லை. இரண்டு வருஷங்களுக்கு முன் அவர் கூறிய வார்த்தைகள் இன்னும் அப்படியே அவன் மனதில் இருந்தன.

குடும்ப விஷயத்தில் அவனுக்கு எந்த உரிமையும் கிடையாது...! இடமுமில்லை...!

ஒருவாறு துணிந்து அவனே பேசினான்.

'கல்யாணம் நடக்கப் போகிறதா, அப்பா...?'

'ஆமாம்...! நாளைக்கு...!'

'யாருக்கு...?'

'ஏன்...? எனக்குத்தான்...?'

அவன் சற்று அசந்து நின்றுவிட்டான்.

'உங்களுக்கா...?'

'ஆமாண்டா...! வீட்டுக்கு ஒரு பொம்மனாட்டி இல்லாமல் எப்படி முடியும்...!'

அவன் கொஞ்ச நேரம் பேசவில்லை. பிறகு, 'பெண் எந்த ஊர், அப்பா......?'

'எல்லாம் இந்த ஊர்தான்...! முத்துசாமியின் பெண்...!'

அவன் துள்ளி நிமிர்ந்தான்.

'யாரு...? பவானியா...!'

அவன் குரல் மாறுதலைக்கண்டு அவர் அவனை உற்றுநோக்கினர்.

'ஆமாம்...! அவளுக்கென்னடா குறை...?'

அந்த நிலையிலும் அவனுக்குச் சிரிக்க வேண்டும் போல் இருந்தது.

'அவளுக்குக் குறையொன்றுமில்லையப்பா,...! உங்களுக்கு...!'

'எனக்கென்னடா...! பணமும் கௌரவமும் சேர்ந்த இந்தமாதிரி இடம் அவளுக்குக் கிடைக் கக் கூடியதா!'

அதற்குமேல் அவனால் பேசமுடியவில்லை. அவனுள் எரிந்துகொண்டிருந்த கனல் அணைந்துவிடவில்லையா.

மெல்லத்திரும்பி வெளியே வரும்போதுகூட அப்பா அவனை நிறுத்தவில்லை. வெளிக்கதவை நெருங்கியவன் சற்றுத் தயங்கி நின்று ஒரே கேள்வியைக் கேட்டான்,

'சாந்தாவின் கல்யாணம்...அப்பா...?'

'எல்லாம் எனக்குத் தெரியும்...அவளுக்கு இப்போ அவசரமில்லை...!'

அவன் வெளியே வந்துவிட்டான். அவனுக்குத்தான் அக் குடும்ப விஷயத்தில் உரிமை கிடையாதே.

விசையுடன் கிராமத்தின் கோடியை அடைந்தவன் அக் குரலைக் கேட்டுப் பதைத்து நின்றான்!

'அண்ணா!'

தலையைத் திருப்பிப் பார்த்தான். ஆற்றிலிருந்து நீர் எடுத்துப் போய்க்கொண்டிருந்த சாந்தா அவனைத் தூரத்திலிருந்து பார்த்துவிட்டாள். தன் தோழிகளிடம் குடத்தைக் கொடுத்துவிட்டு ஆவலுடன் அவனை நோக்கி வேகமாய் வந்தவளைப் பார்த்து நின்ற அவன் நெஞ்சில் ஏதோ ஒன்று அழுத்தியது.

சற்று இளைத்து வாடி இருந்தாள் அவள். அவளிடம் அவன் பேசுவதா...! அவனுக்குத்தான் உரிமையே கிடையாதே...! இடமும் இல்லையே...! அவளுடன் பேசிவிட்டால் பிறகு அந்த இடத்தை விட்டு அவனால் போக முடியுமா...! போகாமல் அங்குத் தங்கத்தான் முடியுமா...! உரிமை பறிக்கப்பட்ட அவன் ஏன் உறவைத் தேடி அலையவேண்டும்! அத்துடன் மனத்தையும் அலையவிட வேண்டும்.

நீர்த் திரையிட்ட கண்களோடு திரும்பி, விருக்ஷங்கள் கவிழ்ந்த சாலையினுள் புகுந்து விசையுடன் சென்றான். தொலைவிலிருந்து மறுமுறை வந்த 'அண்ணா' என்ற தீனக்குரல் அவன் இருதயத்தைப் பிய்த்துக்கொண்டு வந்தபோதும் அவன் நிற்காமல் நடந்தான்—நடந்து கொண்டே இருந்தான்.

காற்றில்லாமல் அடைபட்டது போலிருந்த அச்சாலையில் இப்போது சில்லெனக் குளிர்ந்த காற்றுவீசி, இரவின் பிற்பகுதியை அறிவித்தது. தோளில் போட்டிருந்த துணியை எடுத்து உடலைப் போர்த்தியவாறே நடந்தான்.

சிந்தா தரங்கத்தில் மோதிக் கொண்டிருந்தவன் சிந்தை கலைந்து நின்றபோதுதான், தன் பக்கத்தில் வேறொருவன் நிற்பதை உணர்ந்தான்.

இருளோடு இருளாய்க் கலந்து நின்ற பருத்த கரிய மேனி, அடர்த்தியான மீசை, கையில் ஆள் உயரமுள்ள தடி, இடுப்பில் சாயவேஷ்டி. இந்தத் தோற்றத்துடன் விளங்கினான் அவன், தீப்பந்தம் போன்ற அவன் கண்களின் தீட்சண்யம் ஒரு கணம் நெஞ்சை உலுக்கியது.

சற்று நேரம் ஸ்தம்பித்து விட்டவன் ஒருவாறு சமாளித்தவாறே அவனை உற்று நோக்கினான். அந்தப் பிராந்தியத்தில் பிரசித்திபெற்ற கொள்ளைக்காரனின் கையில் தான் அகப்பட்டுக் கொண்டிருப்பதை உணர அவனுக்கு வெகு நேரம் ஆகவில்லை.

'என்னப்பா! ரொம்ப துணிச்சலாக இந்த வேளையில் தனியாக இந்த வழியில் போகிறாயே! நானிருப்பது தெரியாதா...!'

'தெரியாமலென்ன...! ஆனால் அதெல்லாம் யோசனை செய்ய அவகாசம் இல்லை...!'

கள்வன் அவனை உற்று நோக்கினான்.

'அப்படிப்பட்ட அவசர வேலையாக எங்கே போகிறாய்?'

இக்கேள்விக்கு அவனால் எப்படிப் பதில் கூற முடியும்? அவன் எங்கே போகிறான் என்பது அவனுக்கே தெரிந்தால்தானே!

மௌனமாக நின்றவன் திரும்பி நடக்க் ஆரம்பித்தபோது அவன் கையைப் பற்றி நிறுத்தினான் திருடன்.

"நில்லப்பா, கொஞ்சம்...நான் கேட்பதற்குப் பதில் சொல்லாமலே போகிறாயே...! கையில் என்ன வைத்திருக்கிறாய்...?"

அவன் பதிலுக்குக் காத்திருக்காமலே அவன் பையைப் பிடுங்கி அதை ஆராய்ந்தான். ஒரு பழைய துணியும், காகிதப் பொட்டணம் ஒன்றும் தவிர அதில் வேறெதுவுமில்லை. பொட்டணத்தை அவிழ்த்துக் கள்வன் அதிலிருந்த தின்பண்டத்தைப் பார்த்துச் சற்று ஏமாற்றம் அடைந்தாலும், அதில் கொஞ்சம் எடுத்து வாயில் போட்டுக் கொண்டான். பிறகு தொடர்ந்து அதைப் புசித்தவாறே பேசத் தொடங்கினான்.

'இதோ பாரப்பா நான் திருடவந்தால் வெறுங் கையோடு வீட்டுக்குப் போகமாட்டேன். ஏதாவது கொண்டுபோய்த்தான் ஆகவேண்டும்!. அது என் உரிமை......? ஆகையால் உன்னிடம் என்ன இருக்கிறது......அதை எடு......!'

கள்வனின் வார்த்தை அவனை வறட்சியுடன் சிரிக்கவைத்தது. இவன்கூட அல்லவா உரிமையைப்பற்றிப் பேசுகிறான்!

'என்னிடம் வேறொன்றுமில்லையப்பா! எனக்கு உரிமை என்று சொல்லக் கூடியது எதுவுமில்லை......!'

அவன் குரலில் தோன்றிய தழுதழுப்பு கள்வனின் தோரணையைச் சற்று மாற்றியது. உற்று நோக்கிய வண்ணமிருந்த அவன் தன் கையிலிருந்த தின்பண்டத்தில் கொஞ்சம் எடுத்து இவனிடம் கொடுத்தபடியே கூறினான்.

'நீ ஒரு தினுசான பேர்வழியாக இருக்கிறாயே, அப்பா! பயம்கூடத் தெரியவில்லையே உனக்கு...! அது சரி! அதோ ஜோபியில் என்ன வைத்திருக்கிறாய்......! அதை எடு......!'

சற்றுத் தயங்கிய அவன் அதை எடுத்துக் கொடுத்தான். வெள்ளிச் சட்டத்தில் அடைபட்டுக் கிடந்த அப் படத்தினால் திருடனுக்கு என்ன உபயோகம்...!

அதை ஒரு விநாடி உற்று நோக்கினான் கள்வன்.

'இது யாரப்பா இந்தப் பெண்......?'

சற்றுத் தாமதித்தே அவன் பதிலளித்தான்.

'என் சித்தி'

'உன்...சித்தியா...! இதையேன் நீ வைத்துக் கொண்டிருக்கிறாய்...?'

ஆம், அவன் ஏன் அதை வைத்துக் கொண்டிருக்க வேண்டும்.

ஏதோ பதில் கூறினான்.

'அவளை நான் காதலித்தபோது......!'

'அட, மஹாபாபி! சித்தியையா......!'

'அப்போது அவள் என் சித்தியில்லை...!'

"ஓ" என்ற கள்வன் அவனை ஏற இறங்கப் பார்த்தான்.

'இதையேன் இன்னும் வைத்திருக்கிறாய்?'

'என்னமோ...! அதன்மேல் எனக்கு உரிமை இருக்கிறது என்று எண்ணிக் கொண்டிருந்தேன்...!'

திருடன் ஏனோ சிரித்தான்.

'உனக்கு ஏதப்பா இனி உரிமை! இந்த வெள்ளிச் சட்டத்தைக் கடையில் போட்டாலாவது இரண்டு பணம் கிடைக்கும்! வெறுங் கையுடன் போக வேண்டுமே என்று நினைத்ததற்கு இதுவாவது கிடைத்ததே!'

இம்முறை இவன் சிரித்தான்.

'எனக்கு உரிமையில்லை என்று கூறிவிட்டு உரிமையுடன் நீ அதை எடுத்துப் போகிறாயே அப்பா! அதனுள் இருக்கும் படத்தையாவது எடுத்துக் கொடுத்துவிட்டுப் போயேன்...!'

கள்வன் ஏளனமாக அவனை நோக்கினான்.

'திருடுவது எனக்குப் பிறப்புரிமை, தம்பி! ஆனால் உரிமையின்றி இதை நீ வைத்திருப்பது திருட்டுத்தான்!'

உள்ளிருந்த படத்தை அலட்சியமாக எடுத்துக் கிழித்தெறிந்து விட்டு, வெள்ளிச் சட்டத்தை மட்டும் மடியில் செருகிக் கொண்டு மரங்களுக்கு மத்தியில் நுழைந்து சென்று விட்டான் அக் கொள்ளைக்காரன்.

அவன் சென்ற திசையையே வெறித்து நோக்கிய இவன் காதுகளில் அவனுடைய வார்த்தைகள் ஒலித்துக் கொண்டே இருந்தன.

இக் கொள்ளைக்காரனுக்கும் தன் தந்தைக்கும் என்ன வித்தியாசம்! அவரும இந்த நியாயத்தில் தான் நம்பிக்கை வைத்திருந்தாரா! இவன் இந்த வெற்றுச் சட்டத்தை எடுத்துப் போவதைப் போலத்தானே அவரும் அவள் வெற்றுடலை மணம் புரிகிறார்...! இதில் இவர்களுடைய உரிமை நிறைவேறி விடுகிறதா...!

சூரியோதயம் ஆகும்வரை அவன் நடந்து கொண்டே சென்றான்.

# புத்தக விமர்சனம்

## ஸப்தரிஷி நாடி

(1)-மேஷலக்னம்-முதல் பாகம் 904 பக்கங்கள், விலை, ரூ. 20. (2)-விருஷப லக்னம்-இரண்டாம் பாகம் 1447-பக்கம் விலை, ரூ. 30.

ஜோஸ்ய சாஸ்திரத்தில் தமிழில் ஸப்தரிஷி நாடி பிரசித்திப் பெற்றது. இந்நூல் 12-பாகங்கள் கொண்டது. ஒவ்வொரு பாகமும் ஒரு லக்னத்தைப் பற்றிக் கூறுகிறது. சென்னை ஜார்ஜ் டவுனில் வசிக்கும் ஸ்ரீமான் கிருஷ்ணஸ்வாமிப் பிள்ளையிடமிருந்து இந்த ஓலைச் சுவடியைச் சென்னை ஓரியண்டல் மானஸ்கரிப்ட் லைப்ரரியார் வாங்கினர். இப்பொழுது சென்னைக் கவர்ன்மெண்டார் அதனை அச்சிட்டு மக்கள் பயன்பெற உதவியுள்ளார்கள்.

இந்த ஸப்தரிஷிநாடி ஒவ்வொரு லக்னத்தில் திகையக்கூடிய பல ஜாதகங்களை எடுத்து, தமிழ்ப் பாட்டு ரூபமாகப் பலன் சொல்லியுள்ளது. ஸப்தரிஷிகளுக்கும் பார்வதிக்கும் சம்பாஷணை எனக் கற்பித்துக்கொண்டு பலன் சொல்லப்பட்டிருக்கிறது. வருடந்தோறும் ஒரு பாகத்தையாவது பிரசுரிக்க இயலும் என்று திட்டமிட்டிருக்கிறார்கள்.

முதல்பாகம் மேஷராசியைப் பொறுத்தது. மேஷலக்னமுள்ள 78-ஜாதகங்களுக்கு இங்குப் பலன் சொல்லப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஜாதகத்தையும் நன்கு அலசி, பலாபலன்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஜாதகனுடைய பூர்வீகம், தற்கால நிலை, எதிர்காலம், தன்மை, அவனுடைய வாழ்க்கைத்தரம் எல்லாம் நன்கு சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. தோஷபரிகாரங்களும் ஆங்காங்கே குறிக்கப்பட்டுள்ளன. ரேகா சாஸ்திரமும் இதில் கலக்கப்பட்டுள்ளது. இந்த இந்த ஜாதகனுக்கு இப்படி கைரேகை அமைதல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பிரபொஸர் K. நடேசன் அவர்கள் இதைக் கண்காணித்துப் பிரசுரம் செய்திருக்கிறார்கள்.

இரண்டாம் பாகம் விருஷப லக்னத்தைப்பற்றியது. சென்னைக் கௌமாரநாடி ஜோதிடர் பண்டிதர் S. தங்கவேலு நாடார் அவர்களை இதன் ஆசிரியராகக் கொண்டு நிர்வாக ஆசிரியர் T. சந்திரசேகரன் அவர்களால் பிரசுரம் செய்யப் பெற்றுள்ளது. விருஷப லக்னத்தில் 121ஜாதங்களைக்குறித்துப்பலன் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்நூல்கள் ஜோதிஷத்தில் ஈடுபட்டவர்களுக்கேயன்றி அதில் பற்றுள்ள அனைவருக்கும் ரஸமாக இருக்கும்.

## ஸ்ரீவேதாந்த தேசிகரின் தோத்திரங்கள்

ஸ்ரீ வேதாந்த தேசிக ஸம்பிரதாய ஸபா, விலை ரூ 3 8-0 1/277, தாதர் ரோடு, பம்பாய்-19.

கீதாஞ்ஜலி பிரஸில் அழகாக அச்சிடப்பட்ட இப்புத்தகம் ஸ்ரீ வேதாந்த தேசிகரால் செய்யப்பட்ட பல முக்கியமான ஸ்தோத்திரக் கிரந்தங்களைத் தேவ நாகரியில் கொண்டுள்ளது. ஹயக்ரீவ ஸ்தோத்திரம், கருட பஞ்சாசத், ரகுவீரகத்யம், ஸ்ரீஸ்துதி, ஆகிய 29 ஸ்தோத்திரங்கள் அடங்கியது. யாவரும் வாங்கி வைத்துக்கொள்ள வேண்டிய நூல். பெரிய எழுத்துக்களில் அச்சிடப்பட்டுள்ளது.



**இனாம்!** **இனாம்!** **இனாம்!!!**



எமது நெ. 501 கறுப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன்மூலம் எல்லாவித மயிரும் மைக் கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கறுப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும் பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது. புட்டி ஒன்றுக்கு விலை ரூ. **1-15-0; 3** புட்டிகள் (பூரா முறை) ரூ. **5-0-0.**

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்டுவாட்சும், மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்தரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்டு வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

**ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்:**

**AMRIT PHARMACY (C. K.)**
**JULLUNDUR City.**

**பரிசு ரூ. 1000**
**(ஒரு நூதன கண்டுபிடிப்பு)**
**மாய மோதிரம்**



இந்த மோதிரம அபூர்வ மந்திர சக்தியுடன் தயாரிக்கப்பட்டது இது ஆச்சரியகரமான வேலைகளைச் செய்கிறது. எவரேனும இம் மோதிரத்தை அணிந்துகொண்டால் எவ்வளவு கஷ்டமான காரியமாக இருந்தாலும் வெற்றிபெறுவர். அது உங்களை எல்லாவிதமான ஆபத்துகளினின்றும் வியாதிகளினின்றும் காப்பாற்றும். துர்கிரஹங்களின் தொந்தரவு நீங்கும். இம்மோதிரத்தை அணிபவர் தம் காதலரை (அவரானாலும் அவளானாலும் சரி) சுலபமாக வசப்படுத்தலாம். அவரானாலும் அவளானாலும் உங்களுக்குக் கட்டுப்பட்டு தம் செய்கைக்காக பச்சாத்தாபப்படுவர். நீங்கள் காதல், உத்தியோகத்தில் வெற்றிபெற்று எராளமான சம்பத்தையும் அடைவீர்கள். இம்மோதிரம் உங்களுக்கு ஒரு மெய்க்காப்பாளனாக உதவும். இதை ஒரு முறை பரீட்சித்து இதன் ஆச்சரியகரமான பலன்களை முதல் இரவே காணுங்கள்.

விலை ரூ. 1—15—0 ஸ்பெஷல் ரூ. 3-0-0
மிக சக்தி வாய்ந்தது. ரூ. 3-15-0 போஸ்டேஜ் தனி.
பலனளிக்காவிடில் விலை திருப்பியளிக்கப்படும்.

**Principal**
**BENGAL MESMERISM HOUSE (C. K.)**
**NAKODAR, Pb.**



# விழிப்பு

**எஸ். ஸந்தானம்**

கனமான இரும்புக் கம்பிகளால் வார்க்கப்பட்டிருந்த பெரிய அக்கதவுகள் அவனுக்குப் பின்னே அறைந்து சாத்தப்பட்டன. நாலு வருடங்களுக்குப் பின் புற உலகைக் கண்ட அவன் சில நிமிடங்கள் அவ்விடத்திலே அசைவற்று நின்றுவிட்டான்.

விடுதலை! ஆம். அடைபட்டுக்கிடந்த அவன் சரீரத்திற்குத்தான் விடுதலை. உணர்ச்சியும் நம்பிக்கையும் பொங்கி வழிந்துகொண்டிருந்த அவன் ஆத்மாவிற்கு முன்பே விடுதலை கிடைத்துவிட்டதே! ஆத்மா போய்விட்ட அச் சரீரத்தை, அவன் சிறையில் கிடத்தியிருந்தால் என்ன அல்லது வெளியே அலையவிட்டால்தான் என்ன!— எல்லாம் ஒன்றுதானே.

வெளியுலக வெளிச்சத்தில் கூசிய கண்கள் சுயநிலையை அடைவதற்குச் சற்று நேரம் ஆகத்தான் செய்தது. கண்களைக் கசக்கிவிட்டுக்கொண்டவாறே மெல்ல நடக்க ஆரம்பித்தான். அப்பழைய தெருக்களும், கடைகளும், வீடுகளும்கூட மாறுதலின்றித்தான் காட்சியளித்தன. அவனிருந்த மனோ நிலையில் உலகமே மாறிவிட்டிருக்கும் என்று எண்ணியிருந்தான் போலும். ஆனால் உலகம் அவ்வளவு எளிதில் மாறி விடுகிறதா?— தெருவில் போவோர் வருவோரும் கூட அவனை ஏறெடுத்துப் பார்க்காமல் தான் சென்றனர். இளைத்து வாடி விட்டிருந்த அவன் முகத்தில் அடர்ந்திருந்த தாடி மீசை, தெருவில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகளின் கவனத்தைச் சற்றுக் கவர்ந்ததைத் தவிர மற்றப்படி உலகம் அவனைச் சாதாரணமாய் ஏற்றுக்கொண்டு அத்துடன் மறந்து விட்டதைப் போலத்தான் தோன்றியது. ஆம். அவனைப்பற்றி உலகிற்கு என்ன கவலை? அவன் கைதியாய்ச் சிறையில் இருந்தாலும், சுதந்திர மனிதனாய்ச் சிறைக்கு வெளியே திரிந்தாலும் அவனுக்கு அனுதாபப்படுவதற்கோ ஆதரவு அளிப்பதற்கோ யார்தான் கவலைப்படப்போகிறார்கள்......!

தெருமுனையை அடைந்து திரும்பியவன் 'ஓ' வென்ற அலறலைக் கேட்டுச் சிந்தை தெளிந்து திகைத்து நின்றான். குறுக்கும் நெடுக்குமாக ஓடிக் கொண்டிருந்த வண்டிகளுடன் சந்தடி நிறைந்திருந்த அத்தெரு மத்தியில் அக்குழந்தை நின்று கொண்டிருந்தது. அதன் வெகு அருகே வந்து விட்ட மோட்டார் வண்டியின் 'கிரீச்'சிட்ட சப்தமும் தெருவோரத்தில் நின்று கூக்குரலிட்ட ஜனங்களின் ஆரவாரமும் அவனைக் கிறுகிறுக்கச் செய்தன. ஒருவாறு நிலைமையை உணர்ந்த அவன் தன்னையும் மறந்தவனாக ஓரே பாய்ச்சலில் அக்குழந்தையை நெருங்கிவிட்டான். மறுவினாடி குழந்தையை அள்ளி எடுத்தவனாய் அந்த மோட்டாரின் சக்கரத்திற்குத் தப்பி ஓரத்தில் சென்று கொண்டிருந்த சைக்கிளில் மோதி விழுந்தான்.

சுற்றியிருந்தோர் தம் மனத்துடிப்பு ஒருவாறு அடங்கியவராய் நீண்ட பெரு மூச்சுடன் அவனையும் குழந்தையையும் சூழ்ந்து கொண்டனர். தன் ஆடைகளில் படிந்திருந்த மண்ணைத் தட்டிவிட்டுக் கொண்டிருந்த அவன் அக்குழந்தையின் ஆடையையும் சுத்தம்செய்யத் துவங்கினான். பிறகு, அதைக் கையில் பற்றியவாறே அவன் நடக்க ஆரம்பித்த போது அவனுக்கு வழி வகுத்துக் கொடுத்த அக் கூட்டம் அவனை ஏசத்தான் செய்தது.

“என்னதான் அருமையாய் இருந்தாலும், பெண்ணைத் தெருவில் நடக்கவிட்டு வேடிக்கை பார்க்கிறானே, மடையன்!”

‘அவன் முகத்தைப் பாருங்கள் திருடனைப் போல!”

“இவனுக்குப்போய் இவ்வளவு அழகான குழந்தை!”

.........................

ஒன்றையும் லட்சியம் செய்யாமல் குழந்தையின் கையைப் பிடித்தவாறே அவன் நடந்து சென்றான். சிரிப்பே அற்றிருந்த அவன் முகத்தில் மெல்லிய புன்னகை தேங்கி நின்றது.

'சீ'-என்ன ஜனங்கள்!—மரண தேவனின் வாயருகில் நின்ற குழந்தையை மீட்கவகையின் றிக்கூக்குரலிட்ட இம் மக்களின்முன் அதைக் காப்பாற்றியதற்கு அவன் அடையும்கைம்மாறு வசைமொழிதானா?

கொஞ்சம் சந்தடி குறைந்து விட்டிருந்த இடத்தை அடைந்த அவன் நின்று அக்குழந் தையை நோக்கினான். பால்மணம் மாறாமல் பசுந்தளிர் போலிருந்த அதன் கலவரமுற்றிருந்த நீலமணிக் கண்கள் அவனை ஆகர்ஷித்தன.

பாசத்துடன் குனிந்து, "நீ, யாரும்மா?'-என்று கேட்டான்.

சற்று நேரம் வெறித்து நோக்கிய அச்சிறுமி மெல்லப் பதிலளித்தாள்.

"சுகுணா"—

"அது சரியம்மா,-உங்கவீடு எது?-நீ தனி யாகவா வந்தாய்?'-

அவள் மேலும் கீழும் பார்த்தாளே யன்றிப் பதி லொன்றும் கூறவில்லை.

"சொல்லம்மா, சொல்லு!"-உன் வீடு எங்கே இருக்கிறது? உங்க அப்பா யாரு?-



அவள் ஏதோ முணுமுணுத்தாள்: திட்டமாக எதுவும் அவளால் கூற இயலவில்லை. அவள் முகத்தில் மெல்ல, பீதி தொடங்கிக் கண்களும் கலங்க ஆரம்பித்தன. அவளை உற்று நோக்கியவன் மேலும் அவளைக் கேள்வி கேட்டுத் தொந்தரவு செய்ய மனமில்லாதவனாய் அவள் கையைப் பற்றி யவாறே நடக்க ஆரம்பித்தான். தெருக்கோடியை அடைந்து யாரையாவது விசாரித்தால் அவளைப் பற்றிய தகவல் தெரியுமல்லவா?—

அச்சிறுமியின் நடைக்குத் தகுந்தபடியே மெல்ல அடிமேல் அடிவைத்துச் சென்ற அவன் சிந்தனை சுழன்றது.

ஏறக்குறைய ஐந்து வருடங்களுக்கு முன்பு தானே நடந்தது அது! அப்போது அவன் மதுரை யில் இருந்தான். இளமை துடிக்கும் கட்டிளம் காளையாக இருந்த நாள் அது!-தன் கையினால் இயன்ற மட்டும் உழைத்து, கண்ணியமான வாழ்க் கையை நடத்தி வரவில்லையா?

அன்றும் இதைப்போலத்தான் நேர்ந்தது. அவன் தன் தொழிலை முடித்துகொண்டு மாலையில் வீடு நோக்கி வந்துகொண்டிருந்தான். ஜன நெருக் கடியில் சந்தடியுடன் இருந்த அக்கடைத்தெரு வில் அவன் நுழைந்த போதுதான் அது நடந்தது.

அவள் ஓர் இளம் பெண்!—பதினாறு வயது தான் இருக்கும். பருவப் பூரிப்பால் அவள் எழில் மிக்கவளாகவே தோன்றினாள். தூய்மையுடன் அணிந்திருந்த அவள் எளிய ஆடை காற்றில் அசைந்ததுகூட அழகாய்த்தானிருந்தது. தெரு வின் ஓரத்தில் மெல்ல நடந்து வந்துகொண்டிருந்தவள் ஏனோ 'சட்'டென நின்று எதிர் புறத்தை அடைவதற் குக் குறுக்கே திரும்பினாள். தெருவில் நான்கடிகள்கூடச் சென்றிருக்கமாட்டாள். ஓங் கார நாதத்துடன் ஒரு பெரிய லாரி அவளை அணைத்துக் கொள்ள வெகு அருகில் வந்து விட்டது. 'ஓ'வென்ற பல குரல்களின் மத்தியில் அவள் திசை புரியாமல் அப்படியே ஆணி அறைந்தது போல அவ்விடத்திலேயே நின்று விட்டாள். மறுகணம் அவள் இரத்த வெள்ளத்தில் மிதக் கப்போவதைக் காணச் சகிக் காதவராய் அங்கிருந்தோர் கள் தம் முகங்களைக்கூட மூடிக்கொண்டு விட்டனர்.

சாவதானமாக எதிர்புற நடை பாதையில் வந்து கொண்டிருந்த அவன் இப் பெண்ணின் நிலையைப் பார் த்து ஸ்தம்பித்து நின்றுவிட்

டான். இப் பேதைப் பெண் ஏன் ஓடாமல் அவ்விடத்திலே நிற்கிருள் என்ற வினா அவன் மனதில் பளிச்சிட்டது ஒரு கணம். அதற்குமேல் அவன் சிந்திக்கவில்லை. அடுத்த வினாடி அவன் ஓரே தாவலாக அவளை நோக்கித் தாவினான். அவன் மறுபடியும் சுய உணர்வு அடைந்த போது தெரு வோரத்தில் அவள் இடுப்பைக் கெட்டியாகப் பற்றியவனாக நின்று கொண்டிருப்பதைக் கண்டான். அவளை விழுங்க வந்த லாரி சற்றுத் தூரத்தில் சென்று கொண்டிருந்தது.

ஒருவாறு ஆசுவாச மடைந்த அவன் அவளை நோக்கினான். கலைந்து விட்டிருந்த தன் ஆடையை சீர்படுத்திக் கொண்டிருந்த அவள் சாவதான மாகவே கேட்டாள்.

"என் மீது மோட்டார் ஏறிவிட இருந்ததா என்ன?"

இக்கேள்வி அவனை அசந்து நிற்கச் செய்தது. இந்தப் பெண் பரிகாசம் செய்கிறாளா? ஒருவேளை.

கூர்ந்து அவள் முகத்தைப் பார்த்தான். மறு கணம் அவன் மனம் அபார பச்சாத்தாபத்துடன் நெகிழ்ந்தது. அகல விரிந்திருந்த அவள் பெரிய கண்களில் ஒளியில்லை. அவனிருந்த திசையில் ஆவலுடன் திரும்பியிருந்த சந்திரன்போன்ற அவள் முகம் ஏக்கத்தைப் பிரதிபலித்துக் கொண் டிருந்தது.

நீண்ட பெரு மூச்சுடன் தலை நிமிர்ந்தவன் கனிவுடன் அவளைக்கேட்டான்.

"ஏனம்மா, உனக்குப் பார்வை கிடையாதா?"

அவள் முகத்தில் சோகப் புன்னகை தவழ்ந்தது.

"ஆம்!-எனக்கு மூன்று வயதிலேயே பார்வை போய் விட்டதய்யா".

அவன் ஏனோ பேசவில்லை. இருவரும் மெல்ல நடக்கத் தொடங்கினர். அவர்களிடையே வெகு நேரம் மௌனம் நிலவியது. கடைசியில் அவளே ஏதோ கூறினாள்.

"என் உயிரைக்காப்பாற்றிய தங்களுக்கு என் நன்றி. பார்வையற்ற என்னால் வேறு என்ன செய்ய முடியும்?".

அவள் கூறியது அவன் காதில் விழுந்ததாகவே தெரியவில்லை. எங்கோ யோசனை செய்து கொண் டிருந்தவன் மெல்லத் திரும்பி, "நீ யாரம்மா?"—உன் வீடு எங்கு இருக்கிறது?"-என்று கேட்டான்.

"நான் அடுத்த தெருவில்தான் இருக்கிறேன். என்னுடன் என் வயோதிகத் தாய் இருக்கிறாள். அவள் தான் என்னைக் காப்பாற்றுகிறாள். அவளுக்கு உதவியாய் இல்லாவிட்டாலும் பாரமாகவே என் வாழ்நாள் கழிகிறது!-"

காற்றாடி போல் லேசாகப் பறந்த அவன் மனதில் ஏதோ ஒரு பாரம் அழுத்தியது. "பாவம்" என்ற சொல்லை மட்டும் அவன் உதடுகள் முணுமுணுத்தன.

அன்று முதல் அவனும் பானுவும் இணைபிரியாதவர்களாகி விட்டனர். அவளுக்காகவே அவன் தன் உடல், பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்திருந்தான். அவளுடைய பளிங்குபோன்ற உள்ளமும் தூய பாசத்தின் பிரதிபலிப்பும் அவனை ஆட்கொண்டன. எல்லையற்ற உற்சாகத்துடன் கை நிறையச் சம்பாதித்து அவள் வாழ்வை ஒளி பெறச்செய்யப் பாடுபட்டான்.

நன்றியோடு நீர் ததும்பும் கண்களுடன் அவள் பலமுறை அவனைப் போற்றியிருக்கிறாள்.

"நீங்கள் ஏன் எனக்காகப் பாடுபடுகிறீர்கள்? உங்கள் உதார குணத்திற்கும் பெருந்தன்மைக்கும் என்னால் என்ன ஈடுசெய்ய முடியும்? என் வாழ்வு பூராவையும் உங்கள் பணிக்கே அர்ப்பணித்தால் கூடப் போதாதென்றே கருதுகிறேன். எனக்கு ரக்ஷகனாக வந்த தங்களைக் கண் குளிரப் பார்க்கக் கூட இயலாமல் இருப்பது என் துர்ப்பாக்கியம் தான்"!

அவள் இதே தோரணையில் பேசிக்கொண்டு செல்வாள். அவன் சிரித்துவிட்டுப் போய்விடுவான்.

நாட்கள் சென்று கொண்டிருந்தன. அவள் கண் பார்வையைத் திருப்புவதற்காக அவன் அவளைப் பல வைத்தியர்களிடம் அழைத்துச் சென்றான். அவன் வரவிற்கு மீறி, செலவானதைத் தவிர அவள் நிலைமையில் ஒரு மாறுதலும் ஏற்படவில்லை. நம்பிக்கை இழந்து அவன் சோர்ந்து அமர்ந்தபோதெல்லாம் அவள் அவனுக்கு ஆறுதலாகவே பேசினாள்.

"அன்பரே, எனக்காக ஏன் நீங்கள் இவ்வளவு பணத்தையும் உங்கள் தூய மனதையும் விரயம் செய்கிறீர்கள்? கடவுள் எனக்கு அளித்த பாக்கியம் இவ்வளவுதான். நீங்கள் உங்களுக்குத் தகுதியான ஒரு மனைவியை அடைந்து என்னை மறந்து இன்பமாகக் காலம் கழியுங்கள்........."!

அவள் இப்படிப் பேசும்போது அவள் முகத்தில் பிரகாசிக்கும் எல்லை மீறிய பாசத்தினால் அவள் தலையை வருடிக்கொண்டே அவன் கூறுவான்.

"பானு!"-உன்னை மறந்து எனக்கு வாழ்வு இருக்கிறதா? உன் வாழ்வின் உயர்விலேதானே என் ஜோதி பிரகாசிக்கிறது. கடவுள் கருணை கூர்ந்து உனக்குக் கண்களைமட்டும் அளித்துவிட்டால்........!"

அவன் திசையில் திரும்பியிருந்த தாமரை போன்ற அவள் முகம் சிவந்து மலர்ந்து இருப்பதைக் காணுவதிலேயே அவன் இன்பச் சிகரத்தை எய்தினான் போலும்!-

மேலும் சில தினங்கள் சென்றன. அவளுக்கு உற்றார் என்று இருந்த அம்முதிய தாயாரும் போய்விட்டாள். தனக்கென்றிருந்த அவ்வொருத்தியும் மறைந்துவிட்ட சோகத்தில் கொடிபோல் துவண்ட அவளுக்குக் கொழு கொம்பாக விளங்கினான் அவன்!



பானுவின் கண் வைத்தியத்திற்காக எங்கெங்கோ சுற்றியலைந்து கொண்டிருந்த அவனுக்கு கடைசியில் அச்செய்தி கிடைத்தது. வெளியூரிலிருந்து அங்கு வந்திருந்தார் அந்த இளம் டாக்டர். இரண சிகிச்சை மூலம் அற்புதமாய் அவர் வியாதிகளைக் குணப்படுத்துவதாகப் பிரஸ்தாபிக்கப்பட்டது.

அவன் மறு நாளே அந்த டாக்டரிடம் பானுவை அழைத்துச் சென்றான். இளமையும் கண்ணியமுமாய்த் தோன்றிய அந்த டாக்டரின் முகத்தில் அறிவின் முதிர்ச்சி தென்பட்டது. புதிய நம்பிக்கை தோன்றிய மனதுடனேயே அவன் டாக்டரிடம் விவரங்களைக் கூறினான். பானுவின் நேத்திர மீட்சியே தன் வாழ்வின் குறிக்கோள் என்பதை அவரிடம் கூறி அவளை எப்படியும் காப்பாற்றித் தனக்கு அளிக்கும்படி மன்றாடினான்.

டாக்டர் பானுவை வெகு நேரம் சோதனை செய்தார். அவர் ஆஸ்பத்திரியிலேயே இரண்டு நாள் வைத்திருந்து தீவிர பரிசோதனை புரிந்தார். மூன்றாம் நாள் காலையில் அவன் அவரைச் சந்தித்த போது அவர் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்த அவனிடம் அவர் கூறினார்.

“இதோ பாருங்கள்!—அந்தப் பெண்ணின் கண்களைக் குணப்படுத்த முடியாது என்று கூறுவதற்கில்லை! ஆனால் மிகுந்த சிமரம் எடுத்துக்கொள்ள வேண்டும். குறைந்தது ஆறு மாதங்களாவது ஆஸ்பத்திரியிலேயே தங்கி வைத்தியம் பார்த்துக் கொள்ளவேண்டும். இதற்கெல்லாம் அதிகச் செலவு பிடிக்கும்!”

டாக்டர் சற்று நிறுத்திவிட்டு அவனை மேலும் கீழும் பார்த்தார், அவனுடைய நிலையை உத்தேசிப்பவரைப்போல.

அவரையே உற்று நோக்கிக்கொண்டிருந்த அவன் முகத்தில் நம்பிக்கையின் சாயல் படரத் தொடங்கியது. அவன் கண்கள் ஒரு கணம் ஒளியுடன் பிரகாசித்தன.

“எவ்வளவு ரூபாய் ஆகும் டாக்டர்!”—

டாக்டர் தொண்டையைக் கனைத்துவிட்டுக் கொண்டார். அவர் தோரணையில் சற்றுக் கண்டிப்புத் தோன்றியது.

“எல்லாச் செலவுகளும் சேர்ந்து குறைந்தது மூன்றாயிரம் ரூபாய் ஆகும்!”

அவன் அசந்து நின்று விட்டான்!—நம்பிக்கையில் பூரித்திருந்த அவன் இருதயம் நொறுங்கியது. பானுவின் வாழ்வு இப்படியே தான் செல்ல வேண்டுமா?—உலகத்தினின்று பிரித்து அவளைக் கவிந்திருந்த சமாதியைத் தகர்த்தெறிய மூவாயிரம் ரூபாய்களா வேண்டும்?

அவன் சுய உணர்வு அடைந்தபோது டாக்டர் நாற்காலியை விட்டு எழுந்து விட்டிருந்தார். அவன் பேசுமுன் அவரே தொடர்ந்து கூறினார்:

“நீங்கள் போய் யோசனை செய்துகொண்டு எனக்கு மூன்று நாளில் பதில் தெரிவியுங்கள்! அதற்குப் பின் வைத்தியத்தை ஆரம்பிக்கலாம். அதுவரையில் அப்பெண் என் ஆஸ்பத்திரியிலேயே இருக்கட்டும்!”

அவர் உள்ளே சென்றுவிட்டார். பாரத்தினால் அழுத்தப்பட்டவன்போல் தள்ளாடியவாறே வெளியே வந்தவன் தன் கால் சென்ற வழியே சென்றான்.

மூவாயிரம்! அவனால் சிந்திக்கக்கூட முடியவில்லை. அவனிடமுள்ள அனைத்தையும் பணமாக மாற்றினாலும் ஐம்பது ரூபாய்கூடத் தேறாதே!

பானுவின் நினைவும் ஒரு கணம் அவன் மனதில் தோன்றியது. ஒளியிழந்த அவள் கரிய கண்களின் ஆதரமான பார்வை அவன் மனக்கண்களில் தோன்றி வேதனைகலந்த பச்சாத்தாபத்தை எழுப்பியது!—அவளிடம் டாக்டரின் வார்த்தைகளை எப்படிக்கூறுவது? அவள் மனம் உடைந்து விடாதா?—எப்படியும் அவள் தன் பார்வையை மீண்டும் பெற்றுவிடலாம் என்ற நம்பிக்கையை, தானே மூட்டிவிட்டு, அதைத் தன் கையாலேயே இப்போது நொறுக்குவதா?

அவன் இதயம் அழுதது! அடக்க முடியாத துக்கத்தினால் அடை பட்டுக்கிடந்த நெஞ்சுடன் வீட்டை அடைந்தவன் 'தொப்'பென்று கட்டிலில் சாய்ந்தான்.

அன்றும், மறுநாளும் அவன் தூங்கவேயில்லை! பானுவையும் சென்று பார்க்க அவன் மனம் துணியவில்லை.

எப்படித்துணியும்?–அவளுக்கு வாழ்வுஅளிக்கத் தனக்கு வகையில்லை என்று ஒத்துக் கொள்வது தானே அவளைச்சென்று பார்ப்பது! உண்மையில் அவன் வகையற்றவன்தானா?—அதற்காகப் பானு வாழ்நாள் முழுவதும் குருடியாகவா இருக்க வேண்டும்?

சஞ்சலத்தில் சுழன்ற அவன் மனம் 'சட்'டென ஒரு முடிவிற்கு வந்தது'.—பானு இனி ஒரு காலும் குருடியாக இருக்க முடியாது, கூடாது!! மூன்றுயிரம் தன்னிடம் இல்லையென்பதினால் உலகில் மற்றவர்களிடம் இல்லை என்பதா அர்த்தம்!

அன்றிரவு மூன்று மணிக்குள் அவன் மூன்றுயிரம் ரூபாய்களுக்குச் சொந்தக்காரனுகி விட்டான்! ஊர்க்கோடியில் இருந்த பங்களாவில் வசித்த நகைக் கடைச் செட்டியாரின் ஆஸ்தியில் மூவாயிரம் ரூபாய் குறைந்தது.

மறுநாள் காலை மலர்ந்த முகத்துடனே அவனிடமிருந்து ரூபாய்களைப் பெற்றுக்கொண்டார் டாக்டர்! அக்கணமே பானுவின் இடத்தையடைந்து அவளுடன் அவன் பேசிய போது அவன் குரலில் தொனித்த உற்சாகமும் குதூகலமும் அவளை வியப்புறச் செய்தன.

"பானு!"–டாக்டர் உன்னைப்பூரணமாக குணப்படுத்தி விடுவதாக வாக்களித்துவிட்டார்! நீ ஆறு மாதமாவது இங்கு இருக்கவேண்டுமாம் ஆறு மாதமும் ஆறு நாட்களாகக் கழிந்து, நீ கண் பார்வையோடுவரும் நாளை நான் எதிர்பார்க்கிறேன்!"

அவள் முகம் மகிழ்ச்சியில் பொங்கியது. ஆனால் உடனேயே அவள் புருவங்கள் நெரிந்தன.

"ஆமாம்......உங்களுக்கு.........பணம்?"

"அதெல்லாம் ஒன்றும் கவலைப்படாதே பானு; நான் சகல ஏற்பாடும் செய்து விட்டேன். இனி கடவுள் அருளால் உன் கண்கள் மலர வேண்டும்!"

உணர்ச்சியுடன் நீர் மல்கிய அவள் கண்களைக் கடைசியாகப் பார்த்த அவன் அதோடு வந்து விட்டான்.

நிறைந்த மனத்துடன் வீட்டை அடைந்தவன் அதற்குப் பின் ஆஸ்பத்திரி பக்கமே வரவில்லை. அடுத்த அரை மணி நேரத்தில் அவன் அதிகாரியின் கையில் அகப்பட்டு விட்டான். அவனிடமிருந்து பணத்தை என்னவோ மீட்க முடியவில்லை. ஆனால் அதற்குப் பதில் அவன் நான்கு வருடம் அரசாங்கக் காவலில் அடைபட்டுக் கிடக்க வேண்டி வந்தது!

இருந்தாலென்ன? நான்கு வருடங்களுக்குப் பின் 'அவன் பானு' கண் பார்வையுடன் அவனை வர வேற்கத்துடித்து கொண்டிருக்க மாட்டாளா? உலகத்தினின்றே அவள் இவ்வளவு காலம் அடைபட்டுக் கிடந்தபோது, தான் நாலு வருடம் சிறையில் அடைபட்டுக் கிடப்பது பிரமாதமா?

ஆனால் அவன் நினைத்தபடி எல்லாம் நடந்ததா? அவன் அவ்வூர்ச் சிறையை விட்டுச் சென்னைச்சிறைக்கு மாற்றப்பட்டு விட்டான். ஆயினும் இவன் சிறை வாசத்தின் முதல் இரண்டு வருடங்கள் துரிதமாகத் தான் சென்றன!

மூன்றும் வருட ஆரம்பத்தில்தான் அவனுக்கு அப்பேரிடி காத்திருந்தது. பானுவின் நினைவிலேயே எரிந்து கொண்டிருந்த அவன் இதய ஜோதி அணையும்படி அச்செய்தி வந்தது! ஒரு மாதத்திற்கு முன்பு டாக்டர் கரத்தினாலேயே எழுதப்பட்ட அக்கடிதம் எங்கெங்கோ சுற்றி அலைந்து விட்டு அவனை அடைந்தது. இரண்டே வரிகளில் டாக்டர் விஷயத்தை விளக்கியிருந்தார். ரண சிகிச்சை பெற்ற பானு இறந்து விட்டாள்!

வெறி கொண்டவனைப்போலத்தான் அடுத்த சில நாட்களை அவன் கழித்தான், உலகில் அவனுக்கிருந்த ஒரே பிடியும் போய் விட்டதல்லவா?—பானு மறைந்த பின் அவன் வாழ்வில் ஒளியேது!

* * *

குழந்தையுடன் தெருக் கோடியை அடைந்தவன் சுய உணவு பெற்று எழுந்தான். அவன் பிடியினின்றும் தன் கரத்தை விடுவித்துக் கொள்ள முயன்ற அக்குழந்தையும் நின்று அவனை உற்று நோக்கியது. குனிந்து அவளைப் பார்த்தான். உணர்ச்சியற்ற அவன் முகம் கூட சோபை உற்றது. ஒரு வினடி அச்சிறுமியின் முகம் அவனுக்குப் பழக்கப் பட்டது போல் தோன்றியது. பானுவின் ஜாடை அந்த முகத்தில் தெரியவில்லையா!

நீண்ட நெட்டுயிர்ப்புடன் அவன் தலை நிமிர்ந்தான். "ஊம்!" சிறையின் கம்பிகள் கூடத் தான் அவனுக்குப் பானுவின் முகத்தைப் பிரதிபலித்தன.

யாரோ தன் தோள்மீது கைவைத்ததை உணர்ந்து திரும்பினன், சற்று வயதாகித் தலையில் முண்டாசுடன் காணப்பட்டான் அந்த ஆள். கவலை தோய்ந்த அவன் முகம் இவன் கையில் பற்றியிருந்த அச் சிறுமியைக் கண்டதும் மகிழ்ச்சியடைந்தது.

அதே கணம் அவனைப் பார்த்த அவள், 'கந்தா' என்றலறியபடியே அவனிடம் தாவினள். அவளை வாரி அணைத்தவாறே அவன்–

'அம்மா, குழந்தை!-எங்கே போய்விட்டாய்! உன்னை எங்கெல்லாம் தேடுவது!'

என்று ஆர்வத்துடன் கூறியபடியே அவளைத் தோள்மீது தூக்கிக்கொண்டான். பிறகு இவன் பக்கம் திரும்பி இவனை மேலும் கீழுமாக ஒரு விநாடி உற்று நோக்கியபடியே குழந்தை அவனிடம் அகப்பட்ட தகவலை விசாரித்தான்.

எங்கேயோ யோசனை செய்துகொண்டிருந்த அவன், இரண்டே வாக்கியக்களில் சம்பவத்தை விவரித்து விட்டு மேலே நடக்கத் திரும்பினான்: ஆனால் ஏனோ உடனே நின்று அக் குழந்தையை மறுமுறை உற்று நோக்கி,

'ஐயா, இது யார் குழந்தை?'—என்றான்.

'டாக்டர் சுந்தரத்தின் குழந்தையப்பா இது. நான் தோட்டத்தில் வேலையாய் இருந்த சமயத்தில் இது தெருவில் வந்துவிட்டது. நல்லவேளை நீ காப்பாற்றினாய்! இதோ வீடு பக்கத்தில் இருக்கிறது! வந்துவிட்டுப் போயேன்!'

'டாக்டர் சுந்தரம்' என்ற பெயர் அவனுக்குப் பழைய நினைவை ஊட்டியது. ஒருகால் அதே டாக்டர்தானா?

திரும்பி அவ் வேலைக்காரனுடனேயே சென்றான்.

பங்களாவின் வாயிற்படியில் பதைத்துக் கொண்டு நின்றிருந்தாள் அக் குழந்தையின் தாய். வேலைக்காரனின் கரங்களில் குழந்தையைப் பார்த்ததும் அவள் மார்பு விம்மி நீண்ட பெருமூச்சாக வெளிப்பட்டது. ஆவலுடன் ஓடி வந்து அதை வாரி அணைத்துக்கொண்டாள். வேலைக்காரன் நடந்தவைகளைக் கூறி, பின்னால் வந்து கொண்டிருந்தவனைச் சுட்டிக் காண்பித்தான்.

'இவர்தானம்மா குழந்தையைக் காப்பாற்றினார்......!'

அவள் தலை நிமிர்ந்து நோக்கினாள். தாடி மீசையுடன் பரிதாபமாய்க் காட்சியளித்த அவன், சிலைபோல் நின்று அவளை விழுங்கி விடுபவன்போல் பார்த்துக்கொண்டிருந்தான். ஒளியற்றுப் பஞ்சடைந்திருந்த அவன்கண்கள் அகல விரிந்து சுடர்போல் பிரகாசித்தன. அவன் கைகள் மார்பை அழுத்திக் கொண்டிருந்தன.

"பானு...! நீயா, பானு!"

புன்னகையுடன் அவனுக்கு நன்றிகூற அருகே வந்த அவள் அவன் குரலைக் கேட்டுப் பாம்பை மிதித்தவள்போல் துள்ளிப் பின்னடைந்தாள். பூரணச் சந்திரன் போன்ற அவள் வதனம் வேதனையால் கருகியது. துடிக்கும் உதடுகளுடன்.

"யார்...! நீங்களா...! ஐயோ... நீங்களா...! நீங்களா...!"

அவன் புருவங்கள் மேலும் உயர்ந்தன.

"ஏன் பானு!... ஏன்... ஏன்?"

"ஐயோ, அப்படியானால் நீங்கள் இறக்கவில்லையா? 'அவர்' கூறியது பொய்யா ..!"

"யார்!"

அவள் சிரம் தாழ்ந்தது.

"என் கணவர்.........டாக்டர்!"

கசங்கிய உள்ளத்துடன் அவன் திரும்பினான். பட்டவர்த்தனமாய் அவன் மனத்தில் உண்மை பளிச்சிட்டது! அவளை அடைக்கலம் வைத்து விட்டு வந்த டாக்டரே இருவரிடமும் பொய்கூறி ஏமாற்றியிருக்கிறான். தன் வாழ்வில் தோன்றிப் பூத்திருந்த பூங்காவை எரித்துச் சாம்பலாக்கி விட்டான்!

அவன் பின்னால் ஒலித்த அவள் விசும்பலைக் கேட்காதவனாய், நித்திரையில் நடப்பவனைப் போல் தள்ளாடியவாறே வெளியேறினான். ●



# விஞ்ஞானத் - - - - துணுக்குக்கள்

நா. கி. நாகராசன்

## துயிலின் மர்மம்

நமது வாழ்நாளில் மூன்றிலொரு பகுதியை நாம் தூங்கிக் கழிக்கிறோம். ஆனால் 'நாம் ஏன் தூங்குகிறோம்?' என்ற கேள்வி நமக்கு மிக அருமையாகவே உள்ளத்தில் எழுகிறது. உடலின் திசுக்களில் (Tissues) தோன்றும் நஞ்சுகள் தூக்கத்தை விளைவிக்கின்றன என இதுவரை நம்பிவந்தார்கள். ஆனால் இப்போது ஆங்கில மருத்துவர் ஒருவர் செய்த ஆராய்ச்சிகளின் விளைவால் ரத்தத்திலுள்ள பிராணவாயுவின் அளவு குறிப்பிட்டதோர் எல்லையைவிடக் குறைந்தால் தூக்கம் வருகிறது எனத் தெளிவாகியுள்ளது. வயிறாரச் சாப்பிட்டால் தூக்கம் வருவதையும், பசியினால் தூக்கம் வராமலிருப்பதையும் அவர் விளக்கியிருக்கிறார். சாப்பிட்டவுடன் ஜீரண உறுப்புக்களுக்கு ரத்தம் அதிகமாகப் பாய்வதால் மூளையில் ரத்த ஓட்டம் குறைகிறது. ஆகையால் மூளை அயர்வடைந்து தூக்கத்தைத் தோற்றுவிக்கிறது. பசியின்போது இதற்கு எதிரான விளைவு நிகழ்ந்து தூக்கம் கெடுகிறது. மூளைக் கோளாற்றினால் அவதியுறும் சிலர்
...க்கத்தின்போது பிதற்றியும், எழுந்து
...வு சேஷ்டைகளைப் புரிந்
...க்கிறார்கள். தூக்கத்
...த்தத்தில் நிகழும்
...வற்றைக் குண
... ஆராய்ச்சி
...ஆண்டுகள்
...பிய பின்
...றுதல்,
...ங்குச்
...க்கம்!
...அள
...பித்
...த்
...து
...ண

மாக்கிவிட்டார்கள். ஆகையால் தூக்கத்தின் மர்மம் மன நோய்க்குப் பரிகாரம் தேடவும் வழிகாட்டியுள்ளது.

## வராத மழை

வைகாசி மாதம் முடியப்போகிறது. ஆனால் சென்னையில் இந்தக் கடுங் கோடையின் ஆட்சி இன்னும் தங்கு தடையின்றி நடந்து வருகிறது, சென்னை நகரில் ஒரு நாளாவது மழையில்லை. சென்னை நகரத்தில் சென்ற அரை நூற்றாண்டாகப் பெய்த மழையின் புள்ளி விவரங்களை ஒரு வானிலை அறிஞர் அரும் பாடு பட்டு வகைப்படுத்தி இருக்கிறார். ஐம்பதாண்டுகளிலும் மழையற்ற நாட்கள் மார்ச் மாதத்தில் அதிகம். ஆனால் ஒரு மாதத்தில் மிகக் குறைவாக மழை பெய்தது 1918 அக்டோபரில் ஆகும். அம்மாதம் அரை அங்குல மழைகூட இல்லை. அப்போது கருணைகாட்ட மறந்த வருண பகவானுக்கு அடுத்த மாதமே சென்னை நகரத்தின்மேல் தயை பிறந்தது போலும்! அவ்வருடம் நவம்பரில் மழை சக்கைப்போடு போட்டுவிட்டது. அம்மாதம் பெய்த 43 அங்குல மழை ஐம்பதாண்டுகளில் மாத மழையில் அதிகம். சென்ற ஆண்டு மே மாதம் இரண்டு நாட்கள் ஒரேயடியாய் மழை பெய்ததில் நாம் திண்டாடிவிட்டோம். ஆனால் 24 மணி நேரத்திற்குள் சுமார் 20 அங்குல மழை இருமுறை பெய்துள்ளது. 1846 அக்டோபர் 21 ஆந்தேதி 21 அங்குலமும், 1857 அக்டோபர் 24ஆந் தேதி 18 அங்குலமும் பெய்தன. இந்த அனுபவம் எப்படி இருந்திருக்குமோ?

## மூப்பிலே தாய்மை

நம் நாட்டு மாதர் நாற்பது வயதைத் தாண்டிவிட்டாலே தம்மை வயோதிகர்களாக மதித்துக் கொள்கிறார்கள். அந்த

வயதில் அவர்கள் மீண்டும் தாயாக நேர்ந்தால் "கடைசிக் காலத்தில் இக்குழந்தை எதற்கு?" என்று நொந்து கொள்கிறார்கள். தாயின் வயது, அவளது மூப்பு நிலை முதலிய அமிசங்கள் குழந்தையின் பண்புகளை எவ்விதம் பாதிக்கின்றன என மேனாட்டில் ஆராயத் தொடங்கி இருக்கிறார்கள். முதுமையில் பிறக்கும் குழந்தையைவிட இளமையில் பிறப்பதே நல்ல ஆயுளைப் பெற்றிருப்பதோடு, அறிவுத்திறன், நடத்தை முதலிய நல்லியல்புகளில் சிறந்து விளங்கும். தாய் முதியவளானபின் பிறக்கும் குழந்தைக்குப் பாரம்பரியமாக வரும் பிறவிக் குறைகளும் அதிகமாகத் தோன்றும். ஆகையால் வயதான பெண்கள் குழந்தை பெறாமல் இருப்பது நலம் என்பதற்கு இதுவும் ஒரு காரணம்!

## எண்ணெய்ச் சிக்கு நீக்க வழி

எண்ணெய்களை நெடுநாள் வைத்திருப்பதால் அது காற்றிலுள்ள பிராண வாயுவை ஏற்றுக்கொண்டு சிக்கு நாற்றம் அடிக்கத் தொடங்கி விடுகிறது. இது நிகழாமல் தடைசெய்ய எளிய முறையொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. எண்ணெயுடன் மிகச் சிறு அளவு (0.05 சத விகிதம்) கந்தகத்தைக் கலந்து கொதிக்கவைத்து விட்டால் மேற்கூறிய நாற்றம் நிகழ்வதில்லை. இதனால் எண்ணெய் பல மாதங்கள் கெடாமல் இருக்கும். இது எண்ணெயின் மணத்தையும், நிறத்தையும் பாதிப்பதில்லை.

## தெருவிலே திரியும் எமன்!

அமெரிக்காவிலுள்ள உளவியல் ஆராய்ச்சிக் கழகம் ஒன்றும், மருத்துவ ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் கூட்டாக ஓர் ஆராய்ச்சியை நடத்தின. நகர மக்களுக்கு நேரும் எல்லாவகையான விபத்துக்களையும் கவனித்து அவற்றிற்கு அடிப்படையான காரணங்களையும் அவை பற்றிய பிற உண்மைகளையும் அறிய இந்த ஸ்தாபனங்கள் முயன்றன. பல விபத்துக்களை ஆராய்ந்ததில் மொத்ததில் 42-சத விதம் தெருக்களில் நடப்பவையே என்றும் அவற்றிலும் சுமார் 25-சதவிகிதம் ஒன்றிற்கு மேற்பட்ட தெருக்கள் கூடுமிடத்தில் பாதசாரிகள் குறுக்கே செல்கையில் நிகழ்பவையே என்றும் அறியப்பட்டது. மோட்டார் ஓட்டுபவரின் மனநிலையைவிடப் பாதசாரியின் களைப்பு, கவலை, துயரம் போன்ற காரணங்களினாலேயே விபத்துக்கள் அதிகமாக நிகழ்கின்றன என்றும் தெளிவாகிறது! தெருவில் நடக்கும் விபத்துக்களுக்கு நாம் சாதாரணமாகமோட்டார் ஓட்டியையே அதிகமாகக் குறை கூறுகிறோம். ஆனால் அந்த ஆராய்ச்சியின் விளைவாக இதற்கு எதிரான முடிவே வெளியாயிற்று. பாதசாரிகளே விபத்திற்கு அதிகமாகப் பொறுப்பாகிறார்கள் என அறியப்பட்டது! அவ்வளவு விபத்திற்காளானோருள் பெரும்பான்மை யானவர்களது அறிவுத் திறன் சராசரியான திட்ட அளவை விடக் குறைவு என்று கண்டார்கள். எந்திர நாகரிகத்தின் ஆட்சியில் வாழும் நமக்கு அதன் அபாயங்களிலிருந்து தப்ப, குறைந்த பட்ச அறிவுத் திறன் தேவைபோலும்!

## மலேரியா அரக்கன்மேல் போர்

ஆண்டிற்குச் சுமார் எட்டு லட்சம் உயிர்களைக் கொள்ளை கொள்ளும் மலேரியா நோயைக் கட்டுப்படுத்த இந்திய சர்க்கார் ஒரு திட்டம் வகுத்துள்ளனர். இதற்கு மூன்றாண்டுகளும், பதினைந்து கோடி ரூபாயும் தேவையாகும். கொசுக்களை அழித்தும், நோய் கண்டவர்கள் எளிதில் சிகிச்சை பெற வழிசெய்தும், சிறந்த மருந்துகளைப் பயன்படுத்தியும் மலேரியாவின் கொட்டத்தை அடக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதே சமயத்தில் மேனாட்டில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் புது மருந்தொன்று இப் போராட்டத்திற்கு ஒரு புதுப் படைக்கலமாக உதவலாம் என்ற நம்பிக்கையைத் தருகிறது. கெமோகுவின் (Comoquin) என்ற இந்தப் புதுப்பொருளை ஒருமுறை உட்கொண்டாலே போதும். 24-மணி நேரத்திற்குள் மலேரியா குணமாகி விடுகிறது. இம் மருந்தைப் பற்றி மேலும் ஆராய்ந்து இதை எளிதில் தயாரிக்கவும் வழிகண்டால் நாட்டின் மலேரியா ஒழிப்புத் திட்டம் பயன் அடையும்.

இப்போது வெளியான இன்னொரு செய்தியும் இத் துறைக்குப் பயன்தருவது. மூன்று வயதிற்கும் குறைவான குழந்தைகளைச் சாதாரணமாக மலேரியா பீடிப்பதில்லை. இக் குழந்தைகளின் உடலில் ஏதோவொரு இயற்கையான தடுப்புச் சக்தி உள்ளது என நம்பப்பட்டது. ஆனால் பாலையே முக்கிய உணவாகக்கொண்ட உட

வில் மலேரியாக் கிருமிகள் வாழ வசதி இருப்பதில்லை. அப்போது அவை பட்டினியால் செத்துவிடும்! குழந்தைகளுக்கு மலேரியா வராமல் இருப்பதற்குக் காரணம் இதுவே. ஆகையால் மலேரியா நோய் கண்டவர்களும் பாலை அதிகமாக உண்டு நலமடையலாம்.

## நுண்மங்கள் தரும் எண்ணெய்

மோட்டார்ப் போக்கு வரத்து வரம்புமீறிப் பெருகிவிட்ட இந்நாளில் புவியிலிருந்து எடுக்கப்படும் பெட்ரோலியத்தின் தேவை மிகவும் அதிகமாகிவிட்டது. இதே அளவில் மானிடன் பெட்ரோலியத்தைச் செலவழித்துவந்தால் புவியிலுள்ள பெட்ரோலியம் அனைத்தும் ஒரு நூற்றாண்டிற்குக்கூடக் காணாது எனச் சிலர் அஞ்சுகிறார்கள். ஆனால் அண்மையில் வெளியான ஒரு செய்தியில் ஆதாரம் இருந்தால் பெட்ரோலியம் கலந்துள்ள சில பாறைகளிலிருந்து அதைப் பிரித்தெடுத்து, உலகின் பெட்ரோலிய சாதனங்களைப் பெருக்கிக்கொள்ளமுடியும். பலவகை நோய்களை விளைவிக்கும் நுண்மங்களின் (Bacteria) உறவினர் சிலர் இதில் நமக்கு உதவி புரிவர்! வேறுவகைகளில் பெட்ரோலியத்தைப் பிரித்தெடுக்க முடியாத சில களிமண் பாறைகளில் சில நுண்ம வகைகளை வளரவிட்டால் அவை ஏராளமாகப் பெருகி, 'ஓண்ட வந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டிய' கதை போலப் பாறையில் ஒட்டிக்கொண்டிருக்கும் பெட்ரோலியத்தை அகற்றிவிடுகின்றன! இதனால் பெட்ரோலியம் பிரிந்து மேலே வந்துவிடும். இப்போது பயனற்றவை எனக் கருதப்படும் பழைய எண்ணெய்க் கிணறுகளிலிருந்து மீண்டும் பெட்ரோலியத்தைப் பெறவும் எண்ணெய் கலந்த பாறைகளிலிருந்து அதைப் பிரித்தெடுக்கவும் இம்முறை பயன்படும்.

## மருத்துவ ஆராய்ச்சியில் கோபுரத் துப்பாசை

கோயிற் கோபுரம் போன்ற பழைய கட்டடங்களின் மேலும், பாறைகளின் மேலும் படரும் பாசை வகைளுக்கு யோகம் பிறந்திருக்கிறது! இத் தாவரத்தை வெறுப்புடன் நோக்கிய காலம் போய்ப் புகழ்பெற்ற மருத்துவர்களும் இதை மரியாதையுடன் கவனிக்கும் காலம் வரலாம். இத்தாவர வகைக்கு லைக்கன் (Lichen) என்று பெயர். நமது நாட்டில் வளரும் சில லைக்கன் வகைகள் கொடிய நோய்க் கிருமிகளைக் கொல்லுந் திறன் உள்ளவை என்று இந்தியாவில் நடைபெற்ற மருத்துவ ஆராய்ச்சி தெளிவாக்கியுள்ளது. கவனிப்பாரற்றுக் கிடந்த இந்த எளிய தாவரம் மனிதனுடைய நோய்ப்பகைகளில் கொடிய க்ஷயத்திற்கு மருந்தாகும் காலம் வரலாம். இந்த ஆராய்ச்சியின் விளைவாகவாவது இத்தாவரத்துக்குக் கிராக்கி ஏற்பட்டு நம் நாட்டுக் கோயில்களுக்கும் சரித்திரப் பிரசித்தி பெற்ற பழைய கட்டிடங்களுக்கும் விடிவுக் காலம் பிறக்கட்டும்!



## திருமணம்

மதராஸில் ஸிம்ஸன் குரூப் கம்பெனிகளுக்கு சேர்மெனான ஸ்ரீ எஸ். அனந்தராமகிருஷ்ணன் அவர்களின் புதல்வி **செள. கல்யாணிக்கும்,** கல்லிடைக்குறிச்சி பாங்கர் ஸ்ரீ ஆர். எஸ். ஏ. சங்கர அய்யர் அவர்களின் குமாரன் **ஸ்ரீ சுந்தரத்திற்கும்** 28–5–53 அன்று சிறப்பாக திருமணம் சென்னையில் நடந்தேறியது, திருமணத்திற்கும், மாலையில் வரவேற்பிற்கும் தேசப் பிரமுகர்கள் உள்பட 10000க்கு மேற்பட்டவர்கள் விஜயம் செய்திருந்தனர்.

தொடர் கதை

# லக்ஷ்ய புருஷன்

கே. சுந்தரம்மாள்

12

இவர்கள் இருவருமாகக் குழந்தையை அழைத்துச் செல்ல, பள்ளிக்கூடம் தடைப்பட்டதைக் கண்ட ராஜாவின் தாய், 'இனி குழந்தையை அழைத்துப் போக வேண்டாம். நான் பார்த்துக்கொள்ளுகிறேன்' என்றாள். ஒரு முறை விட்டுச் சென்றார்கள். நான்கு நாளில்லை, குழந்தை அம்மா அம்மாவென்று அழுது ஜ்வரம் வந்து விட்டது. பிறகு ஹேமா 'இன்னும் கொஞ்ச நாட்கள் வரை படிப்பு நான் சொல்லிக் கொடுத்துக் கொள்ளுகிறேன். பிறகு பார்த்துக் கொள்ளலாம்' என்று அழைத்துச் செல்ல ஆரம்பித்தாள். இவர்களின் போக்கு, தாயாருக்குப் பிடிக்கவில்லை. ஜாடையாகச் சொல்லிப் பார்த்தாள். பலனில்லை. இதே நிலைமையில் இரண்டு வருஷம் சென்றன. நாளாக நாளாக, இருவர் மனமும் அமைதியை இழந்துவிட்டது. இருவரும் சேர்ந்து வீட்டில் இருப்பது என்பது மாதத்தில் பத்து நாள் கூட இருக்காது. அந்தச் சமயங்களில், 'அவராக நீ இப்படிச் செல்லுவது எனக்குச் சம்மதமில்லை' என்று சொல்லிவிட்டால் எல்லாவற்றையும்விட்டு நிம்மதியாக, இருக்கலாம் ஆனால் அவர் லக்ஷ்யம் கலைதானே? எப்படி எதிர்பார்ப்பது' என்று நினைத்து மனம் புழுங்குவாள்.

'கலைத்தொண்டு போதும். பழையபடி குடும்பப் பொறுப்பில் வாழ்க்கை நடத்தலாம். நீங்களும் விட்டுவிடுங்கள். நானும் விட்டு விடுகிறேன்' என்று சொன்னால் 'என் லக்ஷ்யம் கலை. ஆனால் உனக்கு விருப்பமில்லாவிடில் வேண்டாம்' என்று சொல்லிவிடலாம்' என்று நினைப்பாளே தவிர, காரியத்தில் ஒன்றும் நடைபெற முடியவில்லை. இருவர் ஏற்றுக்கொண்ட தொண்டும் மிகமிகப் பிரசித்தமடைந்தன. அவர்கள் மனம் மட்டும் எதையோ இழந்துவிடுவது போன்ற உணர்ச்சிக்கு இடம் கொடுக்கலாயிற்று.

படக்கமிட்டியில் வயது சென்ற ஒருவர் மெம்பராக இருந்தார். ஒரு படமுதலாளியும்கூட. அவர் ராஜாவுடன் பட்டணம் வந்தவர். ஹேமாவின் நடனம் பார்த்தார். ஒருவாரம் அவர்கள் வீட்டில் தங்கியிருந்தவர், புறப்படுமுன் ராஜாவினிடம் தனிமையில் பேச விரும்பினார்.

'மிஸ்டர் ராஜா. நான் ஒரு படமுதலாளி. எந்தப் பொருளையும் படக்கண் கொண்டு பார்த்துக் கரைகண்டவன். என் தலை அது விஷயத்தை எடுத்துச் சொல்லும். இந்த ஒரு வாரம் உங்கள் வீட்டில் தங்கினதில் என் மனதில் தோன்றிய விஷயத்தை எடுத்துச் செல்லுவது என் கடமை என்று தோன்றினதினால் சொல்லுகிறேன். உமது மனைவியின் ஸௌந்தர்யத்திற்கு ஈடு சொல்லத் தற்சமயம் இந்தியாவிலேயே இல்லையென்று சொல்லிவிடலாம். நடனம் அதி அற்புதம். உங்களுக்கு ஸகல ஸௌபாக்யங்களும் பொருந்தியிருக்கின்றன. ஆனாலும் உங்கள் இருவர் மனதிலும் ஏதோ குறையிருப்பது போல் என் மனதிற்குத் தோன்றுகிறது. குடும்பத்தையும் கவனித்துக்கொண்டு வெளி விவகாரங்களில் பங்கெடுத்துக் கொள்ளுவதில் உங்கள் மனைவிக்குச் சிரமம், கவலை. உங்கள் தாயார் உத்ஸவ ஏற்பாட்டிற்காக ஊருக்குச் சென்றிருப்பதாகச் சொன்னார்கள். குழந்தையை வீட்டில் விட மனமில்லாமலும், அழைத்துச் செல்லுவதில் சிரமம் போலும், தங்கள் மனைவிபட்ட சிரமத்தைப் பார்க்கும் பொழுது, உங்கள் நிர்ப்பந்தத்தின் மீது இருக்குமோ என்றுகூட நினைக்கும்படியாக இருந்தது. ஏன் இந்த நிலைமை? கலைக்குச் சேவை செய்யலாம். அதற்கும் ஓர் எல்லைவேண்டும். குடும்பம் என்று இல்லாதிருந்தால்தான் முழுநேரத்தையும் கலைக்குச் செலவிடலாம். குடும்பம் ஏற்பட்டுவிட்டால் குடும்பத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து விட்டு, கலைத் தொண்டைப் பொழுது போக்காக வைத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் வாழ்க்கையில் மனிதன் நன்மைபெறலாம். எனக்குப்பட்டதை எடுத்துச் சொன்னேன். பிறகு உங்களிஷ்டம்.

'மிஸ்டர், நான் ஒன்றும் கட்டாயப்படுத்துவதில்லை எந்த விஷயமும் அவளிஷ்டப்படிதான், நான் குறுக்கிடுவதில்லை. எந்த விஷயமானாலும் ஓர்லக்ஷ்யம் இருக்க வேண்டுமென்றுதான் என் விருப்பம். உங்கள் புத்திமதியையும் ஏற்றுக்கொண்டு நடக்கிறேன்' என்றான்.

'உங்கள் லக்ஷ்யத்திற்குப் பெண்களின் மனதைப் புரிந்து கொள்ளும் சக்தியில்லை யென்று நினைக்கிறேன்.'

'அட இப்படியே யாவரும் நமக்கு ஒருபட்டம் கொடுக்கிறார்களே' என்று நினைத்தான்.

அவர் சென்ற மறுநாள் ராஜா ஹேமா இருவரும் வீட்டிலிருந்தனர். மத்யானம் சாப்பாடானதும், வெற்றிலைத்தட்டுடன் மாடியில்

ராஜாவின் அறைக்கு வந்தாள் ஹேமா. கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தான். இவளைக் கண்டதும் 'அம்மா இப்படி வந்து எவ்வளவு நாட்களாகி விட்டது. இப்படி உட்கார்'' என்று தன் பக்கத்தைச் சுட்டிக்காட்டினான். ஸ்டூலின்மீது தட்டைவைத்துவிட்டு அவனருகில் உட்கார்ந்து வெற்றிலைமடித்துக் கொண்டிருந்தாள். அவளையே கண் கொட்டாமல் பார்த்தவாறிருந்தவனின் கையில் வெற்றிலையைக் கொடுத்துவிட்டு. 'என்ன இப்படிப் பார்க்கிறீர்கள்?' என்றாள்.

'உன் அழகை அள்ளிப் பருகுகிறேன்!'

'இப்போழுது என்ன புதிய மெருகு?'

'எட்டு வயது முதல் உன்னைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறேன்.

'கிட்டத்தட்ட ஆறுமாதத்திற்கு மேலேயே என்று சொல்லலாம். உன்ஸௌந்தர்யம் ஜ்வலிக்கவே செய்கிறது. யார் பார்த்தாலும் சற்றுப் பிரமித்துவிட்டுத்தான் திரும்புகிறார்கள். உன்னைப் பதினாறுவயதிற்குமேல் ஒருவரும் மதிக்கவில்லை.'

''உங்களைக் கூடத்தான் முப்பத்திரண்டு வயதிற்கு மேலாகி விட்டதென்று யாராவது சொல்லமுடியுமா? இருபத்திரண்டு வயதுதான் மதிக்கிறார்கள். கட்டுப்பாடான கவலையில்லாத நமது வாழ்க்கை அவ்வித சோபையைக் கொடுக்கிறது. இதிலென்ன ஆச்சர்யம்?'

'ஆச்சர்யமொன்றுமில்லை; பொங்கிவரும் உன் எழில் என்மனதில் பயத்தை உண்டாக்குகிறது.. இன்று எண்ணெய் ஸ்னானம்செய்திருக்கிறாய் ஒரு நகையில்லை, நீ உடுத்தியிருக்கும் வாயில்புடவைக்கே ஒரு தனிச் சோபை.'

'ஏன்? காரணம்?'

'இவை அனுபவிக்கும் பாக்கியத்திற்கு இடையூறு நேராதிருக்க வேண்டுமே. நம்மைப் பிரித்து விட்டால்?' என்றான். அவள் மடிமீது கிடந்த அவன்கை நடுங்கிற்று.

'அதைப் பிடித்தவண்ணம், பார்யா ரூபவதி சத்ரு, என்று ஒருவர் கண்ணைப் பிடுங்கிவிட்டதாகக் கதையுண்டு. நீங்களும்.........'என்று சிரித்தாள்.

'விளையாடவில்லை ஹேமா! உண்மையில் என் மனம் அஞ்சுகிறது?'

இச்சொல் அவளுக்கு அதிர்ச்சி கொடுத்தது. இப்பொழுது அவள் தேகமே நடுங்க ஆரம்பித்தது. 'என்ன? நீங்களா இவ்விதம் பேசுகிறீர்கள்? அன்று மரணம் கூட நம்மைப் பிரிக்காது என்று சொன்னீர்களே. நான் அதைத்தான் நம்பிக்கொண்டிருக்கிறேன்' என்று சொல்லும் பொழுதே அவளுக்கு அழுகை வந்துவிட்டது. பரந்த அவனது மார்பில் முகத்தைப் பதித்துக் கொண்டு விம்மினாள்.

அவளை இறுக அணைத்துக் கொண்டதுதான் அவனால் செய்ய முடிந்ததே தவிர சமாதானமாக ஒருவார்த்தைகூட வெளிவரமறுத்தது. மறுநாள் சாயங்காலம் நாலுமணிக்கு உடுத்துக் கொண்டு அவள் அறைக்கு வந்தாள். கட்டிலில் படுத்துக் கொண்டிருந்த ராஜாவை, 'நீங்கள் உடுத்துக் கொள்ளவில்லை? நாழியாகிவிட்டதே' என்றாள்.

'லேசாகத் தலையை வலிக்கிறது. வரவேண்டாமென்று நினைக்கிறேன்.'

'ஐயோ! மத்தியானமே சொல்லியிருந்தால் நான் வரவில்லையென்று சொல்லி அனுப்பி வேறு ஏற்பாடு செய்யச் சொல்லியிருக்கலாம். இனிமேல் ஒன்றும் செய்யமுடியாதே' என்றாள் பதறியவளாக.

'நீ வருவதாக அறிவித்துவிட்டுப் போகாது போனால் என்னவாகும் தெரியுமா? தியேட்டரே உடைபட்டுவிடும்.'

'உங்களை இந்த நிலைமையில் விட்டுவிட்டுப் போனால் என் ஆட்டத்திற்கே மலைப்பிஞ்சுப் பிரஸண்ட் கிடைத்துவிடும். எனக்கு என்ன செய்வதென்று புரியவில்லை' என்று அருகில் வந்து உட்கார்ந்துகொண்டாள்.

சற்று நேரம் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அவள் கைகள் நெற்றியை வருடிக்கொண்டிருந்தன. வருடின அவள் கையைப் பிடித்துக்கொண்டு எழுந்து உட்கார்ந்தவன், 'சரி' எழுந்திரு நானும் வருகிறேன். சென்றதும் புரோகிராமை மாற்றி உன் ஆட்டத்தை முதலில் வைத்துக்கொண்டு சீக்கிரம் திரும்பிவிடுவோம்' என்றான்.

* * *

இரவு சற்றுத் தலைவலி குறைந்திருக்கிறது என்று சொன்னதாலும் ஆடிவிட்டு வந்த அலுப்பினாலும் படுத்தவுடன் தூங்கிவிட்டாள் ஹேமா. பாதி இரவில் கண்விழித்தாள். அவன் தூங்காமல் புரளுவது தெரிந்தது. குழந்தைக்குப் பக்கத்தில் ஒரு தலையணையை வைத்துவிட்டு, எழுந்து அவன் கட்டிலுக்கருகில் வந்து நின்றாள். கண்களை மூடியவண்ணம் படுத்திருந்தாலும் தூங்கவில்லையென்பது அவன் விடும் மூச்சிலிருந்து தெரிந்தது. பக்கத்திலிருந்த விளக்கைப் போட்டாள். கண்ணைவிழித்துப் பார்த்தான். கண்கள் இரத்தம்போல் சிவந்திருந்தன. அருகில் உட்கார்ந்து ''உங்களுக்கு என்ன செய்கிறது. தூங்கவே இல்லையா?'' என்றாள்.

'ஒன்றுமில்லை. நின்ற தலைவலி அதிகமாகி விட்டது' என்றான். மேலே கையை வைத்தாள் ஜ்வரம் நெருப்பாகக் காய்ந்தது. பதறியவளாக 'ஐயோ ஒருநாளுமில்லாத விதமான ஜ்வரம் வந்து விட்டதே' என்று போர்வையை நன்றாக இழுத்து

மூடிவிட்டு, அவன் நெற்றியையும், தலையையும் லேசாகப் பிடித்துவிட்டாள்.

'இவ்வளவு நாழி தூக்கம் வரவில்லை. இப்பொழுது வரும்போலிருக்கிறது. நீ போய்ப் படுத்துக்கொள். உன் உடம்பிற்கு முட்டும் கண் விழிக்கலாமா? என்ருன்.

'எனக்கு எப்படித் தூக்கம் வரும்? நான் இப்படியே தலையை வருடிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் தூங்குங்கள்; பிறகு நான் தூங்குகிறேன்' விடிந்தபின்பு டாக்டர் வந்து பார்த்தார். ஜ்வரம் அதிகமாகவே இருந்தது.

'ஆரோக்கியமான தேகம். திடீரென்று ஜ்வரம் வரக் காரணம்? ஏனம்மா. அதிர்ச்சி தரும் விஷயம் ஏதாவது நடந்ததா?' என்று கேட்டார். நிரம்ப நாட்களாகக் குடும்ப டாக்டராக இருந்து வரும் மாதவன்.

'எனக்குத் தெரிந்து ஒன்றுமில்லை. டாக்டர், எனக்குப் பயமாயிருக்கிறதே. அம்மாகூட ஊரில் இல்லை,' என்ருள் பரிதாபமாக.

'பயப்படாதே. ஒன்றுமில்லை. நாளைக்குக் குறைந்துவிடும், ஊசி போடுகிறேன். கவனமாய் மருந்துகொடு' என்று ஆறுதல் கூறினுர். மறுநாளும் ஜ்வரம் இறங்கவில்லை. சுய உணர்வு இல்லாமல் பேச ஆரம்பித்துவிட்டான். நினைவின்றிப் படுத்திருக்கும் அவன் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும்பொழுது, அவன் அன்று சொன்ன "நம்மைப் பிரித்துவிடுமோ?' என்ற வாக்கியமே திரும்பத் திரும்ப அவள் காதில் ஒலித்தது. மனம் பதறியது. தேகமெல்லாம் பற்றியெரிவதுபோன்ற உணர்ச்சி. தெய்வம் சதிசெய்துவிடுமோ? என்று நினைக்கும்பொழுது அவளால் சிந்திக்கவே முடியவில்லை. பிறகு தான் ஒரு நிமிஷம் கூடத் தாமதிக்கமாட்டாள். ஆனுல் குழந்தை பிரதிபா?' அவளால் தாங்கமுடியாத துக்கம் பீறிட்டுக்கொண்டு வருர், அவன் பக்கத்தில் தலையணையில் முகத்தைப் பதித்துத் தேம்பித் தேம்பி அழுதாள். அன்று சாப்பிடவேயில்லை. சமையல்காரன் மூலமாகத் தெரிந்த வேலைக்காரி,

'என்னம்மா, நீ இப்படிப் பட்டினி கிடக்கறே. மனுசான்னு உடம்புக்கு வராதா? ஐயாவிற்கு ஒண்ணுமில்லை. நாளைக்கே கண்ணை விளிச்சுருவாரு. மெய்யோ பொய்யோன்னு இருக்கும் நீ இப்படி இருந்தா உடம்பு என்னத்துக்கு ஆவும்? எளுந்திரு, மோரைவிட்டுக் கரைச்சு ஒருவாய் குடிச்சுட்டு வா. அவருக்குச் செய்ய உனக்குத் தெம்பு வேண்டாமா?' என்று வற்புறுத்தினுள். அவள் சொல்வதிலும் உண்மையிருக்கிறது என்று எண்ணி ஏதோ சாப்பிட்டாள்.

டாக்டருக்கும் ஜ்வரத்தின் காரணம் பிடிபடவில்லை. இவளுக்கும் புரியவில்லை. அவரோ அதிர்ச்சி என்று சொல்லுகிருர். என்ன அதிர்ச்சி? மறுநாளும் ஜ்வரவேகம் குறையவில்லை. நினைவும் தெரியவில்லை.' பயமொன்றுமில்லை, நாளைகண்டிப்பாக ஜ்வரம் குறைந்துவிடும். என்ருலும் நீ தனியாக இருப்பது உனக்குக் கஷ்டமாக இருக்கும். அவன் தாயாரை வரும்படி தந்திகொடு' என்று சொன்னுர். அதுவேறு இவள் மனதில் கவலையை அதிகப்படுத்தற்று.

அன்றுமத்யானம் வண்ணுனுக்குத் துணிபோடவேண்டியிருந்தது. மற்றவைகளை வேலைக்காரன் எடுத்துப்போட்டான். ராஜாவின் கோட், ஸூட் இவைகளின் பாக்கெட்டைப் பார்த்துவிட்டுப்போடுவதற்காக ஹேமா சென்ருள். அவன் கோட் உள்பாக்கெட்டில் ஓர்சிறிய டைரி இருந்தது. இருவரும் டைரி எழுதும் வழக்கம் உண்டு. ஹேமா எட்டாம் வகுப்புப் படிக்கும் பொழுதே ராஜாவினுல் தூண்டப்பட்டு எழுத ஆரம்பித்தாள். இப்பொழுதும் தினசரி இரவு இருவரும் உட்கார்ந்து எழுதிவிட்டு ஒருவர் எழுதியதை மற்றவர் பார்த்து விட்டுத்தான் படுப்பார்கள். அந்த டைரி இரண்டும் ஹேமாவினிடம் தானிருக்கும்.

இப்பொழுது தனியாக இருக்கும் டைரியைப் பார்த்ததும் அவளுக்கு ஆச்சர்யமாக இருந்தது. அதுபற்றி அவள் ஒன்றும் சொல்லவில்லை. துணிகளைப் போட்டுவிட்டுவந்து அவன்பக்கத்தில் உட்கார்ந்து டைரியைப்படிக்கலானுள். ஒரு வருஷமாக எழுதப்பட்டு வந்தது. அதில் முக்யமாக இருவரும் பிரிந்திருந்த சமயங்களில், மனதில் தோன்றும் தாபங்களையும் அதற்குக் காரண கர்த்தா தான்தானு வென்றும் கேள்வியுடன் முடித்திருந்தான். ஜ்வரம் வந்ததற்கு இரண்டு நாள்முன் தேதிபோட்டு எழுதியிருந்தவிஷயம்.

'எந்தக்கலை எனது உயிரினுமினிய லக்ஷயமாக இருந்ததோ, எந்தக் கலைக்காகத் தாயார், பிரேமா, இவர்களின் வருத்தத்தைச் சம்பாதித்துக் கொண்டேனே, எந்தக் கலைக்காக ஹேமாவின் பருவ உணர்ச்சிகளைக் கட்டாயத்தினுல் வெளிக் காட்டாமலிருக்கும்படி செய்தேனே, அந்தக் கலையின் மீது சென்ற ஆறுமாதங்களாக ஆர்வம் குறைந்து வருவது எதனுல்? ஆராய்ச்சியின் பயன் பூஜ்யம்.

'எவளுடைய நடனத்தையும், ஸௌந்தர்யத்தையும் பிறர் புகழும் பொழுது எனது உள்ளம் ஆனந்தத்தால் துள்ளி விளையாடுமோ, அவளது அழகையும் நாட்டியத்தையும் பிறர் புகழக் கேட்கும்பொழுது சென்ற ஆறுமாதமாக என் மனம் சொலலொணு வேதனையடைகிறது. என்புகழ்ச்சியினுல் அவள் முகம் மலருவதைக் காணவே என்மனம் துடிக்கிறது. காரணம்? சிந்தித்துச்சிந்தித்து மண்டைதான் வலிக்கிறது.'

'ஏதாவது ஒருவிஷயத்தில் பிசகினுல் அவளைக் கண்டிக்கலாம் அதனுல் ஆறுதல் ஏற்படுமோ என்று நினைத்தால். அவள்குணம்? அந்தரங்கத்திலிருந்து அம்பலம்வரை என்னுடைய ஒவ்வொரு விருப்பத்தையும் குறிப்பறிந்து செய்யும் மனைவியின் மனதை நோகச்செய்ய எந்தக் கணவனுக்கு மனம் வரும்? அவள் மனம் கட

னத்தைப் பெரிதும் விரும்பும் பொழுது அதைத் தடுப்பது லக்ஷ்யபுருஷனின் செய்கையா? ஆனால் என் மனவேதனை தீர நான் செய்ய வேண்டுவது என்ன? என்ன? என்ன???'

அடுத்த பக்கம் திருப்பினாள். கடைசியாக நடனம் நடந்ததேதி. 'இன்று மத்யானமெல்லாம் நல்லதலைவலி. சொன்னால் அவள்மனம் கஷ்டப் மென்று லேசான தலைவலி என்று சொன்னேன். நடனத்திற்குக்கூடப் போக வேண்டாமென்றது மனம். அவளின் அன்பு வேண்டுகோள் ஹ்ருதயத்தைத் தொட்டுவிட்டது, சென்றேன். மேடைமீது ஆடும் பொழுது என்மனம் நிம்மதியாகவே இருக்கிறது. அப்பொழுது அவள் என் கண்களுக்கு என் மனைவியாகத் தோன்றுவதில்லை. சக்திசொரூபம் என்ற நினைப்பே மேலோங்கி நிற்கிறது. இந்த ஆனந்தத்திற்கு ஈடு ஏது? என்று நினைத்து மனம் அமைதியடைந்தது. மறுகணம், தலைமை வஹித்தவர், அவள் ஸௌந்தர்யத்தையும் நடனத்தின் அற்புதத்தையும் புகழ்ந்துரைக்கும் பொழுது மனதில் பேய் தோன்றிவிட்டது. அப்பொழுதே ஜ்வரமடிப்பதுபோல் உடம்பெல்லாம் தஹிக்க ஆரம்பித்துவிட்டது. வீடு வந்ததும் பெயருக்குச் சாப்பிட்டேன். நான்விழித்திருப்பது தெரிந்தால் அவள் தூங்கமாட்டாளென்பதற்காகக் கண்ணை மூடிப்படுத்திருந்தேன். இதோ நான் எழுதும்பொழுது எதிரிலுள்ள கட்டிலில் குழந்தையை அணைத்துக்கொண்டு படுத்துத் தூங்கும் தோற்றம் அப்பப்பா! கவியினால்கூட வர்ணிக்கமுடியாது. நிஷ்களங்கமான அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. இப்பொழுது மனம், இன்பம், வேதனை இரண்டும் கலந்த நிலைமையிலிருக்கிறது. இதில் என்மனதில் எது மிக நிரந்தர இடம் பெறப்போகிறதோ?'

இதைப்படித்து முடித்ததும் அவள் மனதில் பாரம் குறைந்தது போன்ற உணர்ச்சி தோன்றினது. மருந்தின் வேகமோ, அவளது பிரார்த்தனையின் பலனோ அன்று இரவு பன்னிரண்டு மணிக்கு ஜ்வரவேகம் குறைந்தது. சுய உணர்வும் வந்துவிட்டது. கண்விழித்ததும், 'ஹேமா' இப்பொழுது மணி என்ன?' என்று கேட்டான்.

'மணி இரவு பன்னிரண்டரை. உங்களுக்கு எப்படி இருக்கிறது?' என்று கேட்கும்பொழுதே அவளுக்கு அழுகை வந்துவிட்டது.

'அழாதே ஹேமா, எனக்கு ஒன்றுமில்லை. நன்றாகத் தூங்கிவிட்டேன்போலும். காலை ஒன்பது மணிக்கு மருந்து சாப்பிட்டதுதான் தெரியும்' என்று அவள் கையைப்பிடித்துக் கொண்டான். பிறகு அவன் நிலைமையை எடுத்துச் சொல்லி, அமைதியாகத் தூங்கும்படி வேண்டிக் கொண்டாள்.

மறுநாள் படுக்கையிலேயே எழுந்து உட்கார்ந்து கொள்ளவும், அந்த அறைக்குள் சற்று நடக்கவும் முடிந்தது.

அதற்கும் மறுநாள் காலை ஒன்பதுமணி. 'ஹேமா, ஹேமா' என்று உரக்கக் கூப்பிட்ட கணவனின் குரல் கேட்டுத் திடுக்கிட்டவளாக, பாதி தலை பின்னிக்கொண்டிருந்த பிரதிபாவுடன் அவன் அறைக்கு வந்தாள் பதறியவளாக.

அருகில் வந்து, 'டாக்டர் உடம்பை அதிகமாக அலட்டிக்கொள்ளக்கூடாது என்று சொல்லி இருக்கிறாரே. நீங்கள் ஏன் எழுந்துவந்தீர்கள்? என்றாள்.

'சற்றுத் தெம்பாக இருந்தது, அதனால்தான் எழுந்தேன். பத்திரிகை படிக்கலாமெனச் சாய்மான நாற்காலியில் உட்கார்ந்தேன். அவ்வளவு தான்'

'அது சரி' என்று பத்திரிகையை எடுத்து அதில் ஒரு பக்கத்தைக் காட்டி 'இது என்ன?' என்றான் பரபரப்புடன்.

அதில் கொட்டை எழுத்தில் தலையங்கம் தாங்கியிருக்கும் விஷயம்:

'ஸ்ரீநாத சர்மாவின் இரண்டு பரிசு பெற்ற நாட்டிய சக்கரவர்த்தினி ஸ்ரீமதி ஹேமமாலினி ராஜாவின், பணிவான விண்ணப்பம். கொஞ்ச காலமாக உடம்பு சற்று அஸௌகரியப்பட்டு வந்ததைக் கவனிக்காமல், நாட்டியமாடினதினால், தேக சுகாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறதென்றும் கொஞ்ச காலத்திற்கு ஓய்வு வேண்டுமென்றும் டாக்டர்களின் புத்திமதிப்படி நாட்டிய உலகினின்றும் பணிவுடன் விடை பெற்றுக் கொள்ளுகிறேன்' என்பதுடன்,

'நாட்டியம் குடும்பம் இரண்டிற்குமாகச் சேவை செய்யும் பொழுது குடும்பத்தில் கவனம் குறைந்துவிடுகிறது. இப்பொழுது குடும்ப பாரத்தை ஏற்று நடத்த வேண்டுமென்ற அவா தோன்றியதினாலும், சகோதர நாட்டிய மணிகள் முன் அணிக்கு வர வேண்டுமென்ற ஆவலினாலும் நிரந்தரமாகவே விலகிக் கொள்ள நிச்சயித்துவிட்டேன். கலைப்பணி என்பது நாம் அநுபவிப்பது மட்டுமல்லாமல் பிறர் பங்கு கொள்ளப் பாடுபடுவதும்தான் பணி. எனது நாட்டியத்தின் நடுவில், எனக்கு அவகாசமளிக்க ஆடிவரும் மீராவின் நடனத்திற்கும் எனது நடனத்திற்கும் யாதொரு வித்யாசமும் கிடையாதென்பதை என் மனம் அறியும். எங்கள் குருவும் ஒத்துக் கொள்ளுவார். உங்கள் அந்தராத்மாவும் சொல்லலாம். ஆனால் பொது மக்கள் எனது நாட்டியத்தையே அதிகம் விரும்பவும், நானும் அவர்களைத் திருப்தி செய்வித்துக் கொண்டிருந்தால், என் சகோதர நாட்டிய ரத்தினங்களின் பெயர் எப்படி முன்னுக்கு வர முடியும்? கலைக்கண் கொண்டு மீராவின் நடனத்தைப் பார்த்தீர்களானால், அவள் உங்கள் புகழுக்குப் பாத்ரமாவது நிச்சயம். கடைசியாக நான் யாவரையும் பணிந்து கேட்டுக் கொள்ளுவது, என்னைப் போலவே சகோதர நடிக மணிகளைப் பாராட்டிக் கௌரவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். இதைப் பற்றி பேட்டியோ பேச்சு வார்த்தையோ ஒன்

றையும் நான் விரும்பவில்லையென்று மிகத் தாழ்மையுடன் சொல்லிக் கொள்ளுகிறேன்' என்று எழுதியிருந்ததைப் படித்துவிட்டு, 'தலையங்கம் பத்திரிகை ஆசிரியரின் கற்பனை. மற்றவை நான் அனுப்பியது தான்' என்றாள் நிதானமாக.

'எதற்காக இப்படிச் செய்தாய்?'

'இதோ பதில்' என்று பின்னலின் ரிப்பனைக் கட்டி முடித்துவிட்டு, பீரோவைத் திறந்து சிறு டைரியை எடுத்துப் பிரித்து, அவன் முன்பாக வைத்து உங்கள் கேள்விக்குப் பதில் இதிலிருக்கின்றது' என்றாள்.

'இதை எவ்விடமிருந்து எடுத்தாய்?'

'நானா எடுத்தேன்? எனது புனிதமான காதல் எடுத்துத் தந்தது'

'எப்படிக் கொடுத்தது?' சொல்லு கேட்போம்.

'வண்ணான் மூலமாக.'

'பார்த்தவுடன் இப்படிச் செய்துவிட்டாய்? என்னைக் கேட்க வேண்டும் என்றுகூட நினைக்கவில்லை.'

'உங்களைக் கேட்கும்படியான நிலைமையில் என்னை வைக்கவில்லையே இந்த விஷயத்தில்.'

'என்ன சொல்லுகிறாய்?' என்று சாய்ந்து கொண்டிருந்தவன் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

'நீங்கள் என் மீது அன்புள்ளவரானால் மனதை ஏன் திறந்து காட்டியிருக்கக்கூடாது? உங்கள் மனம் சலனமடைந்தது வியப்பல்லவே. ஒரு பெண்ணிற்கு வேண்டுவது என்ன? கலையா? கணவனது அன்பா? உங்களை நான் அடைய முடியாது என்ற நிலைமையில் நான் கலையில் ஆர்வங் கொள்வது இயற்கை. தன் மீது அன்பைச் சொரியும் கணவனது சந்தோஷத்தைத் தவிர வேறு எதில் ஆர்வங்கொள்வாள் பெண், உங்கள் லக்ஷ்யத்திற்குப் பெண்ணின் மனதை அறியும் சக்தியே இல்லை'......... என்று முடிக்கு முன்,

'சபாஷ். ஹேமா. கடைசியாக உன் வாயினாலும் இப்பட்டம் கிடைத்துவிட்டது. பிரேமா, அம்மா, சிவஸ்வாமி' இன்று வந்த டைரக்டர்.

'உங்கள் செய்கை அப்படி இருந்தால் சொல்லாமல் என்ன செய்வது? என் மனம் எதை விரும்புகிறது' என்பதை உங்கள் மனம் ஏன் தெரிந்து கொள்ளவில்லை. உங்கள் லக்ஷ்யம் கலை. அதுதான் உங்கள் சந்தோஷம்? என்று நினைப்பில் தான் என் மனமும் கலையில் ஆர்வம் கொண்டது. உங்கள் மனம் சலனமடைகிறது' என்ற எண்ணம் என் மனதில் தோன்றியதுண்டு. ஆனாலும் என் மனதை நான் நம்பவில்லை. உங்கள் மனம் என் மீது எவ்வளவு அன்பு கொண்டிருந்தால் இத்தகைய எண்ணம் தோன்ற வேண்டும்' என்று என் மனம் எவ்வளவு சந்தோஷமடையும்? இதில் எழுதியதை என்னிடம் சொல்லியிருந்தால்? 'ஏன் இப்படி நடந்து கொண்டீர்கள்?' என்றாள் அழுதவாறு.

'அழாதே ஹேமா' உன் கண்ணீர் என் மனதை வேதனை செய்கிறது. என் மனப்போக்கு எனக்கே திருப்தியளிக்காதிருக்கையில் உன்னிடம் சொல்ல எப்படித் துணியும்? நான் மெம்பராகச் சென்ற பிறகு தான் இந்த எண்ணம் எழலாயிற்று. அதைவிட்டு விலகவும் முடியவில்லை. அந்த நிலைமையில் நான் என்ன செய்திருக்க முடியும்?'

"நீங்கள் அடிக்கடி வெளியூர் செல்ல ஆரம்பித்தீர்கள். கல்யாணமானதும் விட்டது கவலையென்று அம்மாவும் ஒவ்வொரு க்ஷேத்திரமாகப் போய்வரத் தொடங்கினார். பிரதிபாவும் பள்ளிக்கூடம் போகத் தொடங்கிவிட்டாள். மத்தியானவேளையில் வீட்டில் இருப்பது கஷ்டமாக இருந்தது. வேலையும் செய்யவேண்டும். அது உங்களுக்குப் பிடித்தமாகவும் இருக்கவேண்டுமென்றுதான் நாட்டிய சாலை செலல ஆரம்பித்தேன். ஆனால் என் மனதிற்கு இதுவிஷயம் சரியில்லையென்று தோன்றியும் அதைவிட்டு விலக முடியாதவாறு சம்பவங்கள் நிகழ்ந்துவந்தன. உங்கள் நிலைமையும் அதுதான். சிலசமயம் ஓர் விஷயத்தில் பிரவேசித்துவிட்டோமானால், மனமில்லாவிட்டால்கூட அவ்விஷயத்தைச் செய்தே தீரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது. நான் சொல்வது தவறா?'

'என் உள்ளத்தை அப்படியே எடுத்துக்காட்டிவிட்டாய். போகட்டும்; ஒரு விஷயம் உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன். ஐந்து வருஷ காலம் என் லக்ஷ்யத்திலிருந்து நழுவாமலிருக்க நீ முயற்சி எடுத்துக்கொண்டாயல்லவா? உன் உதவியின்றி நான் அவ்வித வாழ்க்கை நடத்தியிருக்கலாமா? அதுபோல் இப்பொழுது ஏதோ என் மனம் சலனமுற்றது. அதை மீட்டு, பழையபடி கலைப்பணிக்குத் தயாராக்கிவிடு. திடீரென்று இப்படிச் செய்தால் என் பெயர் உலகில் எப்படி அடிபடும்?'

'உலகத்தைப் பற்றி கவனிக்கக்கூடாது என்பது உங்கள் கொள்கை. அதை நானும் ஆதரிக்கிறேன். இனிமேல் என்மனம் நடனத்தில் செல்லாது. குடும்பத்தைக்கவனிக்கவே என்மனம் விரும்புகிறது. கலைப்பணி என்பதற்குத் தனிமையான சூழ்நிலைவேண்டும். பிரதிபாவின் அம்மா இருந்திருந்தால், என்மனதில் கலையைத்தவிர வேறொன்றிற்கும் இடமிருந்திருக்காது' என்று முடிக்குமுன்,

'அம்மா! அப்படியானால் நீ என் அம்மா இல்லையா?' என்றாள் பிரதிபா.

தூக்கிவாரிப்போட்டது. பேச்சு வாக்கில் எவ்வளவு பெரிய தவறுசெய்து விட்டோம் என்று மெதுவாகக்கூறிவிட்டு, 'யார் சொன்னது அப்படி? பிரதிபாவின் அம்மாவாகத்தான் இருக்க முடியும்; நடனம் ஆட முடியாது என்று சொன்னேன், நான்தான் உன்அம்மா, நீதான் என்கண்ணு' என்று குழந்தையை அணைத்து முத்தமிட்டுவிட்டு அணைத்தபடி கன்னத்தோடுகன்னம் வைத்துக் கொண்டாள். 'நான்தானடி உன்அப்பா' என்று

குழந்தையையும் அவளையும் சேர்த்து அணைத்துக் கொண்டான்.

'சற்றுப்பொறுத்து நிமிர்ந்து உட்கார்ந்தவன், அப்படியானால் உன் தீர்மானத்தை மாற்றப் போவதில்லையா? நட்டுவனார் என்னை என்ன நினைப்பார்?'

"அவர் உலக அனுபவம் பெற்றவரல்லவா? அவரிடம் கலந்துகொண்டே இதைச் செய்தேன். தினம் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் அவர் நாட்டிய சாலை சென்று என்னாலான உதவி செய்வதாக முடிவு செய்தோம். அவரே தான் சொன்னார். கலை, கல்யாணம் இரண்டிற்கும் மனதில் இடமிருப்பது அமைதியைத் தருவது சுலபமில்லை. பெண்ணிற்குக் கணவனது அன்பில்லாத நிலைமையில் இவை நல்ல பலன் தரும். அல்லது கணவது அன்பைவிடக் கலை பெரியதாகத் தோன்றுது' இரண்டிற்கும் சேவை என்பது இரண்டிற்கும் துரோகமாக முடியும்' என்று எடுத்துச்சொன்னார். மேலும் இனிமேல் எனது தேக நிலைமையும் இடம் தராது."

'பதறியவனாக என்ன உடம்பு? டாக்டரிடம் காண்பிப்பதற்கென்ன?'

'ஏனிப்படி பதறுகிறீர்கள்.? ஒன்றுமில்லை. டாக்டர் அவசியமுமில்லை.'

'என்ன உடம்பு அதையாவது சொல்லேன்.'

'நான் சொல்லட்டுமா?' என்றாள் குழந்தை.

'சொல்லு.'

'சுப்பம்மா சொன்னாள்: அம்மாவிற்கு மசக்கை; அதான் சாப்பிடவில்லையென்று' என்று சொன்னாள்.

'நிஜமாகவா?' என்றான்.

'பதிலுக்குச் சிரித்தாள். பிறகு 'பிரதிபா பாட்டி வரும்நேரமாயிற்று வாசலில் போய்ப்பார். பாட்டிவந்த பின்பு பள்ளிக்கூடம் போனால் போரும். நான் கடிதம் தருகிறேன்.' என்றாள்

குழந்தை வாசலைப்பார்த்து ஒரு ஓட்டம் பிடித்தாள்.'

குழந்தை சென்றதும், 'விபரம் தெரிந்துவிட்டது, பேச்சைக் கவனிக்கிறாள். இனிமேல் ஜாக்கிரதையாக நடக்கவேண்டும்' என்றாள்.

'அந்தமட்டும் அம்மாவின் பிடிவாதத்தைக் கொள்ளாமலிருக்கிறாளே' என்றான்.

'இந்த வைரத்தின் சேர்க்கைதான் அப்படிப் பிரகாசிக்கிறது.'

'பாருங்கள். இன்னும் மூன்று வருஷத்தில் நடனத்தில் என்னை மிஞ்சிவிடுவாள்'

'வேண்டாம் வேண்டாம். அவளுக்கு நடனமே கற்பிக்கவேண்டாம். என்னைப்போல் ஒரு மடையன் அவள் வாழ்விலும் குறுக்கிட்டால்?'

'வம்புச்சண்டைக்கு வழிதேடுகிறீர்கள். உங்களைப் போன்ற குணமுள்ள கணவன் அவளுக்குக் கிடைக்கவேண்டுமென்றுதான் தினம் பகவானை வேண்டுகிறேன். ஓர் கால வரையறை வரை நடன மாடவேண்டும். பிறகு குடும்பம் நடத்தவேண்டும். வழிவழியாக யாவரும் முன்னேறச் சரியான மார்க்கம்' என்று சொல்லும் பொழுதே ஹாரன் சப்தம் கேட்டது. 'அம்மா பாட்டி வந்தாட்டா' என்று கத்தியபடி பாட்டியின் கையைப் பிடித்துக் கொண்டு வந்தாள் பிரதிபா.

'ராஜா! எப்படியிருக்கிறாய்?. அம்மா. என் வயிற்றில் பாலை வார்த்தார் ராமச்சந்திரபிரபு. தந்தியைப் பார்த்ததும் என்மனம் பட்டபாடு'

'பைத்யம் ஏதோ இரண்டு நாள் ஜ்வர மடித்தால் பயந்துபோய்த் தந்தி கொடுத்து உன்னைக் காபரா படுத்திவிட்டாள்.' என்றான்.

"அம்மா! எனக்குப் பைத்யம் பிடிக்காமலிருந்ததுதான் ஆச்சர்யம். இரண்டு நாள் தம் நினைவே இல்லையம்மா. டாக்டரேதான் தந்தி கொடுக்கச் சொன்னார்' என்று சொல்லும்பொழுது கண்களில் நீர் நிறைந்து விட்டது.

"அவன் கிடக்கிறான். பெண்ணின் மனம் பற்றி அவனுக்குத்தெரிந்தது அவ்வளவுதான். உன்குணத்திற்கு ஒருகுறைவும் வராது' என்றாள். பிறகு நமஸ்கரித்து எழுந்தவளை வாழ்த்திவிட்டு, 'உன் உடம்பு ஒன்றுமில்லயே?' என்றாள்.

"ஒன்றுமில்லை, வாருங்கள் பல்தேய்த்துட்டு இவ்விடம் வந்து பேசிக் கொண்டிருங்கள். காப்பி கொண்டுவருகிறேன். பிரதிபா வா பள்ளிக்கூடம் போகலாம்" என்று பெண்ணைக் கையைப்பிடித்து அழைத்துச் செல்லும் பொழுது அடுத்த அறையில் சிவஸ்வாமி வருவதைப் பார்த்துத் திடுக்கிட்டவனாக "வாருங்கள் இப்பொழுதுதான் வருகிறீர்களா, எங்கிருந்து?" என்றான்.

"லக்ஷ்ய முடிவிற்கு மங்களம்பாட எங்கள் ஊரிலிருந்து தான் வருகிறேன்' என்றான் சிரித்தவாறு.

"என்ன?"

"சரி, உன்வேலையைக் கவனி. பிறகு விளக்குகிறேன்" என்று மேலே நடந்தான்.

தாய் கேட்டாள்: 'ராஜா இன்று காலையில் ரயிலில் பேப்பர் பார்த்தவர்கள், ஹேமா இனிமேல் நடனம் ஆடப்போவதில்லையாம், உடம்புசரியில்லையாம் என்று பேசிக்கொண்டார்களே. என்னடா, விஷயம்? அதைக் கேட்டதிலிருந்து அது வேறே பெரிய கவலையாகப் போயிடுத்து. வீடு வந்து சேருகிற வரைக்கும் என் மனம் பட்ட வேதனையை அந்த ராமச்சந்திரன்தான் அறிவார், என்ன?'

'அதாம்மா, நான் நினைவில்லாமலிருந்ததும் பயந்து போய் உனக்கும் தந்தியடித்து, பத்திரிகைக்கு இப்படி சேதியனுப்பி எல்லாம் செய்துவிட்டாள். ஏன் இப்படிச் செய்தாய் என்றால், எனக்கு ஆட இஷ்டமில்லை என்று பதில் சொல்லுகிறாள். அவளை என்ன செய்வது?'

# டால்டா வனஸ்பதி நீங்கள் செலவு செய்யும் பணத்திற்கு முழுப் பிரயோஜனத்தைத் தருகிறது







**பள்ளிசெல்லும் சிறுவர்களுக்கு பிரத்தியேக உணவுகள் தேவையா?**
இலவச ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்று வேண்டுமானாலும் எழுதுங்கள் :
**தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்**
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1




தரத்திற்கு டால்டா நிகரற்றது. டால்டா கைபடாமல் சிறந்த மூலப்பொருள்களைக்கொண்டு தயாரிக்கப்பட்டது. டால்டா எப்பொழுதும் சுத்தமாகவும், புதிதாகவும், ஊட்டமளிப்பதாகவும் காற்றுப் புகாத சீல்செய்த டின்னில் உங்களுக்குக் கிடைக்கிறது. மேலும் இது சிக்கனமானதும்கூட.

# டால்டா

## 10, 5, 2, 1 பவுண்டு டின்களில் கிடைக்கிறது.

HVM. 189-X52 TM



''ஒன்றும் செய்ய வேண்டாம் அவள் இஷ்டப் படிவிடு, கண்ணிறைந்த கணவன், சந்திர பிம்பம் போன்ற குழந்தை, இவர்களைக் கவனிப்பதைவிட ஆட்டம் பெரிசென்று தோன்றுமா பெண்ணிற்கு''

''அம்மா, பையன் உங்களை ஏமாற்றுகிறான். அதுவல்ல காரணம். உங்களுக்குப் பேரன் பிறக்கப் போகிறான். அதுதான் காரணம். உள்ளே போய்க் கேளுங்கள், உண்மை தெரியும்.' என்றான் அங்கு வந்த சிவஸ்வாமி.

'எப்பொழுது வந்தாய் சிவஸ்வாமி! நிஜமாகவா சொல்லுகிறாய்'

'நீங்கள் வந்த வண்டிக்கு எதிர்புறம் வந்ததே அந்த வண்டியில்தான் வருகிறேன். உள்ளே கேட்டால் உண்மை விளங்கும்' என்றான்.

அடுத்த நிமிஷம் ஆள் அவ்விடமில்லை.

'பார்த்தாயா ராஜா, ஒரு தாயின் ஆர்வத்தை?' என்றான் சிவஸ்வாமி.

'ஏன்டா பழி! சொல்லாமல் கொள்ளாமல் எப்பொழுது வந்தாய்? வந்ததுமன்றி இவ் விடமிருந்ததுபோல் சமாசாரம் சொல்லுகிறாய்? விஜயாவிற்குக் கடிதம் போட்டிருந்தாளா?'

'விஜயாவிற்கு அவள் ஏன் கடிதம் எழுதுகிறாள்? என்றைக்கு உன்னிடம் வந்தாளோ அன்றிலிருந்து, அக்கா, அப்பா, என்று அவள் யாரை நினைக்கிறாள்? 'அவள் உலகம் நீ' என்று நினைத்துக்கொண்டிருக்கிறாள். நீ, எந்த நிமிஷம் யார் வாயிலாக அறிந்தாயோ அதே நிமிஷம் அவள் வாயாலேயே நானும் அறிந்தேன்.'

'என்னடா பிரும்மஹத்தி சுத்தி வளைக்கிறாய் விபரமாகச் சொல்லு' என்று நாற்காலிக் கையில் உட்கார்ந்தவனின் கழுத்தில் கைபோட்டு இழுத்தான்.

'சொல்லுகிறேனடா சோழா! கேளு. ஆபீஸ் விஷயமாக இவ்வூருக்கு வரவேண்டியிருந்தது. அம்மா ஊரிலில்லையென்று தெரியவந்தது. உங்கள் தனிக்குடித்தனப் பூங்காவில் எதிர்பாராத புயல் காற்றாய் வரவேண்டுமென்று நினைத்தேன். காலையில் ரயிலில் பத்திரிகை படித்தேன். நாலு நாள் முன்கூட நாட்டியம் நடந்தது என்று பத்திரிகையில் வந்தது. என்ன உடம்பு' என்று சிந்தித்தவனாகவந்தேன். தெருக்கோடியில் மருந்து பாட்டிலுடன் முனியனைப் பார்தேன். யாருக்கடா உடம்பு என்றதற்கு, ஐயாவிற்கு, என்றான். இதென்ன விந்தை! பேப்பரில் அம்மாவிற்கு உடம்பு,' மருந்து ஐயாவுக்கு என்ன விபரீதப் போக்கு' என்று நினைத்த வண்ணம் வந்தேன். முன் ஹாலில் நுழையும் பொழுதே எதையோ பறிகொடுத்தவன்போல் ஹேமா! ஹேமா என்று கத்தினாய், அப்படியே அந்த வராந்தாவில் நுழைந்து இந்த அறைக்குப்பின் ஜன்னலின் பக்கம் திரைமறைவில் நின்றேன். புரிந்ததா?'

'புரிந்தது. சிவா! ஒரு விஷயம் நினைத்துப்பார்! இரு சகோதரிகளும் நம் இருவரின் லக்ஷ்யத்தை

யும் தவிடுபொடி செய்துவிட்டார்கள். முதல் பார்வையிலேயே உன் லக்ஷ்யம் சிதைந்தது. என் லக்ஷ்யம் சலனத்தில் சரணடைந்தது.'

'எனது லக்ஷ்யம் பிறரைப் பின்பற்றியதினால் பிரச்னைக்குரிய விஷயமாக அமையவில்லை. உனது லக்ஷ்யம்தான் சரித்திரத்தில் இடம் பெறக்கூடிய விதம் அமைந்தது. ஒன்றுமட்டும் நிச்சயம். ராஜா! சலனம் என்பது நாம் ஏற் படுத்திக்கொள்ளும் சாதனமல்ல. மனித சிருஷ்டியின் தத்துவமே சல னத்தில் அடங்கியிருக்கிறது. வாழ்க் கையின் இயல்பிலிருந்து மாறுபட் டுப் புதுவழி வகுத்து, லக்ஷ்யத்தின் பாதையில் நடக்கத் தொடங்கியவர் கள், முழுவதும் நடந்துசெல்ல முடி யாமல் சலனம் ஏற்படத்தான் செய் கிறது. மனிதனின் வாழ்க்கை ரகசி யமே அதுதான்.'




'இனிமேல் எனது வாழ்க்கை எப் படி அமையும்?'

'ஆனந்தமாக, அமைதியாக, தெளிந்த நீரோடை போலச் செல் லும். ராஜா லக்ஷ்யம், லக்ஷ்யம் என்ற பைத்யம் உன்னைப் பிடிக்கத் தொடங்கினபொழுதும் கூட இருந் தேன். S.S.L.C. படிக்கும்பொழுது புரொபஸர் சாம்பசிவம் நமது ஸ்கூ லில் சொற்பொழிவாற்றினரே! மனி தன் உண்டு உறங்கி, தன் சுகத்தையே கருதி வாழப் பிறந்தவனல்ல. அப் படி வாழ்பவன் மனிதனல்ல. ஒரு லக்ஷ்யத் தைக் கடைப்பிடித்து, அதனால் பிறர்க்கும்: தனக்கும் தொண்டுசெய்பவனே மனிதன் என்று சொன்னர். இருவரும் அந்த வாக் கியத்தைப் பிடித்துக் கொண்டோம் என்ரு லும் என்மனம் தீவிரம் கொள்ளவில்லை. நீ புரட்சி வாழ்க்கை நடத்திக் காட்டினாய். என்ரு லும், சலனத்தை ஜயிக்க முடியவில்லையென்ற தீர்மானத்திற்குத்தான் வரவேண்டியிருக்கிறது' அந்த லக்ஷ்யத்தின் முடிவின் பொழுது மங்களம் பாட, தெய்வச் செயலாக வந்து சேர்ந்தேன்." அது நமது நட்பின் பெருமையல்லவா?"

சுபம்

முற்றிற்று.

# ஆடும் நடராஜர்


ஸரோஜா ஸ்ரீநிவாஸன்

ஊதுவத்தி கக்கிய சுருள் சுருளான புகையிலிருந்து எழும்பிய கம்மென்ற மணம் பூஜை அறை முழுவதும் பரவிக் கிடந்தது. ஐந்து மூக்கும் திரியிட்டு, பிரகாசமாய் எரிந்து கொண்டிருந்த குத்து விளக்கு அறையில் தனித் தெய்விக ஒளியைப் பரப்பிற்று. குத்து விளக்கின் எரியும் சுடரையே கண் கொட்டாமல் வெறிக்கப் பார்த்தபடி சோகப்பதுமையாக அமர்ந்திருந்தாள் சாவித்திரி...சாந்தியைக் கொடுக்கும் தெய்வமணம் கமழும் பூஜை அறையில் அமர்ந்திருந்தும் அவள் உள்ளம் மாத்திரம் ஏனோ பல்வேறு துன்ப நினைவுகளினால் அலைமோதி, பொங்கி, குமுறிக் கொண்டிருந்தது. அலைபாய்ந்துகொண்டிருந்த மனதை அடக்கி அரவணைக்கும் தெம்பின்றி, அடித்து வைத்த சிலையாகி விட்டாள் சாவித்திரி. அவள் கண்களிலிருந்து பெருகிய கண்ணீர் அர்ச்சனைக் கென்று வைத்திருந்த புஷ்பங்களை நனைத்துக்கொண்டிருந்தது.

'சாவித்திரி...' அன்பு கனிந்த குரல் அறை வாசற்படியிலிருந்து எழுந்தது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள் சாவித்திரி. அவள் அம்மாதான் நின்றுகொண்டிருந்தாள். பெண்ணினுடைய கண்ணீர் அவள் நெஞ்சை துடிதுடிக்கச் செய்தது.

"சாவித்திரி...இதென்ன திருவாதிரைப் பண்டிகையும் அதுவுமா...அசடு மாதிரி அழுதுண்டு...?எழுந்துபோய், புதுப்புடவையைப் பிரிச்சு உடுத்திக்கோ; அப்பா உனக்காகப் பூஜைக்குகாத்திண்டிருக்கா; நாழியாயிடுத்து. போம்மா..." என்று ஆதரம் பொங்கும் குரலில் சொன்னாள் சாவித்திரியின் அம்மா...

"அம்மா...என்னை வீணாத் தொந்தரவு பண்ணாதே... என் வாழ்வையே சின்னா பின்னமாக்கி,என் குழந்தையையும் பிடுங்கிண்டு, 'அவரையும்' எங்கேயோ கண் காணாத ஊருக்கு அனுப்பி, எங்களிருவரையும் பிரிச்சு வச்சு, என்னை வேதனைக் குள்ளாக்கி வேடிக்கை பார்க்கும் இந்தத் தெய்வத்துக்குப் பூஜை என்ன வேண்டிக்கிடக்கு. திருவாதிரையுமாச்சு...உன் நடராஜருமாச்சு ......எனக்கு ஒண்ணுமே பிடிக்கலே அம்மா ......'என்று வெறுப்புடன் விரக்தி தோய்ந்த குரலில் பதிலளித்தாள் சாவித்திரி.

"உஷ்...அசடு இதென்ன சாவி...த த் து பித்துன்னு பேசிண்டு. நம்முடைய போறாத காலத்துக்கு தெய்வம் என்ன பண்ணும். படிச்ச பெண்ணான நீ குருட்டு நம்பிக்கையை வச்சுண்டு தெய்வத்தை நிந்தனை பண்ணக் கூடாது. சீக்கிரம் போய், புடவையைக் கட்டிண்டு, சுவாமியை நமஸ்காரம் பண்ணு. இன்னிக்கு மாத்திரம் மாப்பிள்ளையிடமிருந்து இந்த நடராஜர் கிருபையிலே நல்லகடிதாசு வரதா இல்லையான்னு பாரேன்" என்றாள் அம்மா...சாவித்திரி பதில் ஒன்றும் பேசவில்லை. மௌனமாகப் பூஜை அறையிலிருந்து எழுந்து வெளியே வந்தாள்.

* * *

வக்கீல் சாம்பசிவய்யரின் ஒரே பெண்தான் சாவித்திரி...சாவித்திரிக்கும் ராகவனுக்கும் கல்யாணமாகி இரண்டு வருஷங்களாகின்றன. ராகவன் சென்னையில் பிரபல ஜர்மன் கம்பெனி ஒன்றில் அக்கௌண்டன்டாகப் பதவி வகித்து வந்தான். மாதம் கை நிறைய நூற்றைம்பது ரூபாய் சம்பளம்... சென்னையில் ஆனந்தமாகத் தனிக் குடித்தனம் சந்தோஷத்திற்குக் கேட்க வேண்டுமா...? ராகவனும்— சாவித்திரியும் நடத்திய ஆதர்ச வாழ்வில் தேனே பொழிந்தது. புயலின்றி அமைதியுடன் ஓடிக் கொண்டிருந்த அவர்களது இன்ப வாழ்வில் துளி விஷம் தெறித்து விட்டது போல்தான் அந்தச் சம்பவம் ஒரு நாள் நிகழ்ந்தது.

அன்று புது வருஷப் பிறப்பு...ஐம்பத்து மூன்றாம் வருஷம் ஜனவரி முதல் தேதி. ராகவனுடைய கம்பெனியில் அந்த வருஷம் புதிதாகக் காலண்டர் 'பிரிண்ட்' செய்திருந்தார்கள். கம்பெனியில் வேலைபார்க்கும் உத்தியோஸ்தர்களுக்கெல்லாம் ஒரு காலண்டர் இனாமாகப் பரிசளித்தார்கள். அதில் ராகவனுக்கு ஒரு காலண்டர் கிடைத்தது... காலண்டர் சுருளும் கையுமாக அன்று சாயங்காலம் ஆபீஸிலிருந்து திரும்பி வந்தான் ராகவன். கணவனைக் கண்ட சாவித்திரி ஆவலே வடிவாய் அவன் கையிலிருந்து பேப்பர் சுருளை வாங்கிப் பிரித்துப் பார்த்தாள். மறுகணம் அவள் கண்கள் ஆச்சரியத்தால் மலர்ந்து விரிந்தன. காலண்டரில் அதிஅற்புதமாக வரையப்பட்டிருந்த சித்திரம் சாவித்திரியின் மனதை வெகுவாகக் கவர்ந்து விட்டது, ஆனந்தத் தாண்டவ மூர்த்தியாக இடது பாதத்தை லாகவமாகத் தூக்கி, பரவசமாய் நின்றாடும் நடராஜரின் சிறந்த ஓவியம் அது. கண்களைக் கொட்டாமல் ரஸிக உள்ளத்துடன் அதையே ரசித்துப் பார்த்த சாவித்திரி ஜீவகளை ததும்பும் அதன் அழகில் சொக்கி நின்றாள். சிறந்த ஓவியன் ஒருவன் தன் கலைத்திறன் முழுவதையுமே கொட்டி அற்புதமாகத் தீட்டியிருந்தான் சித்திரத்தை.

சுற்றிலும் கண்களைக் கவரும் ஒளி வாய்ந்த கருநீல வர்ணம். அதன் நடுவில் ஸ்புடமிட்ட பசும் பொன் வர்ண மஞ்சள் நிறத்திலே வட்டவடிவமான தூபதீப அலங்காரங்களுடன் கூடிய அழகிய திருவாசி வட்டத்தினுள்ளே இடது காலைத் தூக்கி நின்றாடும் எம்பிரான். திரிசடையிலே தாங்கிய பிறைச் சந்திரன்; ஒளி வீசும் சாந்தம் தவழும் கைகள்; கழுத்தைச் சுற்றி வளைத்து ஆபரணமாகப் பூண்ட நெளிந்து நிற்கும் நாகப்பாம்பு, உடுக்கை, சூலம், மழு ஏந்திய அழகிய கரங்கள்; மான்தோல் சுற்றிய துடியிடை; வலது காலை ஊன்றி, இடுப்புக்கும் மேலாக இடது காலைத் தூக்கி அற்புதமாகத் தில்லை அம்பலக் கூத்தன் ஆடும் தோற்றம்.

சாவித்திரி தன்னையே மறந்து படத்தின் அழகில் லயித்து நின்றுவிட்டாள்...

"அடேயப்பா!...என்ன பிரமிப்பு...என்ன கலை ஆர்வம்...என்ன ரஸிகத்தன்மை...... என்ன சாவித்திரி ..இந்த உலகத்தில்தான் இருக்கிறாயா இல்லாவிட்டால் நடராஜரைத் தரிசிக்க வேறு உலகத்திற்குத்தான் போய் விட்டாயா" என்று பரிகாசமாகக் கேட்ட ராகவனின் குரல் சாவித்திரியைச் சுய நினைவுக்குக் கொண்டுவந்தது.

"ஆமாம்...எப்பவும் உங்களுக்குப் பரிகாசம்தான், சித்திரத்தை பார்த்தேளா?...

அடாடாடா...என்ன அழகு சொட்றது. ஜீவகளே முகத்திலே ஒளி வீசறது. இந்த அருமையான காலண்டர் உங்களுக்கு எங்கே கிடைச்சுது?...' என்று ஆவலுடன் கேட்டாள் சாவித்திரி.

"இந்த வருஷம் நம்ப ஆபீஸிலே காலண்டர் அச்சடித்தார்கள். ஆபீஸிலே எல்லாருக்கும் ஒரு காலண்டர் இனும் கொடுத்தார்கள். அதிலே நமக்கும் ஒண்ணு கிடைச்சுது. படம் எப்படி? ரொம்ப பிர மாதமில்லே. ஜோரா நடு ஹாலிலே மாட்டி வைக்கலாம். பார்வைக்கு எடுப்பா இருக்கும்' என்று உற்சாகத்துடன் பதிலளித்தான் ராகவன்.

"இதோ பாருங்கோ படம் ரொம்ப ஜோராயிருக்கு. முன்னூடி காலண்டரைக், கிழிச்சு இந்தப் படத்திற்கு 'பிரேம்' போட்டுண்டு வாருங்கோ. நம்மாத்திலே நடராஜர் படமே கிடையாது. பூஜையிலே வைக்கலாம். லக்ஷணமாயிருக்கு.அருமையான சிலைப் பொக்கிஷம் "என்று உணர்ச்சி பொங்கும் குரலில் சொன்னாள் சாவித்திரி.

திடுக்கிட்ட ராகவன் என்னது புதுக்காலண்டரை கிழிக்கறதா. இதோபார் சாவித்திரி; இன்னிக்குத் தான் வருஷம் ஆரம்பிச்சிருக்கு. இந்த வருஷம் முடியட்டும். அப்புறம் உன் இஷ்டப்படி 'பிரேம்' போடலாம். காலண்டர் என்ன ஓடியா போயிடும்? "என்றான்.

"அதெல்லாம் முடியாது... வருஷம் முழுக்க இந்தக் காலண்டரை ஹாலிலே மாட்டி வச்சிருந்தா காத்தடிச்சு புழுதி படிந்து படம் பாழாப் போயிடும். தேதி பார்க்க வேறே சாதாரண காலண்டர் ஒண்ணு வாங்கிக் கொள்ளலாம். முன்னாடி இதைப் பிரேம் போட்டுண்டு வந்தால்தான் ஆச்சு"



என்று பிடிவாதம் நிறைந்த குரலில்சொன்னாள் சாவித்திரி.

அதற்குமேல் சாவித்திரியுடன் வாதாட விரும்பவில்லை ராகவன். தன் கட்சி அவளிடம் ஜயிக்காது என்று அவனுக்கு நன்றாகத் தெரியும்.

"சரி...உன் இஷ்டம் போலவே பிரேம் போட்டுண்டு வந்துடுறேன். மகாராணி மனசுக்குத் திருப்திதானே" என்று சிரித்தபடியே சொன்னான் ராகவன்.

தன் காரியம் ஜயித்து விட்ட வெற்றிப் புன்னகை முகத்திலே தவழ உள்ளே துள்ளி ஓடினாள் சாவித்திரி.

* * *

**இரண்டு நாட்கள் ஓடி மறைந்தன. அன்று காலை தில்லை அம்பலக் கூத்தன் நடராஜரின் படம் பிரேம் போட்டு வந்து விட்டது. சாவித்திரியின் சந்தோஷம் கட்டுக் கடங்காமல் பொங்கி வழிந்தது. ராகவன் ஆபீசுக்குப் போன**

தும் முதற்காரியமாகப் போட்டோவைப் பூஜை அறையில் மாட்டுவதில் முனைந்தாள். பக்தி சிரத்தையுடன் பாங்காகப் படத்தை மாட்டி விட்டு, அதைப் பல கோணங்களிலும் நின்று அழகு பார்த்துக் கொண்டிருந்தாள்.

'சாவித்திரி, ஒரு கரண்டி காப்பி பொடி இருந்தால் கொடேன்; நாளைக்கு திருப்பி தந்துவிட றேன்' என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தாள் அடுத்த வீட்டுப் பாட்டி.

'வாங்கோ பாட்டி' என்று அன்புடன் வர வேற்ற சாவித்திரி படத்தைச் சற்று நிமிர்த்திச் சரிப்படுத்தினுள்.

இதற்குள் பாட்டியின் கண்கள் படத்தைக் கவனித்துவிட்டன.

'ஏண்டி சாவித்திரி...நடராஜர் படமா அது... ஏது புதிசா இருக்கே. பூஜையிலேயா வச்சிருக்கே' என்று ஒன்றன்பின் ஒன்ருகக் கேள்விகளை அடுக்கிஞள் பாட்டி.

'ஆமாம் பாட்டி. நடராஜர் படம்தான். இவர்தான் நேற்று பிரேம் போட்டுண்டு வந்தார். படம் எப்படி இருக்கு; பாட்டி. லக்ஷணமா ரொம்ப நன்ரு அமைஞ்சிருக்கோ இல்லையோ' என்று உற்சாகத்துடன் பதிலளித்தாள் சாவித்திரி.

பாட்டியின் முகம் மறுகணம் சுண்டிவிட்டது. சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, 'இதோ பாரு சாவித்திரி...நீ சிறிசு...உனக்குத் தெரியாது. இந்த மாதிரி ஆடும் நடராஜர் படமே குடும்பத்துக்கு ஆகாது. அதுவும் பூஜைக்கு உதவாது. குடும்பத்தையே ஒரு ஆட்டு ஆட்டி வச்சு, சுழல அடிச்சுடும். நான் பெரிய கிழவி சொல்றதை கேளு...சில தெய்வங்கள் ரொம்பஉக்கிரகமா யிருக்கும்...சுப்பிரமணிய சுவாமி பழனியாண்டி வேஷத்திலே இருக்கும் படத்தை நீ பார்த்திருக் கயோ? அந்த படம் வீட்டிலே இருந்தா குடும் பத்தையே ஆண்டியாக்கிவிடும்னு சொல்லுவா... இதே மாதிரிதான் ஆடும் நடராஜரும். இந்த தெய்வங்களுக்கெல்லாம், கோவில், மடம் இது களிலேதான் இடம் உண்டு...வீட்டுக்கு ஆகாது... உடனே உன் அகமுடையானை எங்கேயாவது கோவிலிலே அரை ரூபாயை கொடுத்து, கொண்டு போய் படத்தை வைக்கச் சொல்லு...ஆடும் நட ராஜர் குடும்பத்தையே ஆட்டி வச்சுடுமே' என்று அங்கலாய்ப்பும் அன்பும் நிறைந்த குரலில் சொல்லி முடித்தாள் பாட்டி.

பாட்டியின் வார்த்தையைக் கேட்டதும், சாவித் திரியின் ஆவல், ஆசை, உற்சாகம், சந்தோஷம் எல்லாம் கணத்தில் ஓடி ஒளிந்து கொண்டன. மறு கணம் அவள் முகம் தொங்கி விட்டது. கவலையும், சிந்தனையின் ரேகைகளும் அவள் முகத்திலே தெளிந்தோடின.

"ஏன் பாட்டி...நிஜமாவா...எங்க அப்பா பூஜையிலே நடராஜர் படம் எனக்கு நினைவு தெரிந்த நாளா வச்சு பூஜை பண்ணுரே..." என்று சந்தேகத்தோடு கேட்டாள். பாட்டி விட வில்லை'

''உங்க அப்பா பெரியவர்...குடும்பத்திலே தலைமுறையா நடராஜர் உபாசனை இருக்கும். பூஜை, புனஸ்காரம் மந்திரம்னு எதாவது சக்தி ஜபம் எடுத்திண்டிருபபார். அதனுல் அவருக்கு தோஷமில்லை...நீ சிறுசு...சிறுசு குடித்தனக் திற்கு இது ஆகாதுடியம்மா" என்று சொல்லி விட்டு, காப்பிபபொடியுடன் போய்ச் சேர்ந்தாள் பாட்டி...

பாட்டி விதைத்து விட்டுப் போன சந்தேகத் திஞல் சாவித்திரியின் மனம் நிம்மதியின்றிச் சஞ்சலத்தில் தவித்தது... எப்பவுமே சாவித் திரிக்கு இதில் நம்பிக்கை கிடையாது...இருந் தாலும் பாட்டி பன்முறை அடித்துச் சொல்லி விட்டுப் போன போது அவளுடைய நெஞ்சிலும் ஏதோ 'கருக்' கென்று இருந்தது. ராகவன் ஆபீஸிலிருந்து வந்ததும் முதற்காரியமாக இதைப் பற்றிப் பிரஸ்தாபித்தாள்.

"என்ன சாவி! பைத்தியம் மாதிரி உளறிண்டு. உனக்கு கூட இந்த மூட கொள்கைகளிலெல்லாம் நம்பிக்கை விழ ஆரம்பித்து விட்டதா...ஆடும் நடராஜாவாவது. குடும்பத்தை ஆட்டிவைக் கிறதாவது...அசடு...பாட்டி சொன்னுள்னு நீ பேத்தி கேட்டுண்டு வந்தயாக்கும்?...பாட்டிக்குச் சித்திரத்தினுடைய அருமை என்ன தெரியும்?... பொம்மனுட்டிங்கறது சரியாத்தான் இருக்கு" என்று சாவித்திரியைக் கேலி செய்தான் ராகவன்.

'எனக்கு ஒண்ணும் தெரியாது... என்னவோ பாட்டி பெரியவர் சொல்லிவைத்தார்" என்று மெதுவாக முழுப்பி வைத்தாள் சாவித்திரி.

அன்று விஷயம் அத்துடன் போயிற்று.

ஒருவாரம் ஊர்ந்து சென்றது.

அன்று தை வெள்ளிக்கிழமை. சாவித்திரி விடியற்காலையிலேயே எண்ணெய் தேய்த்து ஸ்நா னம் செய்துவிட்டுப் பரக்கப்பரக்க ராகவனுக்கு ஆபீசுக்குச் சமைப்பதில் முனைந்திருந்தாள். காரி யம் செய்யும் அவசரத்தில் உடனே நகைகளை எடுத்துப் போட்டுக்கொள்ள அவளுக்கு ஒழிய வில்லை. ராகவன் ஆபீசுக்குப் போனதும் காரியங் களை முடித்துவிட்டு, சாவதானமாய் நகைப் பெட்டியை எடுத்துப் பார்த்த சாவித்திரி திடுக் கிட்டுப் போனுள். அவள் கழற்றி வைத்திருந்த வைர பேஸரியை அதில் காணேம். கலவர

மடைந்த சாவித்திரி பரபரப்புடன் பெட்டியெல்லாம் தேடிப் பார்த்தாள். தோடு, சங்கிலி, மோதிரம் எல்லா நகைகளும் இருந்தன. வைர பேஸரி மாத்திரம் எங்கோ மாயமாய் மறைந்து விட்டது. குளிக்கப் போகுமுன் எல்லாவற்றுடனும் அதையும் வைத்தது அவளுக்கு நன்றாக ஞாபகம் இருந்தது. சாவித்திரியின் மனசு சங்கடப்பட்டுச் சஞ்சலத்தில் தவித்தது. நாலுங்கிழமையுமாய் மூக்குத்தி, அதுவும் வைர பேஸரி தொலைந்தது அவளுக்கு அச்சானியமாய்ப்பட்டு நெஞ்சை உறுத்திற்று, சாவித்திரியினுடைய அப்பா அவளுடைய சீமந்தத்தின்போது ஆசையோடு செய்து போட்ட வைர மூக்குத்தி அது. எட்டுக் கல்லும் பளபளவென்று எல்லா வர்ணங்களையும் வாரி இறைத்து ஜாஜ்வல்யமாய் ஒளி வீசுமே...நினைக்க நினைக்கச் சாவித்திரிக்கு நெஞ்சு ஆறவேயில்லை. வீடு முழுவதும் சல்லடையாகச் சலித்துத் தேடிவிட்டாள். மூக்குத்தி போனது போனதுதான். பாட்டி சொன்னதுபோல் நடராஜர் படம் வந்த வேளைதானோ முந்நூறு ரூபாய் மூக்குத்தி தொலைந்து விட்டது. சாவித்திரியின் உள்ளத்தில் சந்தேக வித்து முளை விட்டுவிட்டது.

அன்று முழுவதும் காரியமே ஓடவில்லை அவளுக்கு. வைர பேஸரி அவள் கண்முன் நின்று அவள் சஞ்சலத்தை அதிகப் படுத்திற்று.



சாயங்காலம் ஆபீஸிலிருந்து ராகவன் வந்தான் மென்றுவிழுங்கியபடி விஷயத்தைச் சொன்னாள் சாவித்திரி...ராகவனுக்கு எரிச்சலும் கோபமும் பற்றிக் கொண்டுவந்தன. வைர பேஸரி தொலைந்து முந்நூறு ரூபாய் நஷ்டமானது கூட அவனுக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. சாவித்திரி நடராஜர் படம் வந்த வேளைதான் பேஸரி கெட்டுப் போய் விட்டது என்று மனக் குறையுடன் குற்றம் சாட்டிப் பேசினதுதான் அவன் கோபத்தை அதிகமாகக் கிளறி விட்டது.

"சாவித்திரி...முட்டாள் தனமாய் உளறாதே... நீ ஞாபகப்பிசகாய் எங்கே வைத்தாயோ...சாக்கடைக்கோ குப்பைத் தொட்டிக்கோ பேஸரி அர்ப்பணமாகி விட்டது...உன் அஜாக்கிரதைக்கும் அசிரத்தைக்கும் சுவாமி படத்தின் மீது குறை கூறி என்ன பிரயோஜனம்?...இன்னொரு தடவை என்னிடம் இதைப் பற்றிப் பேசாதே" என்று கடுமையான குரலில் கோபத்துடன் இரைந்தான் ராகவன்.

சாவித்திரியால் தனக்குள்ளாகவே அங்கலாய்த்து வருத்தப்படுவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை...கடைசியாகச் சாவித்திரியின் மனதில் ஒரு விரிசலை ஏற்படுத்திவிட்டு, பேஸரி ஒரேயடியாக மறைந்துவிட்டது...பேஸரி காணாமற் போனதிலிருந்து சாவித்திரிக்கு நடராஜர் படத்தைக் கண்டால் ஏனோ அசிரத்தையும் வெறுப்பும் தட்டின... ஆனால் அவள் சந்தேகத்தை அதிகரிக்கச் செய்து அவநம்பிக்கை பிறக்கும் படியான மற்றொரு சம்பவம் சீக்கிரத்திலேயே நிகழ்ந்தது.

ஒரு நாள் காலை... சாவித்திரி கைக்குழந்தைக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டி, தூளியில் விட்டிருந்தாள். மத்தியானம் பால் புகட்டுவதற்காகத் தூளியிலிருந்து குழந்தையை எடுத்தவள் தீயை மிதித்தவள் போல் பதறிப் போனாள். குழந்தையின் உடம்பு ஜ்வரதாபத்தில் அனலாகக் கொதித்துக் கொண்டிருந்தது. வாழைக் குருத்துப் போல் சுருண்டு சுயநினைவின்றி, கண் மூடி, தன் கைகளில் துவண்டு இருந்த குழந்தையைக்கண்ட சாவித்திரியின் நெஞ்சு வெடித்து விடும்போல் ஆயிற்று. அவளையுமறியாமல் அவள் கண்கள் நடராஜர் படத்தை நோக்கின. சாந்தம் தவழும் தெய்வீக மூர்த்தியான நடராஜர் ஏனோ அவள் கண்களுக்கு முப்புரம் எரித்த ருத்திரமூர்த்தியின் ஊழித்தாண்டவ ரூபமாய்க் காட்சி அளித்தார். சாவித்திரிக்குச் சந்தேகம் ஊர்ஜிதமாகிவிட்டது. படம் வந்த வேளைதான் நன்றாயிருந்த குழந்தையைப் படுத்துகிறது என்ற எண்ணம் வலுவடைந்தது.

இரண்டு நாட்களாக விடாது அடித்த ஜ்வரமும் கபமும் மூன்றுமாதக் குழந்தையின் உயிரைக்

SANKAR
IC
BRAND

# சங்கர் பிராண்ட்

**போர்ட்லண்ட் சிமெண்ட்**

**திடத்திலும் தரத்திலும் தேர்ந்தது**

**உறுதியும், அழகும் அமைந்த
கட்டிட திட்டங்களுக்கு
இன்றியமையாதது.**

—தயாரிப்பவர்:

## இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்:-
**11/12, செகண்ட் லேன்பீச்,
மதராஸ்.**

தொழிற்சாலை:-
**சங்கர் நகர்,
திருநெல்வேலி ஜில்லா.**

நாடெங்கும் IC ஸ்டா
கிஸ்டுகள் மூலம் வினி
யோகிக்கப்படுகிறது.




*Retail Branches:*

**285, China Bazaar Road,
MADRAS.**

**71, Pondy Bazaar, T. NAGAR.**

கவ்வ எமதர்ம ராஜனுக்குப் போதுமானதாயிருந்தன. குழந்தை அவளைத் தவிக்க விட்டு எட்டாத உலகத்திற்குப் பிரிந்து போய் விட்டான். சாவித்திரி உன்மத்தம் பிடித்தவளாகி விட்டாள். ஆற்ருமையுடன் ஆத்திரத்தில் ராகவனிடம் படபட வென்றுவார்த்தைகளைக் கொட்டித் தீர்த்தாள். ஆனல் ராகவன் எதற்கும் பதிலளிக்க வில்லை. விதியின் தலையில் பழியைச் சுமத்திவிட்டு மௌனமாக வளைய வந்தான். நடராஜர் படம்-பாட்டி சொன்ன அனுபவ பூர்வமான உண்மை—அதை மெய்ப்பிப்பவைபோல் ஒன்றன்பின் ஒன்ருய் நேர்ந்த சூருவளி போன்ற சம்பவங்கள்-சாவித்திரியின் நெஞ்சில் எண்ணங்கள் மாறிமாறிப் போராடிச் சுழன்றடித்தன. நடராஜரின் படம் அவளுக்கு வேம்பாகக் கசந்து விஷமாகத் தோன்றியது. அதை அப்படியே சுக்கு நூருக உடைத்துச் சிதறிவிடவேண்டும் போல் அவள் கைகள் துடிதுடித்தன ஆனல் தாண்டவ மூர்த்தியோ படத்திலிருந்தபடியே அமைதியாகச் சாவித்திரியைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தார்.

* * *

யாதொரு மாறுதலுமின்றி ஒரு மாதம் ஓடி மறைந்தது. தில்லை அப்பனின் படம் கவனிப்பாரின்றி, சுவரிலே தொங்கிக் கொண்டிருந்தது. அந்தப் படம் வீட்டிலிருக்கும் வரையில் ஏதோ பெரிய ஆபத்து தன்னைச் சூழ்ந்திருக்கிறது என்ற பிரமை சாவித்திரிக்கு உண்டாயிற்று. இன்னும் என்ன என்ன கஷ்டங்களெல்லாம் நேரப்போகின்றனவோ என்று மனம் கலங்கிஞள். ஆனல் சோதனையேபோல் கடைசியில் அவள்பயந்தபடியே நடந்து விட்டது. ராகவனுக்கும் அவளுக்கும் இடையே பெரிய பிளவையே ஏற்படுத்தி அவர்களிருவரையும் பிரித்து வைத்து விட்டது. ஆம்...அலகாபாத்தில் கிளைக் காரியாலயம் ஒன்றை ஏற்படுத்தி அங்கு ராகவனை மாற்றி அனுப்பி வைத்தார் கம்பெனி முதலாளி. ஒரே வாரத்தில் உடனேயே ராகவன் அலகாபாத் சென்று டியூட்டியில் சேர வேண்டும்என ஆர்டரில் கண்டிருந்தது. ராகவன் சாவித்திரியிடம் சமாதானமாகவே விஷயத்தைப் பிரஸ்தாபித்தபோது சாவித்திரி ஆவேசம் வந்தவளாகமாறிவிட்டாள்.

'எனக்கு அப்பவே தெரியுமே... என் குடியைக் கலக்கத்தான் இந்த அழகு கலை பொக்கிஷம் வந்திருக்கின்றதென்று, என்னை கேலி செய்தீர்கள். இப்பொழுது ஒன்றன் பின் ஒன்ருய் நேர்ந்த துர்சம்பவங்களை பார்த்தேளா...உங்கள் அசட்டு பிடிவாதத்தின் முடிவு கடைசியில் நம்பிரிவில் முடிந்து விட்டதே.' என்று ஆற்றமாட்டாமல் அழுதாள். விரைவில் வீடு பார்த்து அழைத்துப் போவதாகச் சாவித்திரியை பிரம்ம பிரயத்தனப்பட்டுச் சமாதானப்படுத்தி, தேறுதல் வார்த்தைகள் கூறிஞன் ராகவன். கடைசியில் சாவித்திரியைப் பிறந்தகத்தில் விட்டு ராகவன் அலகாபாத் போஞன்.

குடித்தனம் கலைந்து ராகவனும் சாவித்திரியும் வடதென் துருவங்களாகப் பிரிந்து விட்டனர்.

தேதியைப் பார்த்தாள் சாவித்திரி. நடராஜர் படம் வீட்டுக்கு வந்து இரண்டு மாதங்கள் ஆகியிருந்தன. இந்த இரண்டு மாதமும்.........



‘அட பாழுந் தெய்வமே! என் குடித்தனத்தையே அடியோடு கலைத்து, ஆட்டிவைத்து எங்களை மூலைக்கொருவராக பிரித்து, உன் சக்தியை நிரூபித்து விட்டாயே!’ என்று சாவித்திரியின் நெஞ்சு புலம்பிற்று. எல்லையற்ற ஆத்திரத்தில், விஷமாக வெறுத்து, சாவித்திரி கழற்றி எறிந்து, சாமானோடு சாமானாகக் கண்ணாடி உடைந்து சிதறி வந்த நடராஜர் படம் இன்று புதுமலர்ச்சி பெற்றுச் சாவித்திரியின் அப்பாவினுடைய பூஜையில் ஏறி, சிறந்த இடம் ஒன்றைப் பெற்றுவிட்டது... ஆனால் சாவித்திரி...சோகப் பதுமையாக உடைந்த உள்ளத்துடன் உயிரோடு நடமாடி வந்தாள்...

* * *

தன்னைச் சதி செய்து சோதனைக்கு ஆளாக்கி விட்ட இந்தத் தெய்வத்திற்குப் பூஜையென்ன ... அலங்காரமென்ன... புஷ்பம் பூமாலைகள் எதற்கு? அப்பாவின்மீதுதான் சாவித்திரிக்குளரிச்சல் வந்தது. குட்டையாய்க் குழம்பிக் கிடந்த நெஞ்சின் பழைய நினைவு அலைகளி னூடே சாவித்திரி ஐக்கியமாகி விட்டாள்.



வைர பேசரி—குழந்தை ராஜு—ராகவனின் நினைவு–நடராஜர் படம், ஒன்றன் பின் ஒன்றாய் நான்கு மாதங்களுக்குப்பின் கோவையாக நினைவில் எழுந்த சம்பவங்கள். சாவித்திரி துக்கம் நெஞ்சை உடைத்துக்கொள்ள நயனங்களிலிருந்து பெருகிய சோகக் கண்ணீர் அவள் கன்னத்திலே முத்திரையாக உவர் கோட்டை பதிய வைத்தது.

* * *

சாவித்திரி?... அம்மாதான் உள்ளே நுழைந்தாள் பரபரப்பாகக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள் சாவித்திரி.

“கறியும், அவியலும் ஆறிப் போகிறது... இங்கே என்ன சாவித்திரி செய்துண்டிருக்கே...” அவள் வார்த்தையை முடிக்கவில்லை...

சாவித்திரியின் அப்பா கையில் கடிதத்துடன் உள்ளே நுழைந்தார்.

“இந்தாம்மா ...கடிதாசு... மாப்பிள்ளை எழுதி இருக்கான்... உனக்குத்தான்...” என்றார் சிரித்தபடி.

ஆவலுடன் வாங்கிப் பரபரப்புடன் கடிதத்தைப் படிக்க ஆரம்பித்தாள் சாவித்திரி...

அன்புள்ள சாவித்திரி,

உனக்கு ஒரு சந்தோஷ சமாசாரம். ஆவலோடு நீ இலவு காத்த கிளியாய் மூன்று மாதமாக ஏங்கி எதிர்பார்த்த நாள் வந்துவிட்டது. என்னை இங்கு இந்த மாதத்திலிருந்து உதவி மானேஜர் பதவிக்கு உயர்த்தி இருக்கின்றனர், இடவசதியும் கம்பெனியிலேயே அளித்துள்ளனர், இன்னும் ஒரு வாரத்தில் அங்கு வருகிறேன். குடித்தன சாமான்களைத் தயார் செய்துவை,

'சாவி! குருட்டு மனப்பான்மையிலும், எண்ணத்திலும் நம்பிக்கை வைத்து ஆனந்தத் தாண்டவரான நடராஜ மூர்த்தியின் படத்தைக் குறை கூறி, அதற்கு மாசு கற்பித்து, எதிர்பாராது விதியின் விளையாட்டில் விபரீதமாக விளைந்த சம்பவங்களுக்கு அதைக் காரணம் காட்டி, விஷமாக வெறுத்தாயே, அந்த நடராஜ மூர்த்தியின் திருவருள்தான் இங்குக் கம்பெனி மானேஜர் நடராஜய்யர் உருவத்தில் வந்து, வேலை உயர்வைத் தந்து மூன்று மாதமாக இருதுருவங்களாகப் பிரிந்து தவிக்கும் நம்மை மீண்டும் புதுவாழ்வில் பிணைத்து வைத்துள்ளது என்றால் நீ ஆச்சரியமடைந்து போவாய். திருவாதிரை நன்னாளிலே உனக்கு இச்சுபச் செய்தி கிடைத்ததிலிருந்தே உனக்கு அந்தப்படத்தின் மகிமை தெரியும். பனித்திரை படர்ந்து சலனமடைந்த உன் மனம் மாறித் தெளிவு பெற்று இருக்கும் எனப் பூரணமாக நம்புகிறேன். சாமான்களுடன் மறவாது ஞாபகமாய் நம் நடராஜ மூர்த்தியின் படத்தையும் எடுத்து வைப்பாய் என நினைக்கிறேன். இனிமேல் உன் பூஜையில் அதற்குத்தானே முதலிடம். நான் உன்னைப் பார்க்கும்பொழுது சிவகாமியம்மையாகக் காட்சி அளிப்பாய் என எதிர்பார்க்கிறேன். மற்றவை நேரில், அன்பு.

இப்படிக்கு
ராகவன்.

"அம்மா அவர் வருகிறாராம்..." கடிதத்தை அப்பாவிடம் வீசிவிட்டு, குடுகுடுவென்று பூஜை அறையை நோக்கி ஓடினாள் சாவித்திரி. எல்லையற்ற சந்தோஷம் பொங்கும் இதயத்துடன், கண்களில் ஆனந்த பாஷ்பம் வழிய, நடராஜ மூர்த்தியின் பாதங்களில் கரங்குவித்து நமஸ்கரித்தாள். தில்லை அம்பலக் கூத்தன் சாவித்திரியைப் பார்த்து மோனக் குறுநகை பூத்தார்.


# ஆரோக்யப்ரதாயினி




ஜீவாம்ருதம் உபயோகிப்பதனால் பலஹீனர்களுக்கு-பலமும், துர்ப்பலமுடையோர்க்கு-உற்சாகமும், நித்திரையற்றவர்க்கு—சுக நித்திரையும், நரம்புத் தளர்ச்சியுற்றவர்க்கு—நரம்புப் பலமும், ஜீரண சக்தியற்றவர்க்கு—நல்ல பசியையும், ரத்தஹீனர்களுக்கு—நல்ல சிவந்த ரத்தமும், ஞாபகஹீனர்களுக்கு—மிகுந்த ஞாபக சக்தியும், வாட்டமுற்றவர்களுக்கு—மிகுந்த முகக்காந்தியும், முதலிய எவ்வளவோ நற்குணங்களையளிக்கவல்லது.

ஸ்திரீ, புருஷர், பால்யர், வயோதிகர் முதலிய யாவராலும் எக்காலத்திலும் எந் நிலைமையிலும் உபயோகிக்கத் தக்கது.

எல்லாவிடங்களிலும் கிடைக்கும்

## ஜீவாம்ருதம்

தேகாரோக்யத்துக்கும் பல விருத்திக்கும் சிறந்தது.

ஆயுர்வேதாசிரமம் லிமிடெட்
மதராஸ்-17.



# மாடிஸன் வாழ்க்கை

**சி. வி. ராமகிருஷ்ணன்**

ஏப்ரல் முதல் வாரத்தில் நியூயார்க்கில் நடந்த 'மீட்டிங்' ஒன்றுக்கு எங்கள் இன்ஸ்டிட்யூட்டைச் சேர்ந்த சிலர் சென்றோம். இதற்கு 'ஏரோப்ளேன் சார்ஜ்' தருவதாக அரசாங்கத்தார் கூறியும் பலர் ரயிலிலேயே சென்றார்கள்! காரணம், அப்பொழுது விமான விபத்துக்கள் அடிக்கடி நிகழ்ந்தது தான்! இங்கு விமானத்தில் செல்பவர்கள் விமான விபத்துக்காகத் தனி இன்ஷ்யூரன்ஸ் செய்துகொள்கிறார்கள். விமான நிலையத்திலுள்ள மெஷினில் இன்ஷ்யூரன்ஸ் மனுவைப் பூர்த்திசெய்து போட்டு, பணத்தையும் அதற்குள் போட்டுவிட்டால் ரசீது கிடைக்கும். அதை வீட்டிற்கு அனுப்பிவிட்டால் ஒரு வேளை விபத்து நிகழ்ந்து உயிர் போனாலும் குடும்பத்தினருக்குப் பணம் கிடைத்துவிடும். விவாகமானவர்கள் 'பிளேனில்' வர அடியோடு மறுத்துவிட்டார்கள்! யந்திர நாகரிகம் ஆட்டிவைக்கும் அமெரிக்காவில் விமானத்தைக்கண்டு கிலி பிடித்தவர்களும் இருப்பது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. விவாக ரத்துக்கள் மலிந்த இந்த நாட்டில்கூடக் குடும்பப் பற்று இவ்வளவு விசேஷமாக இருப்பது போற்றத்தக்கது தான்!

ஒரு வாரம் கழித்து, திரும்பி வருவதற்குள் இயற்கையன்னை தன் கோலத்தை அடியோடு மாற்றிக்கொண்டிருந்தாள். எங்குப் பார்த்தாலும் உறைந்து கிடந்த பனி உருக ஆரம்பித்துவிட்டது. பனி உருகி, 'பள பள' வென்று கண்ணாடிபோல் காட்சியளித்தது. பார்ப்பதற்கு அழகாக இருந்தது. இந்தப் பனி உருகல் மிகவும் ஆபத்தானது. நாம் கால்வைக்கும் இடத்தில் அடியில் பனி உருகியிருந்தால் வழுக்கி விழவேண்டியதுதான். ஒருநாள் இரண்டுதரம் விழுந்ததன் விளைவாக ஏற்பட்ட பீதியோ, என்னவோ அன்றைக்கு மாத்திரம் 12 தரம் வழுக்கி விழுந்தேன்! 'பயந்தவனைப் பேயடிக்கும்' என்பது என் விஷயத்தில் மெய்யாகிவிட்டது! மரங்களெல்லாம் துளிர்க்க ஆரம்பித்துவிட்டன. ஏரிகளில் பனி உருகி ஜலம் வர ஆரம்பித்துவிட்டது. ஏரிகளையடுத்து இருந்த நந்தவனங்களில் சிந்துவாரற்றிருந்த செடிகள் புத்துயிர்

பெற்று, தங்கள் குதூஹலத்தைக் குலுங்கக் குலுங்கப் பூத்து வெளியிட்டன. புதிதாக மலர்கள் தோன்றும்பொழுது எல்லோரும் அவற்றைப் பார்க்க உத்சாகமாக ஓடினார்கள்! இன்ஸ்டிட்யூட்டிற்குப் போகும் வழியிலிருந்த மரங்களெல்லாம் அழகாகப் பூத்துக்குலுங்க ஆரம்பித்தன. எங்கள் வீட்டுத் தோட்டம் மலர்களால் நிறைந்து விளங்கிற்று. சுருங்கச் சொன்னால், கவிகள் வர்ணித்திருக்கும் வஸந்த காலத்தை இங்குத்தான் கண்டேன்! ஏப்ரல், மே மாதங்களில் இங்கே சீதோஷ்ண ஸ்திதி மிகவும் மனோரம்மியமாக இருக்கிறது. நம் நாட்டில் இலக்கியத்தில்தான் வஸந்த காலம் இருக்கிறதென்று நினைக்கிறேன். ஏனென்றால், வஸந்த காலமென வழங்கும் சித்திரை வைகாசி மாதத்தில் வெயில் ஒரேயடியாகக் கொளுத்துகிறது. பகலெல்லாம் 110° ஜ்வரம் அடிப்பதுபோல் உடல் வெம்பிப்போகிறது.

மஹரிஷி வால்மீகி வஸந்தகாலத்தை அழகாக வர்ணித்திருக்கிறார். ஹனுமான் சீதையைத் தேடிக்கொண்டு இலங்கைக்குப் போன சமயம் வஸந்தகாலமாக இருந்ததாம். அசோக வனத்திலுள்ள மரங்கள் தலை நிறையப் பூத்திருந்தனவாம். அதில் கிளைக்குக் கிளை தாவிய ஹனுமான் மேலெல்லாம் பூ உதிர்ந்திருந்ததால் ஒரு புஷ்ப மலைபோல் காட்சியளித்தாராம்! அவர் கிளைகளை ஆட்டிய ஆட்டத்தில் தரையும் புஷ்பங்களாலான விரிப்புப்போல் ஆகிவிட்டதாம், இன்னும் வர்ணனை அபாரமாகப் போய்க் கொண்டிருக்கிறது! அமெரிக்காவின் வஸந்த காலத்தை வர்ணித்து ராஜிக்கு கடிதம் எழுதினேன். "இங்கேயும் சாயங்காலக் காற்றில் வேப்பம்பூ மணம் கலந்து வருவதே ஒரு தனிச் சிறப்பு. இங்கே சித்திரையில் கிடைக்கும் மாவடுவே மாவடு! மல்லிகைப் பூத்தான் என்ன வாசனை!" என்று அபாரமாக நம் நாட்டைப் புகழ்ந்து எழுதியிருந்தாள், வஸந்தகாலமாகிய கடுங்கோடையில் என் பாட்டி சிறு வயதில் போட்ட பழையதும் மாவடுவும் ஞாபகத்துக்கு வந்தன! அமெரிக்காவின் வஸந்த காலம்கூடத் திடீரென்று சாரமற்றதாகத் தோன்றியது!

இங்கு வஸந்தகாலத்தில் எல்லாரும் மாலை நான்கு மணி அடித்ததும் காரை எடுத்துக் கொண்டு ஏரியையும் நந்தவனத்தையும் சுற்றக் கிளம்பிவிடுவார்கள். ஒரு ஞாயிறன்று மாடிஸனிலிருந்து 30 மைலில் உள்ள 'பிசாசு ஏரி' **(Devil's lake)** என்ற இடத்திற்குப் பெய்னர்ட் தம்பதிகளுடன் சென்றேன். இங்கு, 'பிக்னிக்' குக்காகப் பலர் வருகிறார்கள். இந்த ஏரியையடுத்து ஒரு உணவு ஸ்டோர் இருக்கிறது. அங்குச் சென்றால் காகிதத் தட்டு, ஸ்பூன் முதலியன கிடைக்கும். சாப்பிடும்பொழுது அவற்றை உபயோகித்து விட்டுத் தூர எறிந்து விடலாம். ஏரியை அடுத்துப் பிர்மாண்டமான மலை. அதில் மனம் போனபடி சுற்றினோம். திரும்பியபின் ஐஸ்க்ரீம், கேக் முதலியவற்றைச் சாப்பிட்டு விட்டு ஏரியில் குளித்தோம். சுற்றிலும் நந்தவனம், குழந்தைகள் விளையாடுவதற்கு ஊஞ்சல்கள், **'see saw'** முதலியன இருக்கின்றன. வஸந்தகாலம் ஆரம்பித்த குஷியில் சிறியவர், பெரியவர் எல்லாரும் குதித்து விளையாடுகிறார்கள்! எப்பொழுதும் உத்சாகமாகத் துள்ளிக் குதிக்கும் அமெரிக்கர்களுக்கும் சிறுவயதிலேயே கிழவர்களைப்போல் விளங்கும் நமக்கும் இதுதான் முக்கிய வித்தியாசம்.

இன்னொரு முறை நாட்டுப்புறப் பக்கம் போயிருந்தோம். இங்குக் கிராம வாழ்க்கையில் சில விசேஷ அம்சங்களைக் கண்டேன். அயல் நாட்டார் யாரேனும் கிராமத்துக்கு வந்தால் கிராம மக்கள் எல்லோரும் சேர்ந்து அவருக்கு ஒரு விருந்து வைத்து உபசரித்து அவரிடமிருந்து அவர் நாட்டைப் பற்றிய விஷயங்களையெல்லாம் விசாரித்து அறிய ஆவலாக இருக்கிறார்கள். அநேகமாகக் கிராமங்களில் ஒவ்வொருவருக்கும் சொந்த வீடு இருக்கிறது. வீட்டை அடுத்து நிலம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். காய் கறியும், முடிந்தால் கோதுமையும் தங்கள் சொந்த நிலத்திலேயே பயிர் செய்து கொள்கிறார்கள். ஆனால் பயிர் செய்ய மின்சார சாதனங்களையும் யந்திரங்களையும் உபயோகித்துக் கொள்கிறார்கள். கூட்டுறவு முறையில் பால் பண்ணைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மாமிசம் முதலியவை கெடாமல் இருக்கக், கூட்டாக பெரிய பனிப் பெட்டிகளில் அவற்றைப் பத்திரப் படுத்தி வைக்கிறார்கள். 'ஒத்தால்' வாழலாம் என்பதற்கு அமெரிக்காவின் கிராம வாழ்க்கை ஒரு நல்ல சான்று. படித்துப் பட்டம் பெற்றவர்கள் சர்க்கார் உத்தியோகத்தைத் தேடியலையாமல் தங்கள் சொந்த நிலத்தைப் பயிர் செய்து கொண்டு கிராமங்களிலேயே வசிப்பது நமக்கு வியப்பாகத்தான் இருக்கும். மாடு வைத்துக் கொண்டு இருக்கும் வீடுகளில் சிறு குழந்தைகளுக்குக் கூட மாடு கறக்கத் தெரிகிறது. கிராமங்களில் ஜன

நெருக்கம் அதிகமின்றி மக்கள் சுகமாக வாழ முடிகிறது. அதே சமயத்தில் மக்களுக்கு வேண்டிய வாழ்க்கை வசதிகளெல்லாம் கிராமத்திலேயே உள்ளன. வசதியாக வாழ விரும்புபவர்கள் பட்டணங்களைத் தேடி அலைய வேண்டியதில்லை. அமெரிக்கா என்றால் நமக்கு நியூ யார்க் மாதிரி பிரம்மண்டமான நகரங்கள் கண்முன் வருகின்றனவே ஒழிய அமெரிக்காவையும் அமைதியான கிராம வாழ்க்கையையும் நாம் இணைத்து நினைப்பதில்லை. நாட்டுப்புறப் பக்கம் சென்ற பின்தான் இங்குக் கிராம வாழ்க்கையின் மேன்மையை உணர்ந்தேன். அமெரிக்க கிராமங்களில் விளையும் தானியம் பல நாடுகளுக்கு உணவளிக்கப் போதுமானதாக இருப்பதில் வியப்பொன்றுமில்லை. நம் நாட்டில் கிராமங்கள் சீர் கேடடைந்துள்ள காரணம் படித்தவர்கள் கிராம வாழ்க்கையை விரும்புவதில்லை. நிறையப் பணமும் நிலமும் படைத்தவர்கள் கூட இரண்டு எழுத்துக்களைத் தங்கள் பெயருக்குப்பின் சேர்த்துக் கொண்டவுடனே அரசாங்க உத்தியோகம் தேட ஆரம்பித்து விடுகிறார்கள். கிராமங்களிலோ அடிப்படியான வாழ்க்கை வசதிகள் இருப்பதில்லை. நம்முடைய கிராமங்கள் இந்நிலையில் வெகு தூரம் முன்னேறுவதற்கு இடம் இருக்கிறது. மே மாதத்திற்குப் பிறகு வெயில் கொளுத்த ஆரம்பித்தது. நம் ஊர் தோற்றுவிடும் போலிருந்தது. **Air Conditioning Units**' வேலை செய்ய ஆரம்பித்து விட்டன. எல்லாரும் கோட்டு ஷர்ட்டு கூட இல்லாமல் பனியனுடன் வேலை செய்ய ஆரம்பித்தார்கள். ஒவ்வொருவரும் ஏரிக்குச் சென்று ஒரு நாளைக்கு ஒரு தரமாவது கொஞ்ச நேரம் நீந்திவிட்டு வருவார்கள். விடுமுறை நாட்களில் ஏரியே கதியென்று கிடப்பார்கள்! பெண்களும் ஆண்களும் நீந்தும் உடுப்பை யணிந்துகொண்டு மணலில் 'சூரிய ஸ்நானம்' செய்துகொண்டு கிடப்பார்கள். அடிக்கொருதரம் ஏரியில் குதித்துச் சிறிது நேரம் நன்றாக நீச்சடித்துவிட்டுத் திரும்பவும் கரையில் இளைப்பாறப் படுத்துக் கொண்டு புரள ஆரம்பித்துவிடுவார்கள். ஊர்க்காரர்கள் எல்லாம் இங்கே கூடுவதால் வம்பளப்பது பிரமாதமாக இருக்கும். இங்கே நாம் போனால் நாமும் நீந்தும் உடையில்தான் போக வேண்டும்! முழு ஆடை அணிந்துகொண்டு போனால் பரிகசிப்பார்கள்! 'ஆடையில்லாத ஊரில் அரை நிர்வாணி பைத்தியம்' என்ற கதைதான்! பட்டண வாசத்தில் இருந்து விட்டு, தண்ணீரைக் கண்டாலே ஒரு காததூரம் ஓடும் நான் கூட ஒரு நீந்தும் உடை வாங்கிக் கொண்டேன். ஆனால் நீச்சல்தான் பிடிவாதமாக என்னிடம் வர மறுத்துவிட்டது! சிநேகிதர்கள் பிடிக்க இந்தப் பீச்சுத் தான் சரியான இடம். பெரிய வியாபாரிகள் கல்லூரிப் பேராசிரியர் எல்லாரையும் இங்கே காணலாம். இங்கு இரண்டு மூன்று மாதங்கள்தான் வெயில் நன்றாக அடிப்பதால் அமெரிக்கர்கள் கோடையில் மிக உத்சாகமாக இருக்கிறார்கள். அவர்கள் மொழியிலேயே இந்த விருப்பம் வெளியாகிறது. நாம் சந்தோஷமாக இருந்தால் மனம் குளிர்ந்திருக்கிறது என்று சொல்கிறோம். அவர்கள் சந்தோஷமாக வரவேற்புக் கிடைத்தால் "சூடான வரவேற்பு" என்கிறார்கள்.

ஜூலை மாதம் வந்தது. இனி மழைக் காலம். மழையென்றால் அடைமழைதான்! மலையாளத்து 'இடவபாதி' மழை (அதாவது வைகாசி பாதியில் ஆரம்பிக்கும் மழை) ஞாபகத்துக்கு வந்தது. ராமராஜ்யத்தைப் பற்றி எனக்குத் தெரியாது, ஆனால் அமெரிக்காவில் பருவங்கள் 'பருவந் தவறாமல்' தோன்றுகின்றன! வானம் பார்த்துப் பார்த்து ஏங்கிக்கிடக்கும் நம்நாட்டுக் குடியானவர்களின் ஞாபகம் வந்தது. இந்தியாவில் இந்த வருஷமும் மழையேயில்லை என்ற செய்தி அமெரிக்கப் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் வெளியாயிற்று. எதை இறக்குமதி செய்தாலும் மழையை அமெரிக்காவிலிருந்து நம் நாட்டிற்கு இறக்குமதி செய்யமுடியாதே! எனக்கு ஒரு செய்தி ஞாபகத்துக்கு வருகிறது. திருவாங்கூரைச் சேர்ந்த மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து நிறைய மிளகுச் செடிகளை அன்னியர் பிடுங்கிக் கொண்டு போனார்களாம். "வெளிநாடுகளிலெல்லாம் மிளகு பயிர்செய்யப் போகிறார்கள். நம் வியாபாரமே படுத்து விடும்" என்று மகாராஜாவிடம் முறையிட்டார்களாம், அவர் அமைதியாக "மிளகுச் செடியைமாத்திரம்தானே பிடுங்கிக்கொண்டு போயிருக்கிறார்கள்? இடவபாதி மழையைக் கொண்டுபோகவில்லையே!" என்றாராம். செயற்கை மழையைக்கூட மேகங்களிருந்தால்தானே உண்டாக்க முடியும்!

அப்படியும் இப்படியுமாக, நான் வந்து ஒரு வருஷம் ஆகிவிட்டது. வீட்டு ஏக்கம் வேறு வந்துவிட்டது. இந்தியாவில் நல்ல வேலை கிடைக்கும்போலிருந்தது. டைரக்டர் இன்னும் ஒரு வருஷம் இருக்கும்படி சொன்னார். இந்தியாவில் வேலையில்லாத்

திண்டாட்டம் நாளுக்குநாள் அதிகரித்து வரும் சமயத்தில் இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிட இஷ்டமில்லையென அவருக்கு எடுத்துக்கூறி, பின்னால் மறுபடியும் கண்டிப்பாய் வருவதாகச் சொல்லிவிட்டு ஊருக்குக் கிளம்ப ஆயத்தம் செய்ய ஆரம்பித்தேன்.

## இந்தியா திரும்புதல்

இந்தியா திரும்புவதற்கு ஆறுமாதத்திற்கு முன்னலிருந்தே கப்பல் கம்பெனிகளுக்கு எழுதி இடம் ஏற்பாடு செய்து கொள்வது நல்லது. அதுவும் கோடை விடுமுறையில் ஏராளமான அமெரிக்கர்கள் இங்கிலாந்துக்குச் செல்லுவதால் இடம் கிடைப்பது கஷ்டம். ஜுலை 23–ஆந் தேதி கப்பலில் இடம் கிடைத்திருந்தது. செல்வம் கொழித்த, அழகு வாய்ந்த அமெரிக்காவை விட்டு வருவது வருத்தமாகத்தான் இருந்தது. இருந்தபோதிலும் தாய்நாடு திரும்புவதில் குதூகலம். அமெரிக்காவில் அறிவுக்கு மதிப்பு இருப்பதால் எப்பொழுது வேண்டுமானலும் அங்கே திரும்பச் சந்தர்ப்பம் வாய்க்கும் என்ற நம்பிக்கை வேறு.

இந்தியாவிலிருந்து வரும்பொழுது ஒரு நல்ல 'காபின் ஸ்டீல்' டிரங்குப் பெட்டியை ஏகப்பட்ட விலை கொடுத்து வாங்கி அதில் சாமான்களை எடுத்துவந்தேன். அது அமெரிக்கா சேர்வதற்குமுன் சப்பையாக நசுங்கி விட்டது. இப்பொழுது சாமான்களைத் திரும்ப எப்படி எடுத்துச் செல்வது என்ற பிரச்னை வேறு ஏற்பட்டது. சாமான்கள் ஏலம் போடும் இடத்திற்குச் சென்றால் நல்ல பெட்டிகள் கிடைக்கும் என்று சொன்னார்கள். வெளிநாடுகளுக்குச் சென்று திரும்பியவர்கள் தாங்கள் உபயோகித்த பெட்டிகளை இடத்தை அடைத்துக்கொள்ளாமலிருந்தால் போதுமென்று ஏலக் கம்பெனிகளில் வந்த விலைக்குத் தள்ளிவிடுகிறார்கள். நாலே டாலருக்கு ஒரு 'ப்ளைவுட்' பெட்டி வாங்கினேன். ப்ளைவுட்டால் இவ்வளவு உறுதியான பெட்டி செய்யமுடியும் என்பதே எனக்குத் தெரியாது. (அது கப்பல் ஆட்டத்தையெல்லாம் சமாளித்து, பத்திரமாக வீடு சேர்ந்து இப்பொழுது கணிசமாக இடத்தை அடைத்துக்கொண்டிருக்கிறது! "சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்" என்ற முதுரையைப் பின்பற்றி நாம் ஒரு சாமானையும் விடுவதில்லையல்லவா? நல்லவேளை, இப்பொழுது திரும்பிப் போவதற்கு அது உபயோகப்படும்!) இரண்டு பெட்டிகளில் எல்லாச் சாமான்களையும் வைத்து அவற்றைக் கப்பல் ஏஜெண்ட்களிடம் ஒப்படைத்து விட்டு வழிக்கு ஒரு சிறிய ஸூட்கேஸை மாத்திரம் கையில் எடுத்துக்கொண்டேன்.

அமெரிக்காவில் எங்கு வேண்டுமானலும் செல்ல வசதியாகப் பஸ் இருப்பதால் திரும்பும்பொழுது நியூயார்க் வரை, வழியிலுள்ள இடங்களைப் பார்த்துக் கொண்டே, பஸ்ஸில் போகத் தீர்மானித்தேன். பஸ் ஆபீஸுக்குச் சென்று நான் பார்க்க வேண்டிய இடங்களைச் சொன்னேன். அங்கு உள்ளவரே 'புரோகிராம்' போட்டுக் கொடுத்ததுடன் அங்கங்கே பஸ் நிற்குமிடங்களில் சாப்பிடச் சாப்பாட்டுக் கூபன்கள் வேறு கொடுத்தார். ஓவ்வொரு ஊருக்கும் போக டிக்கட் புறப்படுமிடத்திலேயே கிடைத்தது. இத்தனை வைபவங்களுக்கும் சார்ஜு என்னவோ ரயில் சார்ஜைவிடக் குறைவு. இறங்கி அங்கங்கே ஊர்களைப் பார்க்க முடிவதால் அநேகமாக எல்லாப் பிரயாணிகளும் பஸ்ஸில் தான் போகிறார்கள். பஸ் ஸ்டாண்டில் முன்னதாகவே பெட்டிகளைப் போட்டு விட்டேன். அவற்றை நேரே நியூயார்க்குக்கு அனுப்பி விட்டார்கள். ஆகையால் பஸ்ஸில் சாமான்களை வைத்துக் கொண்டு ஏறி இறங்க வேண்டிய தொல்லை இல்லை.

கிளம்பும் தினம் வந்தது. இன்ஸ்டிட்யூட்டில் என்னுடன் வேலையாயிருந்தவர்கள், 'மனைவியை அழைத்துக் கொண்டு இங்கேயே திரும்பி வந்து விடுங்கள். உங்களுக்கு இந்த ஊர் பிடித்திருக்கிறதல்லவா?" என்றார்கள். டைரக்டர் க்ரீன் "அவருக்கு ஆபீஸர் வேலை கிடைக்கலாம். இங்கே எங்கே வரப் போகிறார்?" என்றார். எல்லாரிடமும் விடை பெற்றுக் கொண்டு நான் வழக்கமாகச் செல்லும் 'டிரக் ஹௌஸுக்குச்' சென்றேன். எல்லோரும் சேர்ந்து ஸ்பெஷல் 'மால்ட்' சேர்ந்த பால் அளித்தார்கள்! நான் தான் வேறு ஒன்றும் சாப்பிடுவதில்லையே. பாதாங்கீராகப் பாவித்து அதைக் குடித்து வைத்தேன். அவர்கள் பரிவுடன் வழியனுப்பிய காட்சியைப் பார்த்த பொழுது அரசாங்கக் கட்டுப்பாடு மாத்திரம் இல்லாமலிருந்தால் எல்லா இந்தியர்களையும் அங்கேயே குடியேறச் செய்து விடுவார்களோ, என்று தோன்றியது. என் இந்திய நண்பர்கள் கொஞ்சம் பொறாமை தொனிக்கும் குரலில் விடையளித்தார்கள்! நான் சீக்கிரம் தாய் நாடு திரும்புகிறேனே என்று தான்! பம்பாயை விட்டுக் கப்பலில் ஏறும் பொழுது எவ்வளவு வருத்தமாக இருந்ததோ அவ்வளவு வருத்தமாக இருந்தது, மாடிஸனை

யும் அதன் அழகான ஏரிகளையும் அன்பான மக்களையும் விட்டுப் பிரிவதற்கு.

பஸ் வந்தது. நம் பஸ்ஸைப் போல் இரண்டு மடங்கு பெரியதில் உயரம் அதிகம். ஒவ்வொருவரும் கையில் ஒரு சூட் -கேஸ் மாத்திரம் வைத்துக் கொள்வார்கள், ஸீட்டுகள் ஏரோப்ளேனில் உள்ள ஸீட்டுகளைப் போல் இருக்கின்றன. ஸீட்டில் ஈசிசேர் மாதிரி சாய்ந்து கொண்டு தூங்கலாம். 10 செண்ட் கொடுத்தால் தலையணைகூடக் கிடைக்கும். பஸ் மணிக்கு 70 மைல் வேகத்தில் மின்னெஸொடாவை நோக்கிக் கிளம்பியது. காலச்சக்கரம் சுழலும் விசித்திரத்தை எண்ணியவாறு அயர்ந்து தூங்கி விட்டேன். ஆட்டமில்லாமல் பஸ் ஜோராகப் போவதால் நிம்மதியாகத் தூங்க முடிகிறது. தவிர, கும்பல் கிடையாது. ஒரு ஆள் அதிகமாக இருந்தாலும் தனி பஸ் விடுகிறார்கள். இரவு புறப்பட்ட பஸ், மறுதினம் காலை 5-மணிக்கு மின்னஸொடாவை அடைந்தது. பஸ் தங்குமிடத்தில் மற்ற இடங்களைப் போலவே ஸ்நானம் முதலியவற்றை முடித்துக் கொள்ள வசதிகள் இருக்கின்றன. உடுப்பு மாற்றிக்கொண்டு கழற்றிக் கொடுத்த ஸூட்டை அங்கிருந்த லாண்ட்ரியில் உடனேயே சலவை செய்து கொடுத்து விட்டான். இங்கும் பெட்டியைப் பத்திரமாகப் பூட்டிவைக்க 'ஆட்டமாடிக்' இயந்திரம் இருந்தது. அருகிலுள்ள ஹோட்டலில் காலையுணவை அருந்திவிட்டு ஊரை நோக்கிக் கிளம்பினேன்.

இங்கு ஓர் ஆற்றின் இரு புறங்களில் 'மின்னெஸொடா,' 'ஸெய்ன்ட்பால்' என இரு பட்டணங்கள் இருக்கின்றன. இரண்டையும் ஒரு பெரிய பாலம் இணைக்கிறது. பாலத்தின் வழியாகச் செல்ல வரிகொடுக்கவேண்டும். இந்தப் பாலத்தில்மீது பஸ், டிராம் முதலியனகூடச் செல்லுகின்றன. மின்னெஸொடா சர்வகலாசாலை விவசாய ஆராய்ச்சிக்குப் பிரசித்தமானது. இங்கே பேராசிரியர் 'கெட்டஸ்' (**Geddes**) என்பவர் மாவுகளில் உள்ள என்ஸைம்களைப் பற்றின ஆராய்ச்சியில் ஈடுபட்டவர். இங்கு ஏராளமாக உள்ள மாவு மில்கள் இவருடன் ஒத்துழைக்கின்றன. இவருடன் கடிதம் மூலம் எனக்கு நல்ல பரிச்சயம் உண்டாகையால் இவரை நேரில்காண விரும்பினேன். அவரும் என்னைப்பார்த்து மிகவும் சந்தோஷமடைந்தார். தம் சகாக்களுடன் என்னிடம் மூன்றுமணி நேரம் ஆராய்ச்சி விஷயமாகப் பேசிக்கொண்டிருந்தார். "உங்களுக்கு எப்பொழுதாவது வரவேண்டுமென்றால் எழுதுங்கள். எங்கள் ஆராய்ச்சிச் சாலையில் நீங்கள் வேலைசெய்ய முன்வந்தால் மிகவும் சந்தோஷமாக இருக்கும்" என்றார். அவரிடம் விடைபெற்றுக்கொண்டு பில்ஸ்பரி மாவுமில்லைச் சேர்ந்த ஆராய்ச்சி இலாகாவைப் பார்வையிட்டேன். இங்கு ஒவ்வொரு மாவு மில்லிலும் மாவிலுள்ள சத்துப் பொருள்கள், அவை கெடாமல் பாதுகாக்கும் விதம் முதலியவற்றைப் பற்றி ஆராய்ச்சி செய்யத் தனி இலாகா இருக்கிறது. மாவு மில்கள், சர்வகலாசாலை ஆராய்ச்சியாளர்களுடன் ஒத்துழைப்பது போற்றத் தகுந்தது. மாவுமில் ஆரம்பித்தால் லாபம் வரும் என்ற ஒரே நோக்கம் மாத்திரம் இல்லை. மக்களுடைய நன்மையையும் மனத்தில் வைத்திருக்கிறார்கள். ஆராய்ச்சி இலாகாவைச் சேர்ந்தவர்கள் என்னை உற்சாகமாக வரவேற்றார்கள். மாவு அரைக்கும்பொழுது சத்துப்பொருள்கள் கெடாமல் பாதுகாப்பதில் உள்ள கஷ்டங்களை எடுத்துக் கூறினார்கள். பேச்சு வாக்கில் நம் நாட்டில் மரவள்ளிக் கிழங்கிலிருந்து செயற்கை அரிசி செய்ய முயற்சி நடக்கிறதென்று சொன்னேன். உடனே கோதுமை மாவிலிருந்து தயாரிக்கும் செயற்கையரிசியைக் கொண்டுவந்து காண்பித்தார்கள். கோதுமையிலிருந்து உடைத்த ரவை மாதிரி இருந்தது. "எங்கள் நாட்டுச் செயற்கையரிசி இதைவிட நன்றாக இருக்கிறது" என்று கூறிவிட்டு அங்கிருந்து கிளம்பினேன். மாலையில் அங்குள்ள ஏரிகளையும் பார்க்குகளையும் சுற்றிப் பார்த்துவிட்டு இரவு 10-மணி சிகாகோ பஸ்ஸில் ஏறிக்கொண்டேன்.

மறுநாள் இரவு பன்னிரண்டு மணிக்குப் பஸ் சிகாகோவை அடைந்தது. உடனேயே நான் கார்னெல்லுக்குச் செல்லவேண்டியிருந்ததால் பிரசித்திபெற்ற இந்த ஊரை நான் சுற்றிப்பார்க்க முடியவில்லை. சர்வமத பார்லிமெண்ட் இங்குக் கூடியபோது விவேகானந்தர் இந்தியாவின் புகழை நிலைநாட்டியது நினைவுக்கு வந்தது. இராமகிருஷ்ண மிஷனின் கிளை ஒன்று இருக்கிறது. கார்னெல் சர்வகலாசாலை மிகவும் பிரசித்தி பெற்றது. அங்குள்ள என்ஸைம் ஆராய்ச்சிச்சாலையின் டைரக்டர் பேராசிரியர் 'சம்னரை'ப் (**Sumner**) பார்க்கச் சென்றேன். முதன்முதலில் என்ஸைம்களை ஸ்படிகங்களாகச் செய்ததற்காக இவருக்கு நோபல் பரிசு கிடைத்தது. முன்னரே வருவதாக அறிவித்திருந்தேன். அவர் எனக்காக ஆராய்ச்சிச் சாலை

யில் காத்துக்கொண்டிருந்தார். அங்குள்ள ஆராய்ச்சிக் கருவிகளைக் காண்பித்துவிட்டு என்னைத் தம் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். வீட்டிற்குச் சென்ற பிறகுதான் அவருக்கு ஒரு கை கிடையாது என்று உணர்ந்தேன்! வேலை செய்யும் பொழுது செயற்கைக் கை வைத்துக்கொள்கிறார். இதனுடன் வேலைசெய்வதும் கார் ஓட்டுவதும் ஆச்சரியமே. போதாததற்கு வீட்டில் ஓய்வு நேர வேலையாக மரவேலை செய்கிறார். அவர் கையினால் மரத்தில் செதுக்கிய காந்திமகான் சிலையையும் யானைப் பொம்மைகளையும் பார்த்து எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. இவரிடம் அநேக இந்தியர்கள் பயின்றிருப்பதால் இவருக்கு இந்தியர்களைக் கண்டாலே சந்தோஷம். இரவு பத்து மணி வரை பொழுது போனதே தெரியாமல் பேசிக்கொண்டிருந்தோம். தம் மனைவியைக் கூப்பிட்டு எனக்கு அறிமுகப்படுத்திவிட்டு எங்கள் இருவரையும் போட்டோ எடுக்கச் சொன்னார். எவ்வளவோ தடுத்தும் கேட்காமல் காரில் பஸ் ஸ்டாண்டுவரை இரவு பத்து மணிக்குக் கொண்டு வந்து விட்டு விட்டுப் போனார். அவருடன் நான் சந்தோஷமாகக் கழித்த நேரத்தை என்றும் மறக்க முடியாது. அன்பினால் நம்மை உருக வைக்கும் இம்மாதிரி நண்பர்களால் பொதுவாக அமெரிக்கர்கள் என்றாலே ஓர் அலாதி அபிமானம் உண்டாய்விட்டது.

மறுபடியும் பஸ்ஸில் கிளம்பி அமெரிக்காவின் தலைநகரமாகிய வாஷிங்டனை மறுநாள் அடைந்தேன். இங்கு அமெரிக்காவின் பிரசிடெண்ட் வசிக்கும் வொயிட் ஹௌஸைப் பார்த்தேன். புதுடில்லியைப் போல இங்கும் சர்க்கார் கட்டடங்கள்தான் அதிகமாக இருக்கின்றன. வாஷிங்டனைச் சுற்றிப்பார்த்து விட்டு அடுத்தநாள் நியூயார்க்குக்கு வந்தேன். 'டிபோ'விற்குச்சென்று பெட்டிகளை எடுத்துக்கொண்டு கப்பல் தளத்தில் கொண்டு போட்டேன். இங்கு எத்தனை நாட்களுக்கு முன்னால் வேண்டுமானாலும் துறைமுகத்தில் சாமான்களை வைத்துக்கொள்ளலாம். நிம்மதியாக ஊரைச்சுற்றிப் பார்த்துவிட்டு மறுநாள் கப்பலில் ஏறினேன். நம் ஊர் 'ஜனதா' ரெயில்வண்டி மாதிரி இந்தக் கப்பலை 'ஜனதா' கப்பல் என்று சொல்லலாம். இதில் முதல் வகுப்பு இரண்டாம் வகுப்பு என்ற வித்தியாசம் கிடையாது. கோடை விடுமுறைக்காக இங்கிலாந்து செல்லும் பிரயாணிகள் ஏராளமாக இருந்தார்கள். பம்பாயிலிருந்து லண்டன் செல்லக் கப்பலுக்குச் சுமார் 15 நாளாகிறது. கிட்டத்தட்ட அதே தூரமாக இருந்தாலும் அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்து செல்லும் கப்பல்கள் ஐந்தாறு நாட்களில் சென்றுவிடுகின்றன. இங்குச் செல்லும் கப்பல்களும் ஜோராக இருக்கின்றன. கப்பலில் சாப்பாட்டு வசதிக்குக் குறைவே இல்லை—தானியக்களஞ்சியமான அமெரிக்காவிலிருந்து வரும் கப்பலில் குறைதான் இருப்பானேன்? ஐந்தே நாளில் ஸௌதாம்பன் (லண்டனுக்கருகிலுள்ள துறைமுகம்) வந்து சேர்ந்தேன். ஆனால் இங்கிலாந்தில் 15 நாள் இந்தியா செல்லும் கப்பலுக்காகக் காத்திருக்க வேண்டியிருந்தது. ஊருக்குத்திரும்பத் துடித்துக்கொண்டிருந்த எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. எங்குப் பார்த்தாலும் எதைக் கண்டாலும் ரேஷன்! நம்நாடே தேவலை என்று தோன்றியது. நான் கேட்ட 'டூரிஸ்ட்' வகுப்பில் கப்பலில் இடம் கிடைக்க, குறைந்தது இன்னும் ஒரு மாதமாவது ஆகும் போலிருந்தது. "முண்டு இல்லாவிட்டால் பட்டு உடுக்கும்" என்ற மலையாள வசனத்தில் சொல்லியது போல் வேறு வழியின்றி 'ஸைலீஷியா' என்ற கப்பலில் முதல் வகுப்பில் இடம் ஏற்பாடு செய்துகொண்டு கிளம்பினேன்!

மறுபடியும் போனபொழுது பார்த்த துறைமுகங்கள்—ஏதோ பழகின இடமாகத் தோன்றியது ஒவ்வொரு ஊரும்! போர்ட் ஸய்யதில் அதே மந்திரவாதி அதே மாதிரி பையிலிருந்தும் வயிற்றிலிருந்தும் கோழியை வரவழைத்தான்! மறுபடியும் ஏடன் துறைமுகம். போகும்பொழுது கப்பல் கராச்சியில் நிற்கவில்லை, வரும்பொழுது கராச்சிவழியாக வந்தது. பாகிஸ்தானின் தலைநகரம் எப்படி இருக்கிறது என்று பார்க்க ஆவல். ஆனால் துறைமுகத்திலிருந்து ஊருக்குச் செல்லவே பயமாக இருந்தது. 5 பேராக டாக்ஸி வைத்துக்கொண்டு கிளம்பினோம். ஊர் கிட்டத்தட்ட பூனா கன்டோன்மெண்ட் மாதிரி இருக்கிறது. பழைய காந்தி பார்க்கு இப்பொழுது ஜின்னா பார்க்கு ஆகிவிட்டது! "ராம் பார்க்கு" "ஆராம் பார்க்கு" ஆகிவிட்டது! ஆக, பாகிஸ்தானிலுள்ள பார்க்குகள்கூட மதம் மாறிவிட்டன! ஊரிலிருந்து 10 மைலில் உள்ள வெந்நீர் **(Sulphur Springs)** ஊற்றுகளைப் பார்க்கச் சென்றோம். இந்த ஊற்றுக்களில் ஜலம் எப்பொழுதும் சூடாக இருக்கிறது. இங்கு ஸ்நானம் செய்தால் குஷ்டரோகம் சரியாகிவிடுமாம். அதனால் ஏராளமான குஷ்டரோகிகள் இவ்விடத்தைத் தேடிக்கொண்டு வருகிறார்கள். இவர்களால் மற்றவர்களுக்கு வியாதி பரவாமல் இருக்க வேண்டுமே என்று தோன்றியது. ஆங்

காங்கே துணி ஆலைகள் கட்டிக்கொண்டிருந் தார்கள். பருத்தி விளைச்சல் பாகிஸ்தான் பகுதியில் அதிகம். ஆலைகள் இந்தியாவில் அதிகம். பிரிவினைக்குப்பின் பாகிஸ்தான் ஆலைகள் கட்ட ஆரம்பித்திருக்கிறது. இந்தியாவில் பருத்தி சாகுபடி அதிகமாக்க வேண்டுமென்கிறார்கள். கராச்சி 'பீச்சை'ப்பார்த்து விட்டுக் கடைத்தெருவிற்கு வந்தோம். ஒரு குஜராத்தி ஹோட்டலில் ரொட்டிச் சாப்பாடு கிடைத்தது. ஒரு பஜனைமடத்தில் பத்து குஜராத்திகளுக்காக ஒரு குஜராத்தி ஹோட்டலை நடத்துகிறார் ஒரு குஜராத்தியர். இவர்களைக் கண்காணிக்க வெளியே ராணுவக் 'காவல்'. வழிநெடுகப் புழுதி. தெருக்கள் அவ்வளவு சுத்தமாக இல்லை, அகதிகள் கும்பல் ஏராளமாக இருந்தது. தலைநகருக்கு ஏற்ற 'களை' இல்லை. இவ்வூரில் விசேஷமாகக் கிடைக்கும் பச்சைத் திராட்சைப் பழத்தை வாங்கிக்கொண்டு கப்பலில் ஏறினோம்.

கடல் கொந்தளிக்க ஆரம்பித்துவிட்டது. அதே ஆடி ஆவணி காற்றுக்காலம். எப்பொழுது பம்பாய் வந்து சேரப்போகிறோம் என்று ஆகிவிட்டது. காலையில் பம்பாய் துறைமுகம் தெரிய ஆரம்பித்ததும் இந்தியப் பிரயாணிகள் குதூகலத்தால் துள்ளிக்குதிக்க ஆரம்பித்தோம்.

**"Breathes there the man with soul so dead,**
**Who never to himself hath said,**
**"This is my own, my native land."**
**As home his footsteps he hath turned,**
**From wandering on a foreign strand"**

என்ற அடிகள் நினைவுக்கு வந்தன. துறைமுகத்தில் நண்பர்களின் அன்பான வரவேற்பு கிடைத்தது. 'கஸ்டம்ஸ்' சோதனையும் ஒருவாறு முடிந்தது. கப்பல் நண்பர் ஒருவரிடம் விடை பெற்றுக்கொள்வதற்காக அவரைத் தேடினேன். எங்கும் காணவில்லை. அவர் மிகவும் சாது. ஏதாவது வழியில் சாமான் வாங்கச் சொன்னால் கஸ்டம்ஸ் விதிகளை மீறக்கூடாதென்பார். கடைசியில் பார்த்தால் ஏராளமான சாமான்களைக் கொண்டு வந்திருப்பதற்காக அவரைக் 'கஸ்டம்ஸ்' ஆபீஸில் நிறுத்திவைத்துக் கொண்டிருந்தார்கள்! "ஏது, இவரைப்போல சாது, உலகில் கிடையாது" என்று நினைத்துக்கொண்டே வெளியே வந்தேன். நண்பர்கள் நான் அமெரிக்கப் பாலைச் சாப்பிட்டு விட்டு நன்றாகக் கொழுத்திருப்பதாகச் சொன்னார்கள். எல்லாருமாக அருகிலுள்ள ஒரு மராட்டி ஹோட்டலுக்குச் சாப்பிடப் போனோம். காணாதது கண்டதுமாதிரி' பஜ்ஜியும் பூரியும் தின்றதன் விளைவாக இரவு ஒரே வயிற்று வலி. அலைச்சலும் உஷ்ணமும் உணவு மாறுபாடும் தாங்காமல் சீதபேதி வந்துவிட்டது. இரண்டு நாளாகியும் நிற்கவில்லை. இவ்வளவு தூரம் வந்தும் ஊருக்குச் சென்று மனைவியைப் பார்க்காமலே எங்காவது பரலோகம் போய்விடப்போகிறேன் என்று பயந்துகொண்டே ஊருக்குக் கிளம்பினேன். வண்டியில் கக்கூஸிற்கு நிமிஷத்திற்கு ஒரு முறை செல்வதைப் பார்த்து, காலரா கேஸோ என்னவோ என்று சந்தேகப்பட்டு வண்டியைவிட்டு இறக்காமலிருக்க வேண்டுமே என்று பயம்! ஒரு வழியாக மறுநாள் இரவு 1 மணிக்கு வண்டி ஊர்போய்ச் சேர்ந்தது. இரண்டு நாள் கழித்து வருவதாக எழுதியிருந்தபடியால் ஸ்டேஷனுக்குக்கூட ஒருவரும் வரவில்லை. வீட்டிற்குப் போய்க் கதவையிடித்தேன். 'இன்று வருவதாக ஒரு தந்தியாவது கொடுத்திருக்கக்கூடாதோ?" என்றார் என் மாமனார். பரபரப்புடன் எழுந்து வந்த என் மனைவி, "நன்றாயிருக்கிறது அமெரிக்க வாழ்க்கை! இப்படி இளைத்துத் துரும்பாகப் போய்விட்டீர்களே!" என்று இடிந்துபோய்விட்டாள். பம்பாய்க்கு வந்த பிறகுதான் உடல் நிலை கெட்டது என்பதை அவள் நம்பத் தயாராக இல்லை. "போன மச்சான் திரும்பி வந்தான் பூமணத்தோடே" என்று சொல்லிக்கொண்டு உட்கார்ந்தேன். அன்று சிவராத்திரிதான். பொழுது விடியும் வரை பிரயாண அனுபவங்களைப்பற்றியும் ஊர் சமாசாரங்களைப் பற்றியும் அளாவிக்கொண்டிருந்தோம். காலையில் 'டிகிரிக்காப்பி' ஒரு டம்ளர் சாப்பிட்டு விட்டு சிரமம் தீரத் தூங்கினேன்.

இந்தியா திரும்பி சுமார் ஆறு மாதம் ஆகிவிட்டது. அதற்குள் கனடா தேசத்து அரசாங்கத்தாரிடமிருந்து ஒரு நல்ல வேலைக்கு அழைப்பு வந்திருக்கிறது. கனடாவின் பிரசித்திபெற்ற தேசீய ஆராய்ச்சிக் கழகத்தில் ஆராய்ச்சித்துறையில் மேலும் அனுபவம் பெறச் சந்தர்ப்பம் கிடைத்தால் அதை நழுவவிட மனம் வருமா! ஜூலை மாதம் திரும்பவும் கிளம்ப ஏற்பாடாகியிருக்கிறது. இந்த முறை ராஜியும் பிடிவாதமாக என்னுடன் வருகிறாள்! காலில் சக்கரத்துடன் பிறந்த பிள்ளை என்று அலுத்துக்கொள்கிறாள் என் தாய். தூரதேசம் போனால் க்ஷேமமாகத் திரும்பவேண்டுமே என்ற கவலை அவளுக்கு! போன ஜூலை 23-ஆந்தேதி அமெரிக்காவில் நியூயார்க்கில் கப்பலேறினேன். இந்த ஜூலை 23-ஆந்தேதி பம்பாயில் கப்பலேறப்போகிறேன். இதுவும் ஒரு விசேஷந்தான்!

முற்றும்.




# இந்துமதி

ஹிந்திமூல ஆசிரியர்- சந்திரகுப்த வித்யாலங்கார்

தமிழாக்கம்- குகப்ரியை



1

அவள் ஒரு தாசியின் மகள் என்பது டெல்லியிலுள்ள எல்லோருக்கும் தெரியும். அவள் பிறப்பைப்பற்றிப் பலவிதமான வதந்திகள் உலவின. சாவடி பஜாரிலுள்ள தாரா என்னும் அழகிதான் அவள் தாய் என்றும் ஐக்ய மாகாணத்திலுள்ள ஒரு தாலூகாதார் தான் அவள் தகப்பன் என்றும் சிலர் சொல்லுவதுண்டு.

அவள் தாய் ஏதோ தவறித் தாசிக் குலத்திலே பிறந்துவிட்டாள் என்பதும் அந்தத் தாலூகாதாரன்மேல் மெய்யன்பு வைத்திருந்தாள் என்பதும் ஊரறிந்த இரகசியம், ஆகவே அன்பின் சின்னமான இந்தக் குழந்தையை அவள் ஒரு குலமகள் போலவே வளர்க்க வேணுமென்று விரும்பியதில் ஆச்சர்யமென்ன?

ஆனால் வேறுசிலர், குழந்தை அவளுடையதல்லவென்றும் தன் தொழிலுக்கு வாரிசாக எங்கிருந்தோ கொண்டு வந்து வளர்க்கிறாளென்றும் சொல்லுவதுண்டு. எது உண்மையோ? யாருக்குத் தெரியும்? எது எப்படி இருந்தாலும் இந்துமதி எந்தக் குலமகளையும் விடக் குறைந்தவள் அல்ல என்பதைத் தன் ஒழுக்கத்தினாலும் உயர் குணங்களாலும் நிரூபித்துவிட்டாள். புடம்போட்ட பசும் பொன்னேபோல அவளது ரூப ஸௌந்தர்யமும் குண ஸௌந்தர்யமும் ஒன்றையொன்று மீறி ஒளிவீசிக்கொண்டிருந்தன.

அவளது பேரழகை அப்படியே பருக ஆயிரக்கணக்கானவர்கள் காத்திருந்தார்கள்.

யாழினும் இனிய அவள் குரலுக்காக, அவள்கானமுதத்தைப் பானம்செய்ய ரஸிகர் குழாம் ஏங்கிக் கிடந்தது. ஆனால் ஒருவராவது அவளைக் களங்கமற்ற குலமகள் என்ற முறையிலே ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. அதற்கு வேண்டிய தைரியமும் இல்லை. அனலைப் பனிக் காலத்திலே குளிர் காய உபயோகிக்கலாம். ஆனால் வீட்டிலே கொண்டுபோய் வைத்தால் வீட்டையே எரித்துவிடாதா? என்று நினைத்தார்கள் அவர்கள்.

ஆனால் இன்று உலகிலே இந்துமதி தன்னந் தனியாளாய் நின்றாள். இந்தப் பரந்த உலகில் தன்னுடையவர் என்று சொல்லக் கூடியவர் யார்? அவளிடம் தன்னைத்தானே சாப்பாற்றிக் கொள்ளக்கூடிய வசதிகளும் போதுமான பொருளும் இருந்தன. எந்தப் பொருளைப் பற்றியும் கவலை இல்லை. பொழுது போக்குவதற்கு வேண்டிய நல்ல புத்தகங்கள், அறிவை வளம்பெறச் செய்யும் சிறந்த இலக்கியங்கள், தையல் வேலைக்கு உரிய மெஷின், ஊசி, வர்ண நூல்கள் இவைகள், ஏராளமாயிருந்தன. அந்தப் பெரிய மாளிகையிலுள்ள திரைச்சீலைகள் முதல் மேசை விரிப்புக்கள் வரையிலுள்ள எல்லாம் அவளது தையல் வேலைகள்தான்.

சாயங்கால வேளைகளில் மாடியின் அறையிலிருந்து இனிய கீத நாதம் காற்றிலே மிதந்து வரும். மெய்மறந்தவளாய்ச் சித்தாருடன் கீதமிசைத்துக் கொண்டிருப்பாள் அவள். இதுவே அவளுக்குப் பரம திருப்தி. இவைகளை விடுத்து அதிகமாய்ப் பேசுவது கூட அவளுக்குப் பிடிக்காது. ஆனால் அவள் தோழிகளிற் சிலர் அவளைக் கர்வி என்றும் அகம்பாவம் பிடித்தவள் என்றும் சொல்வதுண்டு. ஆனால் அவளோ ஒன்றையுமே சட்டைசெய்யாமல் பரம வேதாந்தி போலிருந்து விடுவாள்.

அவளது இளமை, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பூத்துக் குலுங்கி நின்ற அந்தப் பருவத்திலே அவள் முற்றும் துறந்த முனிவரேபோல் தனித்து வாழலானாள்.

## 2

பிப்ரவரி மாதம். சாயுங்காலம். பனி குறைந்து விட்டதென்றாலும் காற்றுச் சில்லென்று வீசிக் கொண்டிருந்தது. ஒரு மெல்லிய மகமல் போர்வையைப் போர்த்தவளாய் மேல் மாடியின் திறந்த முற்றத்திலிருந்து சாந்தினீசௌக் பக்கம் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். இராணுவ உத்தியோகஸ்தர்களின் பெரிய கூட்டமொன்று செங்கோட்டையிலிருந்து புறப்பட்டுச் சாந்தினீசௌக் வழியாகச் சென்று கொண்டிருந்தது. இந்த விசேஷமான ஊர்வலத்தின் பொருட்டு நெடுநாட்களாகவே ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஊர்வலம் தொடங்குமிடம் வெகு அழகாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அங்கிருந்து புறப்பட்டுச் சாந்தினீசௌக்கை அடையும் பொழுது மணி நான்கு அடித்தது.

இந்துமதி மேல் மாடத்திலிருந்து இந்த அழகிய காட்சியைப் பார்த்தவளாய் மெய் மறந்து நின்றிருந்தாள். முதலில் வெகுநேரம் வரையில் ஜனங்களுடைய கோலாகலமான சத்தம்தான் கேட்டது. இடை இடையே இராணுவத்தைச் சேர்ந்த குதிரை வீரர்கள் (ஆங்கிலேயர்) வந்துகொண்டும் சென்று கொண்டுமிருந்தனர். நெடுநேரம்வரை ஊர்வலத்திற்கான முன் ஏற்பாடுகளும் ஒத்திகைகளும்தான் நடந்து கொண்டிருந்தன. மணி நான்கு அடித்ததும் துப்பாக்கிகள் வானத்தை நோக்கிச் சுடப்பட்டன. உடனே வீரர்கள் இரண்டு வரிசையாக அணிவகுத்து நின்றனர். இதையடுத்துப் பாண்டுவாத்யம் முழங்கலாயிற்று.

வாத்யகோஷ்டியார் முன்னேறிச் செல்லவும் அணிவகுத்து நின்ற வீரர்களின் தலைவன் முன்னே செல்ல, அவன் பின்னே ஜயகோஷத்துடன் வீரர்கள் அணிஅணியாய் வருவது அவள் கண்களுக்குப் புலனாயிற்று. இதற்குள் இந்த ஊர்வலம் இவளது வீட்டின் அருகே வந்துவிட்டபடியாலும் இவள் மேல் மாடியிலிருந்து குனிந்து பார்க்க இயலாததனாலும் இவளது கண்களுக்குப் புலனாகவில்லை.

காட்சி மறைந்ததும் அவள் இந்தச் சந்தடிகளையே மறந்தவளாய் எங்கேயோ யமுனா நதியின் தடமும் அடிவானமும் சந்திக்கும் இடத்தையே நோக்கிய வண்ணம் நின்றிருந்தாள். திடீரென்று ஒரு பிரமாதமான பேரிரைச்சல். இவள் வீட்டை யடுத்தும் எதிர் வீட்டின் புறமிருந்தும், மற்றும் நாற்புறங்களிலுமிருந்தும் துப்பாக்கிகள் வெடிக்கும் ஓசை கேட்டது. நீல நிறமான புகைப் படலம் வான வீதியிலே எழுவதைக் கண்டாள்.

சற்று நேரத்திற்கெல்லாம் மிகவும் பீதியடைந்ததும் பயங்கரமானதுமான குரலில். பிடி! பிடி! விடாதே! என்று உரத்த குரலில், யாரோ கூவுவது கேட்டது. கண நேரத்திற்குள் என்னதான் நேர்ந்திருக்குமோ தெரியாது. ஏற்கனவே கோலாகலமாயிருந்த பொழுது அவள் என்ன விசேஷம், எதன் பொருட்டு இந்த அணி வகுப்பும் ஊர்வலமும் என்று கேட்கவுமில்லை. கவனிக்கவுமில்லை. ஆனால் இப்பொழுது மட்டும் என்ன நடந்து

விட்டது என்று கேட்க அவள் நெஞ்சு துடித்தது. நெடு நேரம் வரையில் சுவரருகே மறைவில் ஒன்றியிருந்து எதிர் வீட்டினருகிலே என்ன நடை பெறுகிறது என்பதைக் கவனிக்கலானாள்.

இப்படி எவ்வளவு நேரம் தான் நின்றிருந்தாளோ அவளுக்கே தெரியாது. நெடுநேரம் நின்றதனால் சலிப்புற்றவளாய் மேன்மாடியிலிருந்து இறங்கி இரண்டாம் மாடியிலுள்ள தன் அறையை அடைந்தாள். தான் மேல் மாடிக்குச் செல்லும் பொழுது திறந்திருந்த அறையின் கதவு இப்பொழுது சாத்தப்பட்டிருந்தது என்பதை அவள் கவனிக்கவுமில்லை, வழக்கமாய் உள்ளே நுழைவது போலக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தாள்.

மேசையின் அருகே சென்று நின்ற அவள் தொங்கவிடப் பட்டிருந்த படுதாவைப் பார்த்ததும் திடுக்கிட்டாள். அந்த அழகிய பட்டுத் திரைச்சீலை சற்றே அசைவது போலவும் தோன்றிற்று. அதன் அடியில் விரித்திருந்த நீலநிறமுள்ள ரத்ன கம்பளத்தின்மேல் பழுப்பு நிறமுள்ள இரண்டு பூட்ஸுகள் தெரிந்தன.

எதிர் பாராத இந்தக் காட்சியினால் அவள் இதயம் படீர் படீர் என்று அடித்துக் கொண்டது. உடல் முழுவதும் தெப்பலாய் வியர்த்தது. கைகால்கள் துவண்டு வில விலத்துப் போயின. ஏன்? என்ன நடந்து விட்டது? இது யாராக இருக்கும்? என்றெல்லாம் ஒரு கணம் ஓடிற்று அவள் சிந்தனைகள். விஷ ஜந்துக்கள் ஓடுவதைக் கண்டால் எப்படி பீதியுடனும், அருவருப்புடனும் வைத்த கண் வாங்காமல் பார்ப்போமோ அது போல அந்தப் பூட்ஸ்அணிந்த பாதங்களையேபார்த்த வண்ணம் திகைத்து நின்று விட்டாள் அவள்.

அந்தத் திரைச்சீலையோ எப்பொழுதும் போல அசைவின்றித் தொங்கிக் கொண்டிருந்தது. சற்றே சமாளித்துக் கொண்டு வேலைக்காரியைக் கூப்பிட நினைத்தாள். அதே சமயத்தில் திரை அசைந்து நகர்ந்தது. இராணுவ உடைதரித்த ஒரு அழகிய இளைஞன் வெளியே வந்து மிகுந்த வணக்கத்தோடு அவளை நோக்கிக் கரம் குவித்தான். அவன் வெளியே வருமுன் யாரோ எவனோ என்று நடுநடுங்கிய அவள் நேரில் கண்டு சற்றே பயந்தெளிந்தாள்.

அவள் இதுவரை ஆண்பிள்ளைகளுடன் நெருங்கிப் பேசியதுமில்லை, பழகியதுமில்லை. அவனோ குனிந்த தலை நிமிராமல் அவள் பாதங்களையே பார்த்து நின்றான். அவள் சற்றே தயங்கினாள். பிறகு மிகவும் மெதுவான குரலில் "நீ யார்?" என்றாள்.



அவன் சற்று நேரம் யோசித்துவிட்டு "அம்மணீ! நான் கொலைகாரன்" என்றான். இந்துமதியின் கண்களுக்கு அவன் ஒரு கொலைகாரனாகத் தோன்றவில்லை. இருந்தாலும் சமாளித்துக்கொண்டு "என்ன! என்னைக் கொலைசெய்யவா வந்திருக்கிறாய்?" என்றாள்.

முன் பின் அறியாத அந்த மனிதன் மிகவும் நடுக்கத்துடன் கூடிய குரலில் 'இல்லை' என்றான்.

"ஆனால் இங்கே எதற்கு வந்தாய்?"

"அம்மணி! இப்பொழுதுதான் கொலை செய்துவிட்டு ஓடி வந்திருக்கிறேன்."

"யாரை?"

"எவனுக்காக இந்த அணிவகுப்பு, விழா, இவைகளெல்லாம் கொண்டாடப் படுகிறதோ அவனை"

இந்துமதி திகைத்துப் போனாள். இந்த மனிதன் கொலையைச் செய்துவிட்டு இங்கே வந்து ஒளிந்திருக்கிறானே! இதென்ன விடுகதை போலல்லவா இருக்கிறது. கள்ளங்கபடமற்றுக் குழந்தைபோல் தோன்றும் இவன் தன் வாய்மூலம் தானே கொலைகாரன் என்கிறானே. அதுவும் யாரை? பெரிய அரசாங்க உத்தியோகஸ்தனை. இராணுவமோ நாற்புறமும் சூழ்ந்து நிற்கிறது. முதலில் நின்ற அவனை இவன் கொன்றிருந்தால் இவ்வளவு தூரம் தப்பி ஓடி வந்திருக்க முடியுமா? சீ! சீ! ஒரு நாளுமிருக்க முடியாது. ஒருவேளை பைத்தியமாயிருக்குமோ?என்றெல்லாம் நினைத்தாள் ஒருகணம்.

அப்பொழுதுதான் சற்றுமுன் வீதியிலே நடந்த அமளிகுமளியும் அதை ஓட்டிப் பிடி! பிடி! விடாதே என்ற கூச்சல் எழுந்ததும் ஞாபகம் வந்தது. ஆகவே இவன் பைத்தியமல்லவென்று தீர்மானித்தவளாய் அவனை ஏறிட்டுப் பார்த்து "எப்படிக் கொலைசெய்தாய்?" என்றாள்.

'பாம்' வீசி எறிந்தேன்.

சற்றுநேரம் இருவரும் மௌனம். பிறகு அவன் மிகவும் பணிவுடன் கூடிய குரலில், "எனக்கு இது உங்கள் வீடு என்பது நெடு நாளாய்த் தெரியும். தவிர உங்களுடைய இந்த அறையில் உங்களைத் தவிர வேறு யாரும் நுழைந்ததில்லை என்பதும் தெரியும். வெடிகுண்டை எறிந்து விட்டு இந்த வீட்டிலே அடைக்கலம் புகுந்தால் பிறர் சந்தேகிக்க மாட்டார்களென்பதும் உங்களை இதற்குமுன் பார்த்திராவிட்டாலும், சரணமடைந்தவர்களைக் கைவிடமாட்டீர்களென்பதும் தெரியும்" என்றான்.

அப்பொழுதும் அவன் கண்கள் அவளது பாதங்களின் மீதே படிந்திருந்தன. இந்த நிகழ்ச்சிகள் அவளைக் கண நேரம் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியது. இந்த இளைஞனைச் சந்திப்பது ஏதோ ஒரு மாய உலகிலே காணும் கனவுபோல் அவளுக்குத் தோன்றியது. மெல்லிய மலரை ஒத்த அவள் நெஞ்சம் அவன்மீது அனுதாபம் கொண்டது. இவன் தன்னைக்கொலைகாரன் என்று சொல்லிக் கொள்ளுகிறானே! அது உண்மையாயிருக்குமா? என்றும் தோன்றிற்று. மறுபடி மிகவும் தணிந்த குரலில்," "ஆனால் நீ எதன் பொருட்டுக் கொலைசெய்தாய்?" என்றாள்.

இராணுவ உடைதரித்த அந்த இளைஞன் திடுக்கிட்டான். இந்த அப்பாவிப் பெண்ணுக்குப் புரட்சிக்காரர்களைப் பற்றி என்ன தெரியும்? என்று நினைத்து அந்தத் தத்துவங்களையெல்லாம் சில வார்த்தைகளிலேயே தெரிவிக்க விரும்பினான். "அம்மணி! இந்தப் பாரத நாடு நம்முடைய நாடு. இப்பொழுது நம்மை அடக்கி ஆளுகின்ற இந்த வெள்ளையர்கள் நமது பகைவர்கள். இவர்களைக் கொல்லுவதனால் கடவுளுக்குத் திருப்தியே உண்டாகும்" என்று ஆவேசத்துடன் கூறினான்.

இந்துமதிக்கு இந்தப் பதில் ஒரு புதிய பிரச்னையாய்க் காட்சியளித்தது. அந்த இளைஞனது தேச பக்தியும் பேசும் பொழுதே தோன்றும் ஆவேசமும் அவளைப் பிரமிக்கச் செய்தன. மேலும் அவன் பேசிக் கொண்டே போனான். உணர்ச்சிப் பெருக்கும் ஆவேசமும் மிகுந்த அவனது வார்த்தைகள் அவள் நெஞ்சை உருக்கின. நல்லது உன் பெயர் என்ன? என்றாள்.

"மகேசன்"

இந்துமதி புன் முறுவலுடன் "ஐயா! கொலைகாரரே! இப்பொழுது உங்கள் உத்தேசம்தான் என்ன? என்றாள்.

அவன் மிகவும் பணிவுடன் அவளை நிமிர்ந்து பார்த்து இன்று ஒரு நாள் மட்டும் இந்த அறையில் ஒளிந்திருக்க அனுமதி தர வேணும். இதுமட்டும் தாங்கள் கருணை செய்தால் போதும்" என்றான்.

"அம்மணி நீங்கள் தாங்கள் என்கிற மரியாதைகள் வேண்டாம். நீ என்று பேசினால் போதும்" என்றாள்,

அவன் மெய் சிலிர்த்தான். இதற்கு என்ன பதில் சொல்லுவது என்று விளங்காதவனாய் விழித்தான். இந்துமதி நெடுநேரம் அவனை இந்த நிலையிலேயே வைக்க விரும்பவில்லை. மிகவும் மெல்லிய குரலில் "தாராளமாய் இங்கே தங்கலாம்" என்றாள்.

மகேசன் திகைத்துப் போனான். ஏனோ? ஒரு வேளை இங்கே தங்குவது கௌரவக் குறைவு என்று நினைத்தானோ? இந்த நெருக்கடியான நிலையில் குறை எது? நிறை எது? உயிருக்கு மிஞ்சிய பயம் உண்டா? வீதியிலே அடி எடுத்து வைத்தால் போதும் அவ்வளவு தான்! என்றெல்லாம் நினைத்தான். இந்தச் சமயத்தில் "நிற்பானேன்? உட்காரலாம் என்று கூறினாள்" அவள். அவள் சொற்கள் அமிர்த தாரையாக அவன் செவிகளுள் வீழ்ந்தன.

3

மனிதர்கள் சந்தர்ப்பங்களுக்கு அடிமைகள். ஏதேதோ தீர்க்காலோசனைகள் செய்து தான் ஒவ்வொருவனும் செயலில் ஈடுபடுகிறான். ஆனால் சமயமும் சந்தர்ப்பங்களும் எங்கிருந்தோ வந்து எங்கேயோ கொண்டு போய்ச் சேர்க்கின்றன. மகேசன் புரட்சிக்காரர்களுள் முக்கியமான ஒருவன். அந்தத் தொண்டர் படைக்குள்ளே அவன் மிகுந்த புத்திசாலி என்றும் வீரன் என்றும் துணிச்சல் மிகுந்தவன் என்றும் பெயர். இதன் பயனாகவேதான் அந்தப் பெரிய உத்தியோகஸ்தனைக் கொலை செய்யும் வேலை அவனுக்கு அளிக்கப்பட்டது. அது நியாயமா இல்லையா என்பது வேறு விஷயம். ஆனால் கட்டளை பிறந்தவுடனேயே இடத்தையும் நேரத்தையும் அறிந்த அவன் இந்துமதியின் வீட்டின் மேல் மாடியில் ஒளிந்து கொள்ளலாம் என்ற முடிவுக்கு வந்துவிட்டான்.

டில்லியிலுள்ள குஞ்சு குழந்தைகள் முதல் பழுத்த கிழங்கள் வரை யாரும் இந்துமதியின் வீட்டைச் சந்தேகிக்கவோ சோதிக்கவோ நினைக்கமாட்டார்கள் என்பதும் அவனுக்குத் தெரியும். இது வரையில் விஷயங்களெல்லாம் எதிர் பார்த்தபடியே ஒழுங்காய் நடந்து விட்டன. ஆனால் இந்துமதியை நேரில் கண்ட பொழுது அவன் ஆச்சரியப்பட்டுப்போனான். அவள் ஒரு சாதாரணமான தாசிப்பெண் என்றுதான் நினைத்திருந்தான். ஆனால் இவ்வளவு தெய்வீக சௌந்தர்யத்துடன் குழந்தையுள்ளம் படைத்தவளாய் இருப்பாள் என்பதை அவன் எதிர் பார்க்கவில்லை,

அவன் ஒரு புரட்சிக்காரன். அவன் கண்களுக்கு உலகம் முழுவதும் கொலை களவு குரூரம் அநியாயம் வஞ்சனை துரோகம் இவைகள் தான் நிறைந்திருப்பது போல் தோன்றிற்று. மென்மை, தயை, கருணை இவைகள் வீரருக்கு அவசியமான குணங்கள் அல்ல. அவை வீரனைக் கோழையாக்கும் என்றும் அவை பெண்மைக்கே உரிய குணங்கள் என்றும் இதனாலேயே பெண்கள் அபலைகளாகவும் அபாக்கியவதிகளாகவும் கருணைக்குரியவர்களாகவும் இருக்கிறார்கள் என்றும் நினைப்பார்கள். இதே போல இந்துவைப் பற்றியும் அவன் அலட்சியமாகத் தான் எண்ணியிருந்தான்.

இதுவரையில் அவன் கண் எதிரில் நின்ற திரை திடீரென்று விலகியதை உணர்ந்தான். முன்பு வறண்டு ஒரே கடுமையுடன் சுவையற்றிருந்த இந்த உலகம் புதிய உருவத்துடன் கண் முன் தாண்டவமாடுவது போல் தோன்றிற்று. இந்தப் புதியதும் அதிசயமானது மான மாறுதலினால் அவன் புரட்சிக் கூட்டத்தில் சேரும் பொழுது செய்து கொடுத்த பிரதிக்ஞைகளெல்லாம் காற்றிலே பறக்கலாயின.

அவன் அந்த வீட்டில் தங்கியிருந்தது இரண்டே யிரண்டு நாட்கள்தான். இந்து தன் நெஞ்சைப் பறிகொடுத்துவிட்டாள். இந்த இரண்டே நாட்களில் எஜமானியின் போக்கில் ஏற்பட்ட மாறுதல்களைக் கண்டு வேலைக்காரர்கள் திகைத்துப் போனார்கள்.

இந்துமதியை நேருக்குநேர் சந்தித்த பிறகு உலகத்திலுள்ள அழகுவாய்ந்தவைகளுள் சிறந்தது கபடமற்ற குணம் ஒன்று தான் என்று மகேசனுக்குத் தோன்றிற்று. இந்துவின் இந்த உயர்ந்த குணம் அவனை ஆட்கொண்டுவிட்டது. ஆனால் மற்றவர்களுக்கு இதைப்பற்றி என்ன தெரியும்? இந்து தன் வேலைக்காரி நதீயாவிடம் மகேசனைப்பற்றிய விஷயங்களைச் சொல்லிவிட்டாள். மெல்ல மெல்ல வீட்டின் மற்றைய வேலைக்காரர்களுக்கும் இது பரவிற்று. ஆனால் அவர்கள் இந்துமதி தன் தாயின் வழியைப் பின்பற்றிவிட்டாள். என்றே முடிவுக்கு வந்தனர்.

இரண்டு நாட்களுக்குப்பின் ஒரு நாள் நடுநிசியில் அந்த இளைஞன் விடை பெற்று கோரக்பூரை நோக்கிச் சென்றான். தன் அறிகுறியாகத் தன் பெயர் செதுக்கிய மோதிரம் ஒன்றை யளித்துப் போனான். ஒளிந்து வாழப் போகும் விலாசத்தையும் அவளுக்குச் சொல்லியிருந்தான். புரட்சி வீரர்களின் கொள்கைப்படி இதுகொடுங்குற்றம். இதற்கு மரண தண்டனையும் விதிக்கலாம் என்ற விஷயமும் அவனுக்குத் தெரியும். இருந்தாலும் அதையும்மீறி அவன் சொல்லியிருந்தான்.

எங்கிருந்தோ வரும் புயல் போலத் திடீரென்று அவள் வாழ்க்கையில் வந்தான். மகேசன் இரண்டே நாட்கள் தான் தங்கியிருந்தாலும் என்றென்றைக்கும் தன் நினைவுகளை அந்தப் பெண்ணின் நெஞ்சிலே விடுத்துச் சென்றான். இந்த நினைவுகள் இன்பமா துன்பமா? என்று விளங்காத ஒரு வேதனையாக இருந்தது அவனுக்கு. ஆனால் இந்துமதியின் நெஞ்சிலே அவைகள் நிரந்தரமாய் இடம் பெற்றுவிட்டன.

(அடுத்த இதழில் முடியும்)




# முருகன் அருள்

என். சுப்பிரமணியம்

சிவகுருநாதப்பிள்ளைக்கு முருகன் திருவருள் நேரிடையாக் கிடைத்துவிட்டது! அவராகப் பார்த்து உள்ளே போகவிட்டால்தான், பக்தன், பரம பக்தனாய்ப் போய் மெய்யுருகி, கண்ணீர் சோர அப்பன் முருகப் பெருமானின், ஆண்டி முதல் அரசி வேடம் வரை யாவரும் தரிசிக்கமுடியும்.

கோவிலின் நந்தியைவிட மிக முக்கியமான பொறுப்பை அவர் ஏற்று நடத்திவந்தார். உண்டியல் குடங்கள் மேற்பார்வை அன்னாரிடம் இருந்தது. காணிக்கை கறக்கும் நாவன்மை, பக்தி பரவசம் சொல்லுக்கடங்காது. கோவிலின் செல்வாக்கையும் கடவுள் சாந்நித்தியப் பெருக்கையும் வளர்த்த பெருமை சிவகுருநாதப் பிள்ளைக்கே சாரும்.

சங்கரபட்டர் தீபாராதனை குடத்தட்டை முருகப் பெருமானுக்குச் சமர்ப்பித்து, 'ஓம்' என்ற சடாக்ஷர மந்திரத்தை எழுதுவது முதல், ஒத்தூதும் கணேசக் கம்பர் ஈறாக அவர் கண்ணுக்கும் கருத்துக்கும் தயவுக்கும் காத்திருப்பார்கள். கோவிலுக்கு வெளியே இருந்த பாமர பக்திமான்களுக்குக் கடவுள் முருகப் பெருமானைக் கோவில்கொண்டிருந்தாலும், கோவில் சிப்பந்திகள் அத்தனை பேருக்கும் படியளக்கும் தெய்வமாக, காரியானுகூலம் செய்யும் நடமாடும் கோவிலாக இருந்தார் சிவகுருநாதப் பிள்ளையவர்கள்!

கட்டுக் குட்டையாகக் கரளையான திண்டோளிலே விபூதிப்பட்டையும் நெற்றியிலே திருநீறும் இலங்கி, சிறிய சந்தனப் பொட்டும் அதன் மேலே பட்டும் படாமலும் குங்குமம் சுடர் தெறிக்கும். பிள்ளையவர்கள் கருமேனியின் நிறத்தைக் கண்டத்திற்கு மேல் கீழாகப் பிரிக்கும் எல்லைக்கோடாக இருக்கும் உருத்திராட்சக் கயிறு; ஒரு காலத்தில் உருத்திராட்சமாக இருந்து நாளாவட்டத்தில் தங்கப்பட்டையிட்ட உருத்திராட்சம் முறுக்கேறிய சிகப்பு பட்டுக் கயிற்றினால் கட்டப் பெற்று, கழுத்தை வலம்வரும். பிள்ளையவர்கள் அறையிலே நீலநிறப் பட்டுப் பையில் எப்போதும் முருகன் பிரசாதமான பன்னீர் விபூதியின் மணமும் நாலுமுழ வேட்டியும், வேட்டிக்கு மேலே இறுகக் கட்டிய கல்லிடைக் குறிச்சி ஈரிழை கறுப்புச்சிட்டி முண்டும் காட்சி தருவன,

ஆறு கால பூசைக்கு முருகப் பெருமான் நைவேத்திய படித்திரங்கள் பெறுவதிலிருந்து கோவிலின் வரவு செலவு, குத்தகை தவா பணம் ஐந்தொகையெடுப்பு வரை சகல காரியங் களிலும் சிவகுருநாதப்பிள்ளையவர்கள் இல்லாமல் நடவா...... ..

மூலவருக்கும் உத்ஸவருக்கும் எந்தெந்தக்காலத் தில் என்னென்ன உரிமைகள், எந்தத் திதியில் பக்தகோடிகளுக்குத் தரிசனம் உண்டென்பதை யும் விழாக் காலத்தில் போலீஸார் பந்தோபஸ்து, முதல் தீவட்டிக் காரர்களின் எண்ணெய்ப் பிசுக்கு காரியம் வரை அவர் தலையில் சுமத்தப்பட்டிருந் தன. அவ்வப்போது கோவிலுக்கு வரும் டிரஸ்டி கள் மாறுபாடு, மத பரிபாலன போர்டு, மானே ஜர் மாற்றங்கள் அவர் அதிகார வரம்பையோ ஆதிக்க நிர்வாகத்தையோ மாற்றவில்லை. என் றும் இள முருகனின் மன உற்சாகத்தோடு சிவ குருநாதப்பிள்ளையவர்கள் உலாவி வந்தார்கள்.

திடீரென்று வானத்தில் தோன்றும் வால் நக்ஷத்திரம், ஆனாலும் ராசாதிராசன் ஆவிக்குச் சுருக்கிடுகிறது என்கிறார்களே அது போன்ற சம்பவம் நிகழ்ந்தது.

முருகன் கோவில், ஊருக்கோ, ஊராருக்கோ சொந்தமாக இல்லாமல் மடத்திற்குச் சொந்த மாக இருந்தது. அந்த மடத்தின் அதிபதியாக இருந்தவர்கள் காலமாகியபின் குட்டித்தம்பிரான் ஸ்ரீலஸ்ரீ ஆனார். அந்த மடத்தின் வரவு செலவு களையும் சிப்பந்திகளையும் மேற்பார்த்து நிர்வாகத் தையும், கெடுபிடியையும் செய்யப் புறப்பட்டு, சிவகுருநாதப்பிள்ளை, தலையிலே கல்லைப் போட் டார். மடாதிபதி க்ஷேத்திராடனம் கிளம்பி, முருகப் பெருமானின் கோவிலையும் சிப்பந்திகளை யும் தரிசித்தும், தரிசனம் தந்தும் வந்த காலை அவர் சிப்பந்திகளிடம் விசாரணை நடத்தியபோது மானேஜர், டிரஸ்டி எல்லோருமே சிவகுருநாதப் பிள்ளையின் துணையின்றி, தனித்து விவகாரங் களைச் சொல்லவோ, பதில் இருப்புக் கட்டவோ முடியாது தவிப்பதைக் கண்டார்.

போதாக் குறைக்கு இன்றைய மடாதிபதி, மாஜிக் குட்டித் தம்பிரானாக இருந்தபோது சிவ குருநாதப்பிள்ளையவர்களுக்கு இருக்கும் செல்வாக் கையும் பராபரியாகத் திருச்செவியில்ஏற்றதுண்டு. முக்கிய நபராக விளங்கும் சிவகுருநாதப்பிள்ளைக் குத் தனித்துப் பேட்டியளிக்க விரும்பினார் மடாதிபதி.

சிவகுருநாதப்பிள்ளையவர்கள் பள்ளிக்கூடத்தில் ஆனா ஆவன்னா படிக்காது போயினும் வாழ்க் கைக் கல்லூரியிலே அதிமேதாவியாகத் தேறிய வர். சம்பிரதாய வார்த்தைகள், பக்தி வழிபாடு கள் எல்லாம் அறிந்த அவரிடம் மடாதிபதியின் அன்புக்குப் பாத்திரமான சமயம். கோவிலின் சிறிய வருமானம் முதல் பெரிய செலவினம் வரை அத்தனையும் மனக் கணக்கிலே ஏடு புரட்டித் தந்தவருக்கு எழுதப் படிக்கத் தெரியாது, கணக்கு ஏட்டிலே ஏற்றி இறக்க தெரியாது என்பதைக் கண்டதும் மலையத்தனை மதிப்பும் கிடுகிடுபாதாள அவமதிப்பாகிவிட்டது.

'அப்படியானால் நீர் சொல்லும் கணக்கு வழக்கு வரவு செலவு உத்தேசந்தானா? ஏட்டிலே கண்ணால் காணாதவை'

'திவ்விய சமூகத்திற்கு இந்த ஊழியன் தெரிவிப்பது அதுதான். எனக்கு எழுதவோ படிக்கவோ தெரியாது.'

'தெரியாதா? வரவு செலவு எப்படி பார்க் கிறது?

'கணக்குப் பிள்ளைகள் பார்க்கிறதை அவ் விடத்திய சமூகத்திற்கு வணக்கத்தோடு தெரிவிக் கிறேன்'

'கணக்கு வழக்கை எழுதுவது வேறு ஆட்கள், அதைச் சொல்வது நீவிரா?'

'எனக்குப் பழக்கத்தால் வரவு செலவு தெரி யும்'

'எத்தனை வருஷமாக இருக்கிறீர்.'

'முப்பது வருஷமாக அவ்விடத்திய பிச்சை தான்.'

'அப்படியா?'

'மடாதிபதி யோசனையில் ஆழ்ந்து விட்டார். இதுகாறும் முருகன் கணக்கு வழக்கு அத்தனை யும் பார்த்த சிவகுருநாதர் எவ்வளவு பணம் சாம்பாதித்திருக்கலாம். மேலும் பொறுப்பான பதவியை வகிப்பவர் படிப்பு வாசனை இல்லாத வராக இருக்கக் கூடாது என்ற எண்ணமும் பிறந்தது.

'இன்னும் ஆறு மாதத்தில் வரவு செலவை நீவிர எழுதி முடிக்கக் கற்றுக் கொள்ள வேண் டும்.'

'தேவரீர் சமூகத்திற்கு விண்ணப்பம். இந்த அடிமையால் இனி படிக்க இயலாது என்பதை மிக மிகத் தாழ்வுடன் சொல்லுகிறேன். கேள்விப் படிப்பாக எனக்குத் தேவாரம் திருவாசகம் திருவெம்பாவை பாடம் உண்டு'

'பிறர் கொடுக்கும் கணக்கு வழக்கை அனுப்பு கிறீர், உம்மைத் தட்டிக் கேட்க இங்கு ஒருவரும் இல்லை. படிப்பு வாசனையில்லாத உமக்கு இந்தப் பொறுப்புக்குச் சம்பளம் என்ன?'

'முருகன் கிருபையால் நூறு ரூபாய் கொடுக் கிறார்கள்.'

'நாம் ஒப்புக் கொள்ள முடியாது. சற்றுத் தெளிந்த பின்னர், மனுச் செய்யின் இதே ஊழியத்திற்கு நாம் கவனிப்போம்.'

மடாதிபதியின் பேட்டியினுல் அவர் வாழ்க்கையில் ஒரு திருப்பம் நேர்ந்தது. சிவகுருநாதத்தின் நேர்மை, பக்தி, நிர்வாக உழைப்பு இத்தனையும் டிரஸ்டிகள், மானேஜர் சொல்லியும் ஸ்ரீலஸ்ரீ மடாதிபதி சுவாமிகள் பிடிவாதமாக இருந்து விட்டார்கள்.

தக்ஷிண சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு மடாதிபதிகள் அதிகார பீடத்திற்குப் புறப்பட்ட போது. சிவகுருநாதப்பிள்ளையவர்கள் சாப்பாட்டுக்கு வேறு வேலை தேடும் வகையில் நாலா திசைகளிலும் தமது சுற்றுப் பிரயாணத்தை ஆரம்பித்தார்.

2

சிவகுருநாதப்பிள்ளைக்கு வேலை போய் விட்டது என்பதைக் கண்ட பலரும் அனுதாபம் கொண்டார்கள். முதியோர் கல்வி ஸ்தாபனத் தலைவரே முருக பக்தியுடைவர்–பாடஞ் சொல்லி வைப்பதாக முன் வந்தார்.

சிவகுருநாதப்பிள்ளைக்குச் சிலேட்டும் குச்சியும் சூலஆயுதங்களாக இருந்தன. சூரசம்ஹாரம் செய்த முருகப் பெருமானையே அவர் சப்பரத்தை முன்பின் ஓடச்செய்து பல்லக்குத் தூக்கிகளை ஆட்டி அசைத்தவர்தான். அனுவும் ஆவன்னுவும் செய்த ரணகணங்களை அவரால் சகிக்க முடியவில்லை.

மூன்று நாளாய் இராப் பகலாக அவர் செய்த முயற்சியிலே அனுவுக்கும் ஆவன்னுவுக்கும் வித்தியாசம் கண்டார்; மனசில்தான். எழுதமுடியாது போகவே சிலேட்டையும் குச்சியையும் வீட்டுக்குப் பின்புறமுள்ள நயினர் குளத்து வாய்க்காலில் விட்டெறிந்தார். எல்லோரும் முருகன் அண்ணுச்சிக்கு இனி என்ன குறை என்றுர்களே தவிர, யாரும் அரையணு உதவ முன்வரவில்லை. மனக் கஷ்டம், குடும்பத்திலே உள்ள இரண்டு மூன்று பெண்களின் பருவ வயது, அருமையான மனைவியின் அன்பிற்காக அவர் வாழ விரும்பினுர்.

கையிலிருந்த சிறு தொகையை யெடுத்துக் கொண்டு பழனிக்கு மன ஆறுதல் தேடி ரயில் ஏறினுர்.

நாளாவட்டத்தில் முப்பது வருஷத்திய சிவகுருநாதப்பிள்ளையின் தயவின்றியே முருகன் மூலவரும், உத்ஸவரும் இயங்கத் தொடங்கினுர்கள். கோவில் சிப்பந்திகளுக்கு வலது கை போன மாதிரி இருந்தது.

3

மலையிலிருந்து கீழே குதித்த இள முருகனைப் போன்ற சிவகுருநாதப்பிள்ளை யவர்கள் இறங்கியதைக் கண்ட பெண்டு பிள்ளைகள் மிக்க குதூகலமடைந்தனர். ஆறுமாத காலமாகப் பிள்ளையவர்கள் எப்போதோ இரண்டொரு வரி மணியார்டர் கூப்பனில் எழுதிய க்ஷேமலாபத்தோடு சரி, இன்று வில்வண்டி கொள்ளாத சாமான்களுடன் மடி நிறைய நோட்டும் பணமுமாக வந்து சேர்ந்தார். தமது தொழில் முறையை மனைவியிடம் கூட அவர் சொல்லவில்லை.

மறுவாரத்தில் ஆள் மறைந்தவரை அதன் பின்னர் மணியார்டர்களிலே காணமுடிந்தது. இப்போது அவரது விலாசம் மதுரையாக இருந்தது. அதன் பின்னர் மின்வெட்டுப் போல ஊருக்கு வந்து பழைய முருகனையும் கோவில் சிப்பந்திகளையும் கண்டு போனவர் விலாசம் திருப்பதியாகவும் இருந்தது.

காலக்கிரமத்தில் அவர் ஸ்ரீரங்கம் முதல் திருச்சி வரை திருச்செந்தூர் முதல் வடபழனி வரை விலாசங்கள் மாறி மாறி வந்தன. அடிக்கடி அவர் வீடுகள் வாங்குதல், கடைகள் வாங்குதல் என்ற பல இனங்களில் பணம்போட முடிந்தது.

முப்பது வருஷமாகக் காலை ஐந்து மணி முருகன் திருக்கதவைத் திறந்து இரவு அர்த்த ஜாம பூஜை முடித்து 11–மணிக்கு வந்து சயனித்தவர், எவ்விதப் பணத்தையும் வீடு வாசலையும் காணுதவர் சுகசௌக்கியமாகப் பகலில் தூங்கும் வசதியைப் பெற்றுர்; பெண்டுகளுக்குப் பொன்னிலும் வைரத்திலும் இழைத்துப் போட்டார். அடிக்கடி நினைத்ததும் பல ஊர்களுக்குக் கிளம்பி விடுவார். புறப்பட்டால் திரும்பி வரும்வரை யாருக்கும் என்ன, எங்கே எதற்கு, என்றும் தெரியாது.

ஒரு சிலர் கள்ள நோட்டுகள் அடிப்பதில் பங்கெடுத்து வருகிறுர் என்று கூட வதந்தியைக் கிளப்பி விட்டனர். திடீரெனப் பணக்காரன் ஆகிறவர்களுக்கு வரும் அவதூறுகள் ஏற்பட்டன. ஊரில் உள்ள பணக்காரர் பட்டியலுக்குள் அவர் பெயரும் ஒட்டிக் கொண்டது. பெண்களுக்குத் தகுந்த இடத்தில் வாழ்க்கை செய்ய அவர் முயற்சித்தார்.

சிவகுருநாதப்பிள்ளையை நேரில் சந்திக்கும் வாய்ப்பு எனக்குத் கிடைத்தது. அவருடைய இளையபெண் தேவானையை என் உறவினர்களில், ஒருகுடும்பத்தார் பெண் பார்த்தனர். இந்த அதிசய மனிதரைக் காணும் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி அவரைப் பார்க்கவும் பழகவும் ஆசை கொண்டேன்.

நானுக இதுவரை கேள்விப்பட்ட ஆபத்து சம்பத்துக்களைச் சிவகுருநாதப்பிள்ளையே எவ்வித உணர்ச்சியுமின்றி. சொல்லி வந்தார். தமக்குப் பணம் சேர்ந்த விதத்தை மட்டும் அவர், சிதம்பரம் ரகசியமாக மறைத்து விட்டார். இந்த

அதிசயப் பணக்காரரின் வெளிவேஷப் பக்திப் பூச்சை என் உறவினர்கள் நம்ப வில்லை. பெண் தேவானை அதிரூபசுந்தரியாக இருந்தாலும்...... ஆமாம் சிவகுருநாதம் என்றுவது அகப்பட்டுக் கொண்டால்?

நான் மனதிற்குள் தவித்து,' உங்கள் பெண்ணை மணஞ் செய்யப் பையனுக்குத் திருப்தி. உங்கள் சொத்து விபரங்களில் பிறர் தலையிடக்கூடாது என்றாலும், ஒரு சந்தேகம்......' என்று தயங்கினேன்.

'அடேடே, திருட்டுப் பயல் மகளைக் கட்டி விட்டோமா. என்று சந்தேகம். ஜெயிலுக்கு இன்றில்லாவிட்டால் என்றுவது போவேன் என்பதுதானே உங்கள் உறவினர் கருத்து?'

நான் சொல்லாமற் சொல்லிய, புரிய வைக்கப் பட்ட கஷ்டத்தை அவர் தெள்ளத் தெளிய வெளிப் படையாகச் சொல்லிவிட்டார்.

'ஆமாம்'

எனக்கு முப்பது வருஷம் அன்னம் போட்ட முருகன் படியளந்த தெய்வம் திடீரென்று ஸ்ரீலஸ்ரீ மடாதிபதிகள் விஜயத்தால் ஆபத்து வந்ததாய் நினைத்தேன். எனக்கு வந்த கோபத்தில் கோவிலை உடைக்கலாமாவென்று தோன்றியது. கடவுளாவது கல்லாவது என்று சபித்தேன். நான் முப்பது வருஷமாக உழைத்துப் பாடு பட்டேன். உண்ட அன்னமும் நாலு முழம் வேஷ்டியும் தவிர, முருகன் என் பணிக்கு என்ன கொடுத்தார்? இந்த ஊர் கோவிலில் குடி கொண்ட வேல் முருகனுக்கு என் பணிக்குப் பணம் கொடுக்க வசதியில்லை! அதனால் மடாதிபதிகள் உருவிலே வந்து என்னை ஆண்டியாகத் துரத்தினார். ஏன் திகைக்கிறீர்கள்.?' என்றார். அவர் தங்க உருத்திராட்சம் ஏளனச் சிரிப்பின் போது கண்டத்திலே ஜ்வலித்தது, விஷ முண்ட சிவனை நினைப்பூட்டியது.

'அப்படியானால் இந்தப் பணம் அவ்வளவும் முருகன் அருள்தானு'

'அவனன்றி ஓர் அணுவும் அசையாது. நம்பினோர்க்குத் தெய்வம், நம்பாதவர்க்கு கல். முருகன் அருள் என்னைப் பழனிக்கு அழைத்தது. என் கையில்பணம் மிக மிகக் கொஞ்சம். வேலவனைத் தரிசித்து மன ஆறுதல் பெற சூடஞ்சாம்பிராணி வாங்கப்பார்த்தேன். நான் பார்த்த இடத்திலே கடையில்லை.

'முருகன் கிருபை. வெளியூர்க்காரர்கள் வந்து தங்கி அங்கிருந்து புறப்பட்டு வரும் வழியிலே கடையில்லை. இது என் சிந்தனையா? முருகன் சிந்தனை, முருகன் விட்ட வழி. நான் நடந்து போய் அன்று முருகனைத் தரிசித்தேன். மறுநாள் எந்த இடத்தில் கடையில்லையே யென்று நினைத்தேனோ அங்கே மறுநாள் கடை-சிறுசுதான்-முளைத்து விட்டது. நான் ஒருவனே முதலாளி, வேலைக்காரன், கணக்கப்பிள்ளை. இரண்டு டப்பா சூடன், ஒரு சீப்பு பழம், ஆறு தேங்காயுடன் ஆரம்பித்த கடையை இன்றுபோய் நீங்கள் பார்க்க வேண்டும். ஆயிரம் ரூபாய்க்குச் சரக்கு இருக்கிறது. அன்றாடம் 300 முதல் 400 ரூபாய் வரை வியாபாரம்.'

'ஓகோ தனக்கு மட்டும் சேவகனை வேண்டாம். தம் பக்த கோடிகளுக்காகச் சேவகனை இரு என்று மாற்றி விட்டார் உங்களை'

'பழனியில் கடை வைத்த காலத்திலே உள்ளூர் கடைக்காரர்கள் விரோதம் எத்தனையெத்தனையோ வந்தன. முருகன் தீர்த்து வைத்தான். பிறகு நான் இல்லாமலே, கடை நடக்கும் என்ற நிலை வந்தது. வேலையாட்களுக்கு லாபத்தில் சம பங்கு என்றேன். என் பணம் நான் கடையில் இல்லாத போதும், என் வீடு தேடி வந்து விடுகிறது: கோவில் உண்டியல் குடத்திலும் பெட்டியிலும் விழவில்லையா?, அதுபோல கேட்காமலேயே வந்துவிடுகிறது என் பணம். மேலும்.'

'எனக்குப் புரிந்து விட்டது. பழனியில் ஆரம்பித்தது போலவே ஆறுபடை வீடுகளிலும் கடை ஆரம்பித்தீர்கள்.'

"எப்படிப் புரிந்தது?"

'எல்லாம் முருகன் திருவருள்.'

"இன்னும் ஒரு விஷயம் இருக்கிறது."

'இந்தக்கடை—தேவாலயத்தை அடுத்த கடையை—சிவனேடும் அவன் மைந்தன் கோவிலோடும் நிற்காமல் சிவத்தோடு வைஷ்ணவத் திடமும் காட்டி விட்டீர்கள்.'

'அடடே யூகித்து விட்டீர்களே!'

'ஆமாம் திருப்பதியிலும். ஸ்ரீரங்கத்திலும் இருந்து மணியார்டர் வந்தன; பணம் வந்தது என்றால்.........!'

'இதுதான் என் சம்பாத்திய ரகசியம். என் கடைகள், எனக்குப் பங்குள்ள கடைகளும் கோவிலையடுத்துப் பல ஊர்களிலும் இன்னும் நடைபெறுகின்றன. இப்படி நன்மையை அடைந்து கொள்—என்று முருகன் ஸ்ரீலஸ்ரீ மடாதிபதிகள் உருவில் வந்து என் பாசத்தையும் பந்தத்தையும் அறுத்தான்; என்னையும் என் குடும்பத்தையும் உய்வித்தான்.'

'அப்படியானால் எல்லாம் முருகன் அருள் என்பதைவிடச் சிவத்தோடு அரியும் சேர்வதால் 'ஈசன் அருள்' என்றுதான் சொல்லவேண்டும்.'

'எப்படியானாலும் சொல்லுங்கள். இந்த விபரம் அறிய ஆசைப்பட்டதால் உங்களுக்கு ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன். ஸ்ரீலஸ்ரீ............ மடத்துச் சுவாமிகள் திவ்ய திருமுகத்திற்கு அடியேன் சார்பாக இன்றுள்ள கிருபா கடாக்ஷத்திற்கு வழிவிட்ட பெருமைக்காக ஒரு லிகிதம் எழுதித்தர வேண்டும்.'

'என்ன எழுத?'

'மடத்திற்குச் சொந்தமான முருகன் கோவிலுக்குக் கோபுரம் பழுது பார்த்தும் செப்பனிட்டும் கும்பாபிஷேகம் செய்ய நான் அறுபதினாயிரம் ரூபாய் தருவதாகவும், அவசியம் மடாதிபதி அவர்களே முன்வந்து நடத்தித் தரவேண்டுமென்றும் எழுதித் தரவேண்டும். இதுவே என் முக்கிய லட்சியம். இத்திருமுகத்தை எழுதித் தாருங்கள் இன்று'

'ஏன் நீங்களே திருமுகம் எழுதி விடலாமே'

'அப்படி எழுதப் படிக்கத் தெரிந்தால் நான் உண்டியல் குடத்தருகே இருக்க அல்லவா நேரும். எழுதப் படிக்கத் தெரியாத காரணத்தினால் அல்லவா இத்தனை பணத்திற்கும் குடும்ப சௌகர்யத்திற்கும் வழி பிறந்தது' என்றவர் சிரித்தார்.

சிவகுருநாதப்பிள்ளை சிரித்தபோது வெள்ளிய பல்வரிசையின் வாள் வீச்சு திரிபுரத்தை எரித்த சிவபெருமான் நெற்றிக் கண்ணில் இருந்ததோ என்னவோ?


TRADE MARK

டன்லப்

வெகுகாலம்

உழைக்கும்




DCK-6-TM




# நீரோட்டம்

தி. சேஷாத்திரி

## மனது ஆட்டம் கண்டது

கடிகாரம் நிசப்தமான இரவை ஒன்றிரண்டாய் அடித்து நொறுக்க முயன்றது. சூரியன் வரும்வரை இரவைக் காக்க ஏற்றுக்கொண்டவன் போல் சந்திரன் மேலே நின்று தன் வெளிச்சத்தை மங்காமல் ஏற்றி வைத்து இருள் அண்டா வண்ணம் காத்துக்கொண்டான். இரவும் இருளையே எண்ணியவள் போல் வெளுத்து இருந்தாள் பிறகு செவ்வனே கழிந்த காலத்தை எண்ணி, தான் அறியாத்தனமாகக் கலங்கியதற்காக வெட்கப்பட்டவள்போல் முகம் சிவந்தாள்.

கடிகாரம் ஐந்தடித்தது. ரெங்கநாதன் வழக்கம்போல் எழுந்திருந்தான். எழுந்ததும் ஒரு மணி நேரம் படிப்பது அவன் வழக்கம்.

முதல்நாள் வாங்கிவந்த 'கலையரசி' மாதப் பத்திரிகை மேஜைமேல் கிடந்தது. அன்று அவன் மனம் அழுத்தமான விஷயங்களை வாசிக்க விரும்பவில்லை. ஆகவே கலையரசியைப் பிரித்துவைத்துக் கொண்டான்.

கலையரசி கதையரசியாக ஆகிவிட்டாள் என்று எண்ணினான். கலையரசி ஆசிரியர், 'ஏன் கதைகளை அறிவுள்ள மக்கள் வெறுக்கவேண்டும்' என்று நொந்துகொண்டு கதைத்தொகுதிக்கு முகவுரையாக எழுதிய கட்டுரை ஒன்று ஞாபகம் வந்தது. கதை வேண்டியதுதான். ஆனால் அதற்கும் ஒரு எல்லை வேண்டாமா?

அதுவும் வாழ்க்கைக்கு ஒரு குறிக்கோள் தராத காதல்கதைகள் தானா உலகில் மலியவேண்டும்? 'கலையரசி'கூட அதன் வேட்டைக்குத் தப்பமுடியவில்லையே! அது ஆரம்பித்தபோது இருந்த நிலை என்ன இன்று நிலை என்ன?

மிகச் சிறந்த பழங்கொள்கை எல்லாம் பறந்துவிட்டன. உடல் சேர்க்கைக்காக மணம் அல்ல என்ற எண்ணம் மனிதர்கள் மனதைவிட்டு அகன்றுவிட்டது. குழந்தைக்கும் கலியாணத்துக்கும் உள்ள சம்பந்தம் வேறுவிதமாகத் திரித்துக் கொடுக்கப்படுகிறது. குழந்தைகள் வேண்டாம் என்ற காலத்தில்கூடக் காதல் கதைகள் மாறுகின்றனவே? அதுவும் எப்பேர்ப்பட்ட காதல்? பார்த்தவுடன் ஏற்படும், அன்புக்கு மற்ற எல்லாக்கட்டுப்பாடுகளையும் உதறும் காதல்! ஆண் பெண் உறவு தெரியாமல் கூடிப்பழகி, சிநேகிதி என்று பெண்டாள முயலும் காதல்! அதை இயற்கை என்று வருணித்து ஏற்படும் தடங்கல்களைத் தகர்க்க வேண்டும் என்று மேடைமீதேறிப்பேசும் காதல்! பெண்களே அதற்கு அடி கோலித்தரும் காதல்! இது எப்படி இருக்கமுடியும்? காமம் தவிர வேறு ஒன்றுமில்லை. காதல் என்றால், தெய்விகக் காதல் என்றால் கட்டுப்பாடுகளினிடையேயும் அல்லவா மலர வேண்டும்? அநியாயம் செய்ய முற்படும் காதல் காதலா, காமமா? உனக்கு மணமானால் என்ன, நீ இதற்கு முன் உன் கணவனைக்காதலித்திருந்தால் என்ன! இன்று நீ என்னை விரும்புகிறாய் அல்லவா, உன் கணவனிடம் இல்லாத ஒன்றை என்னிடம் பார்க்கிறாய் அல்லவா, பிறகு என்ன? என்று வாதம் புரிவது அரக்கக்காதலா, தெய்வீகக்காதலா? ரெங்கநாதனுக்குத் தலையை வலித்தது புஸ்தகத்தை மூடினான்.

சிக்கல்கள் எழுகின்றனவாம்! எழுகின்ற இடத்தில் எழக்காணோம். இருட்டில் திருட்டுத்தனமாகப்பெண்ணைச் சந்திக்கப் போகுமவன் மனதில் சிக்கல்கள் எழுந்தால் அவன் போவானா? போகிறபின் எழும் சிக்கல்களுக்குக் காதலாசிரியர்கள் காரணம் சொல்கிறார்கள்! அதை இயற்கைக்கு ஒத்ததாகக்காட்டி அதற்கு எதிர் நிற்கும் கொள்கைகளின் மேல் படை எடுக்கிறார்கள்?

ரெங்கநாதன் அந்த எண்ணங்களை உதறி எறிந்தான்.

பிறகு காந்தி அவர்கள் எழுதிய "கீதா போத்" என்ற புத்தகத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்தான். அது காந்தி எழுதிய கீதையின் சாரம். வாழ்க்கையில் அவர் அனுஷ்டித்தபடி கீதையின் அர்த்தம் சொல்லப்பட்டிருக்கிறபடியில் யார் படித்தாலும் அவர்கள் மனதை ஆகர்ஷிக்கும்.

அதுவும் ரெங்கநாதன் மனது அதில் லயிக்கிறதற்குக் கேட்பானேன்?

மணி ஆறடித்தது. அதற்குள் வழக்கமாய் எழுந்திருப்பார்கள் அவன் தாயார். உயர்ந்த மெலிந்த இனிமையான நடுக்கமில்லாத குரலில் அவர்கள் சொல்லும் பக்திரஸப் பாடல்களும் சுலோகங்களும் காதில் கேட்கும். இவனும் சென்று சுவாமி படத்துக்கெதிரில் அமர்வான். இன்று அந்தச் சத்தத்தைக் காணோம்.

ரெங்கநாதன் மனம் திடுக்கிட்டது. எழுந்திருந்து பூஜையறைக்குச் சென்றான். அங்கே தாயார் வந்த அடையாளத்தையே காணோம்.

நேரே தாயார் படுத்திருந்த அறைக்குச் சென்றான். அங்கே பார்வதியம்மாள் படுத்திருந்தார்கள்.

'அம்மா?' என்று கூப்பிட்டான் ரெங்கநாதன்.

'வா, அப்பா.' என்று சொல்லிக்கொண்டே அவர்கள் எழுந்திருக்க முயன்றார்கள். எழுந்ததும் 'ஒரேயடியாகத் தலை சுற்றி வருகிறது!' என்று சொல்லி மீண்டும் படுத்துக்கொள்ளவே ரெங்கநாதன் அருகில் சென்று உட்கார்ந்துகொண்டான்.

'அம்மா, எழுந்திருக்கவேண்டாம். உடம்பு எப்படி இருக்கிறது?'

'உடம்பு ஒன்றுமில்லை. கொஞ்சம் தலையைச் சுற்றுகிறது. அவ்வளவுதான்.' என்று சொல்லிவிட்டு மிகவும் பிரயாசைப்பட்டு எழுந்து பார்வதியம்மாள் கொல்லைப்புறம் செல்ல ஆரம்பித்தார்கள்.

ரெங்கநாதன் கண்டுகொண்டான். மன வலிவால் தாயார் நடக்கிறார்களே தவிர உடல் வலிவு இல்லை.

ரெங்கநாதன் உள்ளத்தைத் தாயைப் பற்றிய எண்ணங்கள் கௌவிக்கொண்டன.

கொல்லையில் சென்று பார்த்தபோது பார்வதி அம்மாள் கிணற்று மேடையைப் பிடித்துக்கொண்டு நின்றார்கள். ரெங்கநாதனைக் கண்டதும் நகர ஆரம்பித்தார்கள்.

ரெங்கநாதன் குரல் தழுதழுக்க, 'அம்மா வேண்டாம். படுத்துக்கொள்ளுங்கள். நான் எல்லாம் செய்கிறேன்' என்றான்.

தாயார் திரும்பி அவனைப் பார்த்து, 'நீ கவலைப்படாதே அப்பா. கொஞ்சம் இப்படித்தான் இருக்கும், பிறகு சரியாய்விடும். நீ போய் உன் காரியத்தைப் பார்' என்றார்கள்.

ரெங்கநாதனுக்குத் தாயாரின் பிடிவாதம் தெரியும். தன் அளவில் யுக்தம் என்று நினைத்ததை அனுஷ்டிக்கத்தான் செய்வார்கள்.

வயதான காலத்தில் பூரண ஏகாதசி விரதம் வேண்டாம் என்றால் நிறுத்தினார்களா அவர்கள்? ஜ்வரம் வந்து பதினெட்டுநாள் கிடந்த போது மருந்து சாப்பிடமுடியாதென்று தீர்மானமாகச் சொல்லிவிட்டு, கடவுள் நாமாவளியைச் சொல்லிக்கொண்டே சௌகரியமடைந்தார்கள்.

ரெங்கநாதன் அசையாமல் நின்று, நினைவு தெரிந்த நாள் முதலாய்த் தாயார் செய்த சேவைகளை எண்ணிப் பார்ப்பதைத் தவிர வேறு வழியில்லை.

அந்த ஒரே ஒரு தடவையைத் தவிர பார்வதி அம்மாள் தலைவலி என்றுகூடப் படுத்ததில்லை. மற்ற இரண்டு பிள்ளைகளும் மூன்று பெண்கள் இருந்தும் கூட அவர்கள் ஏனோ ரெங்கநாதனிடம் மட்டும் தனி வாஞ்சை கொண்டிருந்தார்கள். மற்றப் பையன்கள் அழைத்தும் அவர்களிடம் போக மறுத்து விட்டார்கள். ரெங்கநாதன் வாசிக்கச் சென்ற பொழுது அவர்களும் கூடச் சென்று இருந்து சமைத்துப் போட்டார்கள். மற்றப்பிள்ளைகள் காலேஜில் வாசிக்கவில்லை. வாசித்திருந்தாலும் அவர்கள் இவ்விதம் செய்திருப்பார்களா என்பது சந்தேகந்தான்.

இப்பொழுதும் மற்றக் குழந்தைகளின் குழந்தைகளை அழைத்து வரலாமே! அதுவும் முடியாதென்று சொல்லிவிட்டார்கள். அவர்கள் வந்தால் ரெங்கநாதனைக் கவனிப்பதில் குறைபாடு ஏற்பட்டு விடுமாம்.

மற்றப் பிள்ளைகளும் பெண்களும் எவ்வளவோ குறைப்பட்டார்கள். நாட்டுப்பெண்கள் நல்லதுதான் என்றிருந்தால்கூடப் பெண்களுக்கு வருத்தம்தான்.

"ரெங்கநாதனுக்கு ஒரு வீட்டுக்காரி வரட்டும் அப்புறம் தெரியும் என்பார்கள் அவர்கள். வந்தால்தானே என்பான் ரெங்கநாதன். தாயார் அவனை அடக்கி 'அசடே அப்படிச் சொல்லாதே. வந்தால் என்ன? அவளுக்கும் சேர்த்து, செய்துவிட்டுப் போகிறேன்!' என்பார்கள்.

ஏன் அவனிடம் இந்தத் தனியன்பு?

காரணம் என்ன சொல்லமுடியும்? மற்றவர்களிடம் வெறுப்பா என்ன? ரெங்கநாதன் அன்று முதல் பூஞ்சை. வேறு இடத்துச் சாப்பாடு ஒத்துக்கொள்ளாது. அவன் சுபாவமும் விசித்திரமானது. உபசாரம் செய்கிற வீடு தவிர அவன் அன்று முதல் எங்கேயும் சாப்பிடமாட்டான். அப்பொழுதும் தாயார் கூட இருக்கவேண்டும். அவனுக்கு வேறு யாரும் செய்யமுடியாதப்பா! என்பார்கள்.

அம்மா நீ செத்துவிட்டால் என்பான் முதற்பிள்ளை.

பிறகு என் கண்ணால் பார்ப்பேனா? என்பார்கள்.

ரெங்கநாதன் எண்ணி எண்ணிப் பார்த்தான். தான் அவர்களிடம் நடந்துகொண்ட விதம் ஞாபகம் வந்தது. எவ்வளவு தடவை அவன் அவர்களை மனம் புண்ணாகச் செய்திருக்கிறான்.

முதலில் அவன் அவர்களைப் பழையகாலக் கட்டுப்பெட்டி என்று எண்ணினான்.

அதனால் அவர்கள் ஏதாவது சொன்னால் அவன் பரிகாசம் செய்வான். அதுவும் இவனுடைய நண்பன் எதிரில் அவர்கள் சொல்லிவிட்டார்களோ அவ்வளவுதான், 'போங்கள் அம்மா, உன் வேலையைப்பார்த்துக்கொண்டு!' என்பான்.

வர வர, தாயாரின் குணங்களை அறிந்துகொண்டான் ரெங்கநாதன். அவர்களுடைய பெருந்தன்மையை அவன் கண்டுகொண்டான். பிடிவாதமாக நம்பும் விஷயங்களில்கூடப் பிறர் செய்யும் தப்பிதங்களுக்காக அவர்கள் பிறரை வெறுப்பதில்லை, 'ஆமாம் அப்பா, நான் இவ்விதம் எண்ணுகிறேன். அது எனக்குச்சரி அவர்கள் அப்படி எண்ணினால் அது அவர்களுக்குச் சரி. தப்பிதம் என்று சொல்ல நாம் யார்? எல்லாம் காலமும் கடவுளும்தான் அதற்கு அதிகாரிகள்' என்பார்கள்.

எப்படியோ கஷ்டப்பட்டு, சிரமம் வெளியே தெரியாமல் பார்வதி அம்மாள் சமைத்து விட்டார்கள்.

ரெங்கநாதன் சாப்பிட்டுவிட்டுச் சட்டையை மாட்டிக்கொண்டு கிளம்பும் சமயம் தாயாரைப் பார்த்தான்.

கண்கள் குழிக்குள் சென்றிருந்தன. ஒட்டியிருந்த கன்னங்கள் உலர்ந்திருந்தன. நேற்று இரவு அவர்கள் தூங்கி இருக்க முடியாது என்று அவன் நிச்சயித்தான்.

இது எதில் கொண்டு போய் விடுமோ என்று ஆடிவிட்டான் ரெங்கநாதன்.

"அம்மா, உங்களைப்பார்க்கவே முடியவில்லையே. எல்லோருக்கும் லெட்டர் எழுதட்டுமா?' என்றான்.

"ஏதுக்கப்பா? எனக்குத்திடீர் என்று என்ன வந்து விட்டது? மாய்யாருக்குச்செய்து போட்டோம் என்று ஒருத்தியும் பெருமையடித்துக் கொள்ள வேண்டாம்!" என்றார்கள்.

ரெங்கநாதன் கிளம்பிவிட்டான். எப்படியும் தந்தி அடித்து விட வேண்டியதுதான் என்று தீர்மானத்துடன் வெளியே வந்த அவன் தாயில்லாமல் தனியாகி விட்டால் வாழ்க்கை எப்படி இருக்கும்? என்று எண்ண ஆரம்பித்தான். அவனுக்குத் தலை சுற்றிற்று.

அன்று பள்ளிக்கூடத்தில் அவனுக்கு வேலை ஓடவே யில்லை.

அன்று இரவு தாயார் எழுந்திருக்கவேயில்லை.

ரெங்கநாதன் அவர்கள் செய்து வைத்திருந்ததை எடுத்துச் சாப்பிட்டுவிட்டு மீதியை மூடிவைத்தான்.

அப்பொழுதும் தாயார் காலையில் சரியாகி விடவேண்டும் என்றார்களே தவிர இயற்கையின் பலத்தை ஒப்புக் கொள்ளத் தயாராயில்லை.

படுக்கப் போகுமுன் சுமார் பத்து மணிக்குத் தம்மிடம் வந்த ரெங்கநாதனிடம் "அப்பா இனிமேல் ஏமாற்றுவதில் பயனில்லை. நான் நாளைக் காலையில் எழுந்திருப்பது சந்தேகம்." என்றார் தாயார்.

"அம்மா!" என்று அழுது விட்டான் ரெங்கநாதன். "எட்டு மணி வரையில்கூடத் திடமாயிருந்தீர்களே! என்று அழுதான்.

'ஆமாம் அப்பா, இப்பொழுதுதான் மனது பிடி விட்டுவிட்டது. என்னென்னவோ தோற்றங்கள் காணப்படுகின்றன.........'

'முன்னாலேயே சொன்னால் நான் அண்ணா அக்காவை எல்லாம் வரவழைத்திருப்பேனே!'

'அதனால் என்ன? எனக்கு அதெல்லாம் ஒரு குறையாகத் தோன்றவில்லை..........!

'அவர்கள்.........?'

'அவர்களும் ஒன்றும் சொல்லமாட்டார்கள். எந்தப் பெருங் கவலையுமே காலக்ரமத்தில் மாறிவிடும். நான் செத்தால் உடனே என்ன நஷ்டம் அவர்களுக்கு?......... அது போகட்டும்; நீ இங்கேயே வந்து படுத்துக்கொள்.'

ரெங்கநாதன் அங்கேயே படுத்துக்கொண்டான். அசதி தூக்கம் தூக்கமாய் வந்தது. தானாகவே தூங்கித் தூங்கிப் பலதடவை விழித்துக்கொண்டான். விழித்தபோதெல்லாம் தாயாருடன் பேசுவான். தாயார் அவனை எழுப்பவில்லை.

பல விஷயங்களைப்பற்றித் தன் எண்ணங்களையெல்லாம் வெளியிட்டார் தாயார். தம் நாட்டுப் பெண்களுடைய குணங்களை எல்லாம் சொன்னார்கள். தூரத்துப் பச்சை கண்களுக்குக் குளிர்ச்சி என்றபடி அன்பு மாறாமலிருக்கத்தான் தாம் அவர்களை நெருங்குவதில்லை என்றார்கள். ஒரு நாட்டுப் பெண்ணுக்குச் செய்தால் மற்றொருத்திக்கு வருத்தம். ஒரு பெண்ணுக்கு உழைத்தால் மற்றொரு பெண்ணுக்குக் கஷ்டம். ஏன் அதெல்லாம்? என்றெல்லாம் சொன்னார்கள்.

ஆனால் ஒன்றை மட்டும் சொல்லவில்லை.

கேட்கவும் கேட்டான் ரெங்கநாதன்.

'என்னைப்பற்றி ஒன்றும் குறையில்லையா?'

'என்ன குறை? உன் குணத்துக்கு உன்னிடம் குறை என்ன எனக்கு?'

'நான் உங்களை வைதிருக்கிறேனே!'

'அடித்துக்கூட இருக்கிறாய்! அசடே, அது குழந்தையல்லவா?'

'நீங்கள் சொல்லியும் நான்.........'

'எனக்கு ஒரு புது நாட்டுப் பெண் கொண்டுவரவில்லையே என்று கேட்கிறாயா?' அசடே, உன் வாழ்க்கையை நானா வாழப் போகிறேன்? எங்கள் நாளில் நாங்கள் அப்படி நினைத்தோம். கிருஹஸ்தனாவது பெரிய தர்மம் என்றார்கள் பெரியவர்கள. பெண்ணொருத்தியை மனைவியாக்கிக் கொள்ளாமல் இருந்தால் பையன்கள் கெட்டுவிடுவார்கள் என்ற பயமே கலியாணத்திற்கு எங்கள் நாளில் அவசரப்பட்டார்கள். உன்னைத்தான் நானும் பார்க்கிறேனே. நீ இரண்டும் அவசியமான ஒரு தர்மம் அல்ல, என்பதை நிரூபித்து வருகிறாயே. தவிர.........'

'என்ன தவிர.........?'

'சாகும் காலத்தில் ஏதாவது சொல்லி உன் வாழ்க்கையைக் கட்டுப்படுத்துவதில் என்ன லாபம்? நீ எவ்வளவோ உபகாரமாகவேண்டியவன்; உலகத்துக்கு உன்னால் நன்மை இருக்கிறது. நான் அப்படிச் செய்யலாமா?'

ரெங்கநாதன் அப்படியே தண்ணீராகிவிட்டான். ஒரு மனிதத் தாய் பேசுகிறாளா அல்லது ஒரு தேவதையா?

'அம்மா. சொல்லுங்கள்; நீங்கள் அதற்கெல்லாம் பயப்படவேண்டாம். ஒன்றும் எண்ண வேண்டாம். இஷ்டமிருந்தால் சொல்லிவிடுங்கள். நான் செய்கிறேனென்று சபதம் செய்து தருகிறேன்.........'

'போடா அசடு. என் சுயநலம் சம்பாதிக்கச் சமயம் இருந்தா நான் ஒருகால் சொல்லுவேனோ என்னவோ? இன்றுதான் நான் என் கடமையைத் தெள்ளத் தெளியப்பார்க்கிறேன். எனக்குக் குறை இல்லை. ஒரு குறையும் இல்லை. உன்னிடம் நம்பிக்கையுண்டு. நீ கவலைப்படாதே; சுகமா இரு. நீ யோசித்துச் செய்வதெல்லாம் சரியாகத்தான் இருக்கும்.........'

என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே பேச்சுக் குழறிற்று.

ராமா ராமா! என்று சொல்லியது அவர்கள் வாய். கைகள் சிரசின்மேல் குவிந்தன.

'அதோ வந்துவிட்டார் அவர்' என்றார்கள். ரெங்கநாதன் எழுந்து தாயின் தலையை மடியின் மேல் தாங்கினான். லைட்டைப் பெரிதுசெய்தான்.

தாய் மகனைப் பார்த்துப் புன்னகை பூத்தார்கள் என்ன பெருமிதம் அவர்கள் முகத்தில்! கிடைக்குமா இந்தச் சாவு! தலை மகன் மடியில்; உள்ளம் ராமபிரான அடியில்.

விடியற்காலம் ஊர் திரண்டுவந்தது. பிள்ளைகள் பெண்கள், பேரன், பேத்திகள் எல்லோரும் காலை ரெயிலிலேயே வந்து சேர்ந்தனர்.

## தாய் தேடும் வரன்

மூன்று வருஷங்கள், ஆறு தடவை இண்டர் மீடியேட் பரீக்ஷையில் தவறிவிட்டான் நடராஜன். அவன் தந்தை சாமானிய சொத்துள்ளவர்; கிராமத்தில் பத்து ஏக்கர் நஞ்சையும் ஆறு ஏக்கர் புஞ்சையும் ஒரு தட்டு வீடும் கொஞ்சம் ரொக்கமும் கிடைத்தது அவருக்குத் தந்தையிடமிருந்து. பிறகு தம் தங்கைக்குக் கலியாணம் செய்து வைத்ததில் பணம் கரைந்து விட்டது. நல்லவேளையாக ஒரே பிள்ளையானதால் கொஞ்சம் கவுரவமாகக் காலம் தள்ளி வந்தார்.

நடராஜனைக் காலேஜுக்கு அனுப்பியது மிகவும் தொந்தரவாகி விட்டது. படிப்பதைவிடத் தந்தையிடமிருந்து பணம் பெறுவது எப்படி? அதைச்செலவழிப்பது எப்படி என்ற வித்தையை நன்றாகக் கற்று வந்தான்.

ஒரே பிள்ளையாயிற்றே என்று செங்கமலத்தண்ணிக்கு அவனிடம் அளவு கடந்த அன்பு. அந்த ஆதரவைத் தனக்கு லாபமாக உபயோகப்படுத்துவதற்கு நடராஜன் நன்கு கற்றுக்கொண்டிருந்தான்.

பட்டணத்திலிருந்து வரும் கடிதம் பணத்துக்குத்தான் வரும் என்று தெரியும். துரையப்பா



முதலியாருக்கு, 'படித்தான் போ" என்பார் கடிதத்தை விசிறிக்கொண்டே. படித்துத்தான் பாருங்களேன் என்பாள் அண்ணி.

கடிதம் ஆரம்பத்திலேயே, அப்பாவுக்கும் அண்ணிக்கும் அனந்த கோடி நமஸ்காரங்கள் என்று ஆரம்பமாகியிருக்கும். அண்ணிக்கு அப்படியே உடல்பூரித்து விடும். முடிவு வரை வாசிக்கச் சொல்வாள். முடிவில் அண்ணி கொஞ்சம் உடல் நலமில்லாதவர்களாயிருப்பதால் அவர்கள் ஞாபகமாகவே இருக்கிறது என்று முடிந்திருக்கும். இந்தக் குழந்தையா கெட்டு விட்டது என்கிறீர்கள்? என்று அதட்டிவிட்டு உடனே பணத்தை அனுப்பி விட்டு மறுவேலை பாருங்கள் என்று சொல்லி விடுவாள். பிறகு என்ன?

இரண்டு தடவை தேருமல் வந்தவுடனே படிப்பை நிறுத்தி விடலாம் என்ருர் துரையப்பா. செங்கமலமும் 'சரிதான். நல்லதுதான் எப்படியோ சந்திராவைவிட அதிகம் படித்து விட்டான். தேருமல் போனுல் என்ன? இனி வீடும் குடித்தனமுமாக ஆக்கிவிட்டால் போதும்.' என்ருள். அது சந்திரா நிச்சயமாக S. S. L. C. யுடன் நின்று விட்டாள் என்று தெரிந்ததும் தீர்மானமாகவே ஆயிற்று. ஆனுல் பையன் ஒத்துக்கொள்ளவே யில்லை. படிப்பதற்கென்று மதராஸ் ட்யூடோரியல் ஹோமில் சேர்ந்து அவன் மதராஸில் இஷ்டப்படி சுகவாழ்வு வாழ ஆசைப்படும்போது அவன் எப்படி ஒத்துக் கொள்வான்?

இந்தத் தடவை பரீக்ஷை முடிந்து எட்டு நாளாகிவிட்டது என்று கடிதம் மூலம் தெரிந்தது துரையப்பாவுக்கு. 'இன்னம் ஏன் வரவில்லை. பரீக்ஷை எழுதின கழுதை வீட்டைப்பார்க்க ஓடி வர வேண்டியதுதானே!' என்ருர் அவர்.

'தானே வருகிருன். அவனுக்கு என்னிடம் ஆசை. உடனே வந்துவிடுவான்.' என்ருள் அண்ணி.

வரக்காணேம்; இடையே ஒரு கடிதம் வந்தது.

'ஊரில் சும்மா உட்கார்ந்திருக்க முடியாது. ஆதலால் ஒரு வேலை தேடிக்கொண்டிருக்கிறேன். நம் அத்தை புருஷனுக்குத் தெரிந்த ஒருவர் வேலை வாங்கித் தருவதாகச் சொல்லியிருக்கிருர். உடனே ஒரு ஐம்பது ரூபாய் அனுப்பிவையுங்கள்' என்று எழுதியிருந்தது.

அவர் பணத்தை அனுப்பி 'நீ வேலை பார்க்க வேண்டாம். அண்ணி தவிக்கிருர்கள் உன்னைப் பார்க்க. உடனே வா!' என்றுஎழுதினுர்.

தனயன் வரவில்லை.

நேரில் பார்க்கத்தான் அவர் மதராஸ் சென்றிருந்தார். அங்கே மகன் குறிப்பிட்ட விலாசத்தில் இல்லை.

தொலையட்டும் என்று வெறுத்து வந்தவர் வெகுநாளாகப் பார்க்காத தங்கை வீட்டுக்கு வந்திருந்தார். அங்கே சந்திராவின் குணத்தையும் அவள் முகத்தில் பிரதிபலிக்கும் தம் தாயின் தோற்றத்தையும் கண்டு, 'அம்மா. நான் சந்திராவை இரண்டு நாள் அழைத்துப்போய்க் கொண்டு வைத்துக்கொள்கிறேன்' என்று கேட்டார். தங்கையும் சம்மதிக்கவே சந்திராவும் உறவு கொண்டாட மாமனுடன் கிளம்பிவிட்டாள்.

ஊருக்கு வந்ததும் ஒரு கடிதம் காத்துக்கொண்டிருந்தது.

வந்தவுடனேயே அண்ணி சண்டைக்கு வந்து விட்டாள். நான் தான் போகவேண்டாம் என்றேனே! என்ருரம்பித்தவள் பின்னுல் வரும் சந்திராவைக் கண்டவுடன் அப்படியே அதை அடக்கிக்கொண்டு.

'அட உங்களுக்குக்கூட இது தோன்றிற்று! வாடா கண்ணு!' என்று வரவேற்ருள் வந்தவளை.

அதற்காக அவர்கள் சண்டை நிற்கவில்லை. சாப்பாடு எல்லாம் முடிந்ததும் தம்பி என்ன கடிதம் எழுதியிருக்கிருன் என்று கேட்டாள் அண்ணி.

துரையப்பாவுக்கு அண்ணி போட்டிருந்த திட்டத்தில் அவ்வளவு அக்கரையில்லையான படியால் சந்திரா இருக்கும்போது அந்த விஷயத்தைச் சொல்லக்கூடாது என்று எண்ணவில்லை.

"போதுமே உன்பிள்ளை அழகு!" என்ருர் அவர். எதிர் எதிரான இரண்டு வேலைகளில் ஈடுபட்டனர் கணவனும் மனைவியும்.

'அதென்ன அப்படிச் சொல்கிறீர்கள்? குழந்தையிடம் அவ்வளவு பொறுப்பில்லாமல் பேசுகிறீர்களே!'

"பேசாமல் இரேன். சந்திரா இருக்கிருள். பிறகு பேசிக்கொள்ளலாம்."

'அப்படி என்ன நம் பிள்ளை உதவாக்கரையா?'

'நம்' என்ன? என் பிள்ளை என்றே சொல்லிக் கொள்."

"ஆமாம் நீங்கள் பேசுகிறது உங்களுக்கே நன்ருயிருக்கிறதா?"

"இல்லை நீயும் உன் பிள்ளையும் செய்வது நன்ருய் இருக்கிறது; நான் சொல்வது மட்டும் நன்ருயில்லை."

"சொல்லத்தான் சொல்லுங்களேன்."

தினசரித்தொல்லையான அழுக்கிலுள்ள
கிருமிகளிலிருந்து உங்கள் ஆரோக்கியத்தைக்
காப்பாற்றிக்கொள்ளுங்கள்...



லைப்பாயின்

பாதுகாக்கும் நுரையினால்!

நீங்கள் எவ்வளவு ஜாக்கிரதையாயிருந்தாலுங்கூட, தினசரித்தொல்லையான அழுக்கிலுள்ள கிருமிகளின் அபாயத்துக்குள்ளாக நேரிடும். லைப்பாய் சோப் உபயோகித்துத் தவருமல் ஸ்னநம் செய்து உங்கள் ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். லைப்பாய் சோப்பின் பாதுகாக்கும் நுரை அழுக்கிலிருக்கும் கிருமிகளை விரட்டுகிறது, உங்களை நாள்முழுவதும் புத்துணர்ச்சியுடன் இருக்கச் செய்கிறது.






லைப்பாய் சோப்

தினசரித்தொல்லையான கிருமிகளிலிருந்து தினமும் உங்களைக்காப்பாற்றுகிறது

L, 230-50 TM

'எழுதியிருக்கிருன், உடனே இரு நூறு ரூபாய் பணம் வேண்டுமாம், யார் யாருக்கோ கொடுக்கவேண்டுமாம்.'

'ஐயையோ! அதற்காக, இவ்வளவு கோபித்துக் கொள்ளுகிறீர்களே? உடனேயே கொடுத்து விட்டு வரக்கூடாதோ?"

"அவனை அங்கே யார் பார்த்தார்கள்?"

'பின் எங்கேயாம்?'

'அங்கு அவன் அறைக்குப் பக்கத்து அறையிலிருந்தவர்கள் எங்கேயோ பத்துப் பேராகச் சேர்ந்து எக்ஸ்கர்ஷன் போய்விட்டான் என்று சொன்னுர்கள். இங்கு என்னடா என்ருல் கடிதம் வேறு ஒரு விலாசத்திலிருந்து வந்திருக்கிறது.'

'இது என்னடீ கூத்து?'

'கூத்தா? அவன் அங்கே செய்திருப்பதெல்லாம் சொன்னுல்.........'

'இன்னம் என்ன செய்தான்?'

'நான் போயிருந்த சமயம் ரிக்ஷாவில் ஒரு பெண் வந்து இறங்கினுள்.........'

'அவனுடன் காலேஜில் படிக்கிறவளாயிருக்கும்.........!'

'ஆமாம்; அவனுடைய உபாத்தியாயர் ஒரு நடிகையாம். அவனிடம் பணம் வாங்கிக்கொண்டு அவள்தான் அவனுக்குச் சொல்லிக்கொடுக்கிருள்.........!!'

சந்திரா, 'மாமா எனக்குத் தூக்கம் வருகிறது; போய்ப் படுத்துக்கொள்ளட்டுமா' என்ருள்.

உடனேயே செங்கமலம் உள்ளே சென்று மெத்தென்றிருந்த ஒரு பட்டுக் கோரைப்பாயை விரித்தாள்; தலையணைகளை எடுத்துக் கொடுத்தாள்.

'சந்திராவுக்கு இப்படித் தரையில் படுத்துக் கூடப் பழக்கம் இராதென்ருர்.' மாமா.

'ஆமாம், அதற்காக என்ன செய்கிறது? எல்லாம் பழகித்தானே ஆகவேண்டும். அதுவும் பெண்கள் தந்தைவீட்டுச் சுகத்தையே பிறர் வீட்டிலும் எதிர்பார்க்க முடியுமா' என்ருள்.

'இல்லை மாமா, எனக்கு இந்தப் பழக்கம் உண்டு.' என்ருள் சந்திரா.

சந்திரா மாமாவும் அவர் மனைவியும் நடராஜன் குணத்தையும் செய்கையையும்பற்றிச் சண்டையிடுவதையும் கேட்டுக்கொண்டே தூங்கிவிட்டாள்.

தூங்குமுன் நடராஜனுடைய குணவிசேஷம் ஒருவாறு புரிந்துவிட்டது. இந்தப் பிள்ளைக்குத் தன்னை முடிபோட முயற்சி செய்கிருளே பெண்ணுய்ப் பிறந்த ஒருத்தி என்று சிரித்துக்கொண்டாள்.

## கரும்புக்கும் நாணலுக்கும் போட்டியா

மறுநாள் எழுந்ததும் எழுந்திராததுமாகச் சந்திரா தன் மாமியே காப்பியுடன் வருவதைப் பார்த்தாள்.

எழுந்து, "மாமி நான் இப்படி காபி சாப்பிட்டுப் பழகியதில்லை. பல் தேய்த்துக் குளிக்காமல் நான் சாப்பிட்டதில்லை"

'சரி, அப்படியானுல் வா, வென்னீர் இருக்கிறது குளிக்கிருயா? என்ருள் மாமி.

'இல்லை மாமி, ஆற்றில் போய் அலற ஸ்நாநம் செய்யவேண்டும் அசதி தீர, என்ருள்.

"சரி வா, நானும் வருகிறேன்."

இருவரும் ஆற்றங்கரைக்குச் சென்றனர். அங்கே சந்திரா நீந்த ஆரம்பித்தாள்.

மாமி பயந்தாள். பிறகு அவள் துணிவைக் கண்டு அவளிடம் "நம் நடராஜன் இருக்கிருனே அவன் நல்ல வெள்ளத்தில் ஆற்றைத் தாண்டி அக்கரை போய் இக்கரை வந்து விடுவான்!" என்ருள்.

ஸ்நானம் செய்த பிறகு வந்தனர். சந்திரா சாதாரணமான ஒரு பாவாடையைக் கட்டிக்கொண்டு ஒரு நூல் சிற்ருடையை மேலே தரித்துக்கொண்டாள். உடனே உள்ளே சென்று தனியேயமர்ந்து கடவுள் தியானம் செய்து குங்குமப் பொட்டை அணிந்து கொண்டாள்.

இதைப் பார்த்த அவள் மாமாவுக்கு இந்தப் பெண்ணையா நாம் நம் நடராஜனுக்குக் ஏற்றக் கொள்வது என்று தோன்றிற்று. மாமியோ தன் நாட்டுப்பெண் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டாள்.

அன்று மாலை மாமியே சந்திராவுக்குத் தலை வாரிப் பின்னிவிட்டாள்.

பின்னும்போதே "சந்திரா, கழுத்து தாலி கொண்டுவா கொண்டுவா என்று கேட்கிறது!" என்ருள் மாமி.

"ஆமாம் அப்பாவே அப்படித்தான் சொல்கிருர்!" என்ருள் சந்திரா: "ஆனுல் நல்ல வரன் வேண்டுமே!" என்று தேடுகிருர்.

'அப்படியா? எதற்கு வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலையவேண்டும்? ஏன் அம்மா உனக்கு நடராஜனைப் பிடிக்கிறதோ?'

'யார்? உங்கள் பிள்ளையையா? நான் அவரை நன்ருய்ப் பார்த்ததுகூட இல்லையே!'

'ஏன் போனவருஷம் லீவுக்குக்கூட அங்கே வந்திருந்தானே!'

'வந்திருந்தார். ஆனல் அவருக்கு வீட்டில் தங்க ஏது நேரம்!'

'ஆமாம், அவனுக்கு வீடு என்ருல் பிடிக்காது. ரொம்ப மரியாதையான பிள்ளை. சிலபேர் பெண்டுகள் என்ருல் மொச்சு மொச்சென்று பேசுகிருர்களே, அவனுக்கு அதெல்லாம் பிடிக்காது. பெண்டுகள் என்ருல் அந்த இடத்தில் இருக்கக்கூடச் சங்கோஜப்படுவான்!'

சந்திரா ஒன்றும் பதில் சொல்லவில்லை.

மாமி சொன்னுள்: 'உனக்கு இஷ்டம்தானே சொல்!'

'சந்திரா, எனக்கு என்ன மாமி? அப்பா இருக்கிருர், மாமா இருக்கிருர். எல்லோரும் பார்த்துச் சொன்னுல் செய்துகொள்ள வேண்டியதுதான். பதில்பேச முடியுமா?'

செங்கமலத்துக்குச் சந்தோஷம் தாங்கவே இல்லை, காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு. நடராஜனுக்குக் கொடுக்கக் கசக்கிறதோ என்று எண்ணிவிட்டாள் அவள்.

அன்று மாலை மீண்டும் தன் கணவனிடம் இந்தப் பேச்சைப் பிரஸ்தாபித்தாள் செங்கமலம். துரையப்பாவுக்குத் தன் பிள்ளைமேல் கோபம்.

'இருநூற்றைம்பது ரூபாய் பணம் எதற்கு? எங்கிருந்து அனுப்புவது?'

'ஆமாம். பணத்துடன் சாகுங்கள். சந்திராவைக் கலியாணம் செய்துவைத்தால் எல்லாம் சரியாகப் போய்விடும்,!'

'இந்தா, இந்தப் பேச்சை மீண்டும் பேசாதே. நம் நெருப்பு என்ருல் சுடாதோ? நடராஜன் சந்திராவை வைத்து வாழவிடமாட்டான்.'

அண்ணிக்குக் கோபம் தாளாமல் வந்தது. கோபம் புகைந்து ஆவியாகிக் குளிர்ந்து கண்ணீராய் மாறிற்று.

"உங்களுக்கு என் பிள்ளையைத் திட்டாது போனு போது போகாது.........! என்று அழ ஆரம்பித்தாள்.

துரையப்பா வெடுக்கென்று கிளம்பிவிட்டார்.

அதே சமயம் சந்திரா அந்த ஆற்றங்கரைக்குப் போகும் வழியில் உள்ள கடைசி வீட்டில் இருந்தாள். அழகான மாலை நேரத்தில் ஆற்றின் அழகைக்காண வந்தவளை அந்த வீட்டுப்பாட்டி கூப்பிட்டிருந்தாள்.

"வா அம்மா, நீ முதலியார் மருமகளா?' என்ருள். மருமகள் என்பது சகோதரியின் மகளையும். பையன் மனைவியையும் குறிக்கும்.

'இல்லை, நான் அவர் தங்கை பெண் என்ருள்.

'அதுதானம்மா கேட்டேன், சரி, எனக்கு ஒரு உதவி செய்வாயா?'

"என்ன செய்ய வேண்டும்."

"நீ நல்ல பெண்ணுயிருக்கிருய். என் பிள்ளை பேருக்கு ஒரு கடிதம் வந்தது. அவன் ஊருக்குப் போயிருக்கிருன்? பார்த்துக் கொஞ்சம் வாசித்துச் சொல்லேன். அவன் வர நாளாகும்."

"சரி அம்மா, பிறர் கடிதம் வாசிக்கலாமா?"

"அவனே சொல்லி விட்டுப் போயிருக்கிருன், நீ தாராளமாய் வாசி"

அவள் அதைப் பிரித்து எடுத்தாள். நடராஜனே மதராஸிலிருந்து எழுதியிருந்தான். கடிதம் அபத்தமான ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்தது.



வாசிக்க வாசிக்கச் சந்திராவின் ரத்தம் கொதித்தது. இந்த அழகுப்பிள்ளைக்குக் கலியாணம் வேறு!

அவன் எழுதியிருந்தான்:

நான் நேற்று ஒரு வேலை செய்திருந்தேன். பத்து மணிக்கு நடிகை சகுந்தலாவை அறைக்கு வரச்சொல்லியிருந்தேன். அவளுக்குத் தருகிறேன் என்ற பணம் வேறு வழியில் செலவாகிவிட்டது. அதனால் நான் அவள் வரும் சமயம் வேறே எங்கேயோ போய்விட்டேன். அந்தச் சமயம் என் தகப்பனார் வந்திருந்தாராம். அவரிடத்தில் எதிர்த்த அறைக்காரர் நான் ஊருக்கு எக்ஸ்கர்ஷன் போய்விட்டதாகச் சொன்னாராம். இது நடிகைக்குச் சொல்லவேண்டிய பதில்.

அதுவும் நல்லதாய்ப் போயிற்று. நீ என் தந்தையைப் பார். அவருக்கு இருநூற்றைம்பது ரூபாய் வேண்டும் என்று எழுதியிருக்கிறேன். அவரிடம் கேட்டு நீயே வாங்கி வா. நீ என்னுடன் எக்ஸ்கர்ஷனில் ஏதாவது ஊரில் சந்திப்பதாகச்சொல். மணியார்டர் செய்தால் எனக்குச் சேராது என்று சொல். திரும்பி வரும்போது கண்டிப்பாக என்னையும் அழைத்து வருகிறேன் என்று சொல்லிவிடு.

அப்பா அசையவில்லையானால் அம்மாவிடம் மந்திரப் பிரயோகம் செய். அவள் தந்துவிடுவாள்.

நீ வாங்கிக்கொண்டுவா. இங்கே எல்லாவற்றிற்கும் நல்ல ஏற்பாடு செய்திருக்கிறேன். நல்ல உயர்ந்த ரகச் சரக்குகள் எல்லாம் தாராளமாகக் கிடைக்கின்றன!'

நல்லவேளை. அவன் நண்பன் இந்த லெட்டர் கிடைப்பதற்கு முதல்நாளே கிளம்பிவிட்டான்.

'என்னடீ அம்மா எழுதியிருக்கிறது?' என்றாள் பாட்டி, சந்திரா விழித்துக்கொண்டாள்.

சிரித்துக்கொண்டே, இது உங்கள் பெண்வீட்டுக் கடிதம் இல்லை அவர் நண்பர் ஒருவர் எழுதியிருக்கிறார். பட்டணம் வந்தால் அவசியம் வீட்டுக்கு வா என்று எழுதியிருக்கிறார்' என்றாள்.

'இந்த லெட்டரை அவனுக்கே திருப்பி அனுப்பிவிடலாமா?'

'அனுப்பிவிடுங்கள்......'

'நீதான் செய்யேன். இந்தா இரண்டணா! எனக்கென்ன எழுதத் தெரிகிறதா ஒண்ணா?'

சந்திரா ஒரு நியாயவிரோதமான காரியம் செய்யும் துணிவுடன் வெளியே வந்தாள்.

எதிரே மாமா வந்துகொண்டிருந்தார்.

'எங்கேயம்மா சந்திரா இங்கே வந்தாய்?'

"ஆற்றங்கரைப் பக்கம் வந்தேன். பாட்டி கூப்பிட்டார்கள்"

சரி வா வயலுக்குப் போகிறேன்; வயல் சுற்றி விட்டு வரலாம்!

சந்திரா குதி போட்டுக்கொண்டு கிளம்பினாள்.

வழுக்கும் வரப்புகளிலும் சேறு சறுக்கும் கழனிக் கரைகளிலும் நடந்து, புதையும் சேறு கொண்ட வாய்க்கால்களைத் தாண்டுவதில் அவள் ஒரு தனி இன்பம் அடைந்தாள்.

அன்று அவள் நிலம், மண், உரம், நெல் வகை பற்றிய பல தகவல்களைத் தெரிந்துகொண்டாள்.

அவள் உள்ளத்தில் எழுந்திருந்த சூடும் குளிர்ந்தது. அவர்கள் அன்று திரும்பி வரும் பொழுது மணி எழு.

அன்று இரவு படுக்கும் போது சந்திரா கணவனுக்கும் மனைவிக்கும் எவ்வளவு வேற்றுமை என்று எண்ணிக் கொண்டாள்.

அன்று மாமா திடமாகச், 'சந்திரா! நீ மாமி சொல்வதைப் பற்றிக் கவலைப்படாதே. நானும், உன் தந்தையும் இதற்கு ஒத்துக் கொள்ள மட்டோம்!' என்று சொல்லியிருந்தார்.

"பாபம் மாமி!" என்று சொல்லிக் கொண்டாள் சந்திரா!

## உடல் உழைப்பு அவசியம்

மறுநாள் காலையில் எழுந்திருந்த துரையப்பா முதலியார் 'அம்மா சந்திரா, சந்திரா' என்று கூப்பிட்டார்.

சந்திரா பதில் சொல்லவில்லை. தூங்குகிறாளா என்னவோ என்று எண்ணி அவர் எதிரே உள்ள கொல்லைப்பக்கம் சென்றார்.

முதல்நாள் இரவு நல்ல மழை. கொல்லையில் ஊன்றியிருந்த செடிகள் பாத்திகளில் தண்ணீர் தங்கியிருக்கப் போகிறதே என்று எண்ணி அவர் அங்கே சென்றார். அங்கே சென்றதும் அவர் திடுக்கிட்டார் இருட்டுப் பிரியாத அந்த மங்கிய காலைவேளையில் அங்கே ஒரு பெண்ணுருவம் பாத்திகளில் குனிந்து ஏதோ செய்துகொண்டிருந்தது.

யாரது, நடவாளா!

அவள் ஏன் வருகிறாள் அப்பொழுது? பின் யார், செங்கமலமா?

பைத்தியமா அவளுக்கு?

பின் யார்?

அவர் திடுக்கிட்டார்.

சந்திராவா?

ஆம், சந்திராவேதான், சேலையைவரிந்து கட்டிக்கொண்டு பாத்தி நீரை வெட்டி வெளியேற்றிக்கொண்டிருந்தாள்.

என்ன அதிசயம்?

'சந்திரா இதென்னம்மா? மாமாவுக்குக் கெட்ட பெயர் சம்பாதித்துக் கொடுக்கவா?'

அவள் நாணமடைந்தாள்.

'இதனால் உங்களுக்கு என்ன கெட்ட பெயர் வந்துவிடும்?'

'என்ன அம்மா அப்படிச் சொல்கிறாய்? நேற்று மழை பெய்தது. இன்று இவ்வளவு காலையில் எழுந்திருந்து வந்தால், ஒரு ஜுரம் வந்தால்?...'

வாசலில் பேச்சுக்குரல் கேட்டுச் செங்கமலமும் வாசலில் வந்தாள்.

'பார்த்தாயாடி சந்திராவை' என்றார் துரையப்பா: "என்ன அதிசயம்? மூன்று நாளாகத் தான் காலையிலும் மாலையிலும் தோட்ட வேலை செய்கிறாளே!" என்றாள் அவள். ஒரே கேள்வி கேட்கத் தோன்றிற்று துரையப்பாவுக்கு.

"டவுனில் இருக்கும் செல்லப் பெண் உனக்கு இந்தப் பழக்கம் எல்லாம் யாரம்மா சொல்லி வைத்தது!"

'எங்கள் உபாத்தியாயர்!,, என்றாள் சந்திரா வாய் மறந்து.

பிறகு ரெங்கநாதனைப் பற்றி முற்றிலும் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

'உடலுழைப்பு அவசியம், ஆணும் செய்ய வேண்டும், பெண்ணும் செய்ய வேண்டும் என்று அவர் தான் சொன்னார். அவரும் தினம் செய்கிறார்' என்றாள்.

அன்று முழுவதும் ஒவ்வொரு விஷயத்திலும் ரெங்கநாதன் பேச்சு வந்து கொண்டிருந்தது.

"மாமா, நாளைக் காலை வயலில் உழுது பார்க்கப் போகிறேன்!" என்றாள்.

"போதுமடி அம்மா! வேண்டாம் வேண்டாம். அப்பா சும்மா விட்டாலும் அம்மா என்னை லேசில் விடமாட்டாள்."

"முடியாது மாமா. எனக்கு எல்லா வேலையும் தெரிய வேண்டும். எங்கள் உபாத்தியாயர் சொல்வார்: உபாத்தியாயர் என்றாலும் நடவு நடக் கூடத் தெரிய வேண்டும் என்று. அவர் நடுவாராம்! நாம் குடியானவர் குழந்தைகள், நமக்குக் கண்டிப்பாய்த் தெரியவேண்டும்......!"



"அது சரி, உழவு சாதாரண வேலையில்லை. அதுவும் காய்ந்து காய்ந்து நனைந்த பூமி. கஷ்டமாயிருக்கும். நீ இப்படிப் பிடிவாதம் செய்தால் நான் உன்னை இரண்டு நாள் முன்னேயே ஊருக்கு அனுப்பி விடுவேன்........."

பேச்சு சந்திரா எவ்வளவு நாள் இருப்பாள் என்ற பேச்சில் மாறிற்று.

'தீபாவளிக்கு இங்கேயே இருக்கட்டும்!' என்றாள் மாமி.

'எங்கேயாவது அப்பா வைப்பாரா?'

'இல்லை அதற்குள் நடராஜன் வந்து விடுவான்!'

'நடராஜன் வந்தால் என்ன? சந்திரா இங்கே இருப்பது எனக்கும் பிரியம்தான். நானே நம்முடைய நெசவாளியிடம் இவளுக்குத் தனியாக ஒரு சிற்றாடை நெய்யச் சொல்லியிருக்கிறேன். நாளை, மறுநாள் வந்துவிடும். ஆனால் நான் எப்படிப் பிடிவாதம் செய்யமுடியும்?'

'மாமா தீபாவளிதான் இன்னம் பதினெட்டு நாள் இருக்கிறதே. பார்த்துக்கொள்ளலாம். நாளைக்கு எனக்கு உழச் சொல்லித் தருகிறீர்களா?' என்று கேட்டாள்,

மாமா 'சரி பார்க்கலாம்!' என்று சொல்லித் தட்டிவிட்டார்.

மாலையில் சுந்தரேசன் வந்துவிட்டான். அவன் வந்தபோது சந்திரா மொட்டை வண்டியை ஓட்டிக்கொண்டிருந்தாள். அதில் நாற்றுக் கட்டுகள் இருந்தன. சுமார் இரண்டு மைல் ரோட்டு வழியில் போகவேண்டியிருந்ததனால் மாட்டு வண்டியில் ஏற்றியிருந்தார்கள். முரட்டு மாடுகள் பூட்டிய அந்த வண்டியைச் சந்திராச் பழக்கமானவள்போல், சகதியும் சேறும் நிறைந்த கிராம ரோட்டின்மேல் ஓட்டினாள்.

சுந்தரேசன் வந்தவுடன்' 'மாமா சந்திராவை அழைத்து வரச்சொன்னார் அப்பா.' என்றான்.

'சரிதான். நாளை ஞாயிற்றுக்கிழமை; நாளை சாயந்திரம் வண்டியில் போகலாம்!' என்றார் மாமா.

சந்திராவையும் சுந்தரேசனையும் மாமாவே ரெயில் ஏற்றிவிட்டு வந்தார் பதினைந்தே வயது ஆனாலும் சுந்தரேசன் நன்கு வளர்ந்து தாட்டியாயிருந்தான். ஆகவே துரையப்பா பயப்படாமல் அனுப்பினார்.

சந்திரா மாமியின் அன்பை எண்ணி உருகினாள். அடிக்கடி அவளிடம் சொல்லிக்கொண்டாள். மாமாவிடம் தீபாவளிக்கு நடராஜனை அனுப்பச் சொன்னாள்.

நெய்துவந்த சிற்றாடையையும் எடுத்துக் கொண்டு அவள் ரெங்கநாதனை மீண்டும் பார்க்கலாம் என்று ஆசையுடன் ரெயில் ஏறினாள்.

ரெயில் சரியாக வந்து சரியாகக் கிளம்பிற்று. கொஞ்ச தூரம் போனதும்,

'அக்கா, ரெங்கநாத சார் அம்மா செத்துவிட்டார்கள்!' என்றான்.

'ஆகா! என்ற சந்திராவிடம் தம்பி கதை முழுவதையும் சொன்னான்.

இன்று எவ்வளவு நாள்?

'நாளைக்குப் பத்து'

'ஏன் எனக்கு முன்னமேயே சொல்லவில்லை.?

சுந்தரேசன் சிரித்தான்.

அன்று இரவு முழுவதும் சந்திரா தலை சாய்க்கவே இல்லை. கண்ணைக்கொட்டவேயில்லை.

இடமில்லாத குற்றமோ, பயந்த காரணமோ இல்லை. அவள் கொந்தளிக்கும் மனது அவளை நிம்மதியாய்ப் படுக்கவிடவில்லை. (தொடரும்)


## காவேரி சந்தா விகிதம்

| | இலங்கை, பர்மா & உள்நாடு | | | மலேயா முதலிய வெளிநாடுகளுக்கு | | |
|---|---|---|---|---|---|---|
| | ரு. | அ. | பை. | ரு. | அ. | பை. |
| ஒரு வருஷம் | 6 | 0 | 0 | 7 | 8 | 0 |
| அரை வருஷம் | 3 | 0 | 0 | 3 | 12 | 0 |
| தனிப் பிரதி | 0 | 8 | 0 | 0 | 10 | 0 |

ஏஜன்ஸி இல்லாத இடங்களில் டிபாசிட் கட்டி நாணயமும் பொறுப்புமுள்ள ஏஜண்டுகள் தேவை.


Edited & Published by N. R. Ramanujam & Printed by S. Ramaswami
at the Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

KUMARA PUBLIC LIBR



# நாளுக்கு நாள் அதிக தெளிவான, எழிலோங்கும் சருமம்

ரெக்ஸோனுவிலுள்ள **கேடில்** இந்த அற்புத வேலையைச் செய்யட்டும்

தினமும் ரெக்ஸோனு சோப் உபயோகியுங்கள். இதன் கேடில் கலந்த நுரை உங்கள் சருமத்தை நாளுக்கு நாள் அதிக மிருதுவாகவும், தெளிவாகவும் இருக்கச் செய்யும்.




## ரெக்ஸோனு

## கேடில்* கலந்த சோப் இது ஒன்றே

* சருமத்திற்கு ஊட்டமளித்து மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர்.

RP. 109-50 TM ரெக்ஸோனு ப்ரோப்ரைட்டரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது




The Cauveri Colour Press, Kumbakonam.